Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

ஆக. 10 - 16, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 674



## மாவிலாறு விவகாரம் மக்களுக்குத் தோல்வி

## தொடரும் தாக்குதல்கள் நீடிக்கும் அபாயம்!



## அரபு தேசங்களில் அதிகரிக்கும் அச்சுறுத்தல்கள்





## ஐஸ்வர்யாவின் சுயசரிதை

## அங்கணா நீதியா சொல்?

# ஆன்மீகம்



தமிழ் இனத்தின் தொன்மையோடு பின்னிப் பிணைந்த சிவ வழிபாடு, மதத்தை அடிப்படையாகக் கொண்டது மட்டுமல்லாமல், அவர்களின் கலை, கலாசாரத்திலும் வேரூன்றி நிற்பதுதான் ஏனைய வைகளை விட சிறப்பான அம்சம் எனக் கூறுவது மிகை அன்று. பொதுவாக கலாசார சடங்கு களிலும், வைபவங்களிலும் சிவ வழிபாடானது பின்னிப் பிணைந்திருப்பதுடன் இல்லறத்தின் நெறி களை வலியுறுத்தி நிற்கின்றது. உதாரணமாகக் கூறின், தமிழர் பண்பாட்டின் இல்லறக் கட்டுப்பாடானது வரை முறை தவறிப்போவதை ஏற்றுக்கொள்ள நாயன்மார்கள் கூடச் சம்மதிக்கவில்லை என்பதனை "கங்கையைச் சடைமேல் வைத்துக் கௌரியைப் பாகம் வைத்தங் கணா நீதியா சொல்" என்று சிவனையே கேள்வி கேட்டதிலிருந்து தமிழர் பண்பாடு எவ்வளவு தூரம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படைதானே?

-என். எஸ். ராஜா, தம்பலகமம்.

## செய்நன்றி மறவாதே!

அகில புவனங்களையும் ஆறு நாட்களில் படைத்து ஏழாம் நாள் இளைப்பாறினார் கர்த்தர் என்று வேதம் சொல்கிறது. எதை எப்படி அமைக்க வேண்டும் என்று தேவனே சிந்தித்துச் செயல்பட்டிருக்கிறார். அவரது அபூர்வப் படைப்புக்கு நிகர் எதுவுமில்லை. இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டு எல்லாமே சீராக நடைபெறுவதால்தான் மண்ணில் மனிதகுலம் தழைத்து வாழ்கிறது.

ஆனால், மனிதனிடம்தான் எத்தனை வேறுபாடுகள், குரோதங்கள் விரோதங்கள். ஆளை ஆள் விழுங்கத் துடிக்கிறான். தான் மட்டும் வாழவேண்டும் என்ற நோக்கில் மற்றவனையே அழிக்க முற்படுகிறான். செய்த நன்றியை மறக்கிறான். நன்றி செய்தவனையே கேவலப்படுத்த முனைகிறான் - தீட்டிய கல்லில் பதம் பார்ப்பது போல. இப்படி நன்றி கெட்டவர்கள் நம்மில் பலர்.

"அயலானையும் உன்னைப் போல் நேசி" என்ற கோட்பாட்டை மறந்ததுதான் இதற்கெல்லாம் காரணம். "மனிதன் நினைக்கிறான் யாவும் நடக்குமென்று, இறைவன் நினைக்கிறார், பாவம் மனிதன் என்று". "பிறர் கண்ணில் உள்ள தூசியை அகற்றுமுன் உன் கண்ணில் உள்ள தூசியை அகற்று" என்பது நமது வேத வாக்கு. உன் முதுகு உனக்குத் தெரிவதில்லை. முதலில் உன் குறைகளை - கறைகளை - அகற்று. ஆண்டவராகிய நம் தேவன் ஆறுதல் தருவார்.

-எம். ஏ. எஸ். சண்முகம், வத்தளை

## மரணம்!

"எதிரிகளால் சாகடிக்கப்படாமல் ஷஹீத் ஆகும் உயிர், தியாகப் பதவியைப் பெற முடியுமா?" என்று ஆயிஷா நாயகி (ரலி) நபி (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். "அன்றாடம் இருபது முறை மரணத்தை நினைப்பவன் அந்தப் பதவியை அடைவான்" என்று நபி (ஸல்) பதில் கூறினார்கள். மரணத்தை மிதமாக நினைவில் கொள்ளுங்கள், இது பாவங்களைக் குறைத்து ஆசாபாசங்களை ஒழித்துக்கட்டும்.


-நூல் : இஹ்யா.

உலக ஆசை உள்ளத்தை ஆட்டிக்கொண்டிருக்கும்போது, ஒரு மனிதனின் ஆவி உடலை விட்டுப் பிரியுமானால் அவன் நிலை கவலைக்குரியதாகும். இவன், தான் வாழ்ந்த நிலையை மனதில் எண்ணிக் கொண்டே மரணமடைகின்றான்.

-இமாம் கஸ்ஸாலி (ரஹ்).

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 7

## கவிதைப் போட்டி இல.671



பரிசுக்குரிய கவிதை

### ஏமாற்று

காட்டு தாத்தா
காட்டு
உனக்கு உங்க
தாத்தா காட்டினார்
எனக்கு நீ
காட்டுகிறாய்
பாட்டி நிலவைக்
காட்டுகிறார்
நீ பாசாங்கு காட்டுகிறாய்
இந்த ஏமாற்று
என் காலத்தோடு
முடியட்டும்.

–எம். கேஷிகன்
கண்டி.

# கவிதைப் போட்டி இல.674



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.08.2006.

கவிதைப் போட்டி இல.674
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### யதார்த்தம்

வயோதிபமாகி
நான் குழந்தை
வயதுக்கு வராமல்
நீ குழந்தை
இடை நடுவில்
வாழ்க்கை
இன்பமும் துன்பமுமாய்
இந்த உண்மை
புரியாதோ
இவ்வுலகத்தாருக்கு!

–பி.முதிஷன்,
கஹட்டகஸ்திகிலிய.

### எட்டாக் கனி

கைக்கெட்டியது
வாய்க்கெட்டவில்லை
என்பார்கள்
இங்கோ சமாதானம்
எட்டிப் பிடிக்கும்
தூரமென்றார்கள்!
இன்று அது எட்டாக்
கனியாகிவிட்டது?

-கே.திவ்வியா,
மருதானை.

### இதையாவது கொடு!

தண்ணீர் கேட்ட சண்டையானது
எல்லைச் சண்டையானது
உரிமை கேட்ட சண்டை
உயிர்குடிக்கும் யுத்தமானது
நான் மட்டும் துண்டுத்
துணியைத் தானே கேட்கிறேன்
அதையாவது கொடு தாத்தா!

–சுரேஸ்,
தோணிக்கல்.

### வேண்டுதல்...!

இத்தனை காலமும்
காட்டிக் காட்டிப்
பறித்தது போதாதா!?
இனிமேலேனும்
ஏமாற்றாமல் தந்து
விடுங்கள்!
சமாதானக் கனியை...!!

–அனீஸா.அல்.ஆஸாத்,
ஏறாவூர் – 06.

### ஆசி

என் வயிறு நிரம்பாவிட்டாலும்
உன் வயிறு நிரம்பட்டும்
என் காலத்தில் வராத சமாதானம்
உன் காலத்திலாவது மலரட்டும்.

–அ.சந்தியாகோ,
கண்டி.

### தொலையாத தொல்லை

அன்று;
உயிருக்கு அச்சமில்லை!
உடலிலோ தெம்பு கொள்ளை!
உண்மைக்கு உழைப்பு பிள்ளை!
உருவாக்கிய இன்பம் கொள்ளை!
இன்று;
எல்லையில்லா போரினாலே
எல்லாமே தொலைந்து போக
பிள்ளை (குழந்தை)க்கும்
தொல்லை கொள்ளை!
பெரியவர்க்கும் இருக்கு
தொல்லை!

–நா.ஜெயபாலன்,
பிபிலை.







# உங்கள் பக்கம்

## ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலய குறைபாடுகள் எப்போது நீங்கும்?

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக ஆசிரியர்களும், மாணவர்களும் கவலை தெரிவித்துள்ளனர். சுமார் 1,800 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் 28 ஆசிரியர்கள் கல்விப் போதிக்கின்றார்கள். கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின்படி 1,800 மாணவர்களுக்கு 78 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 28 ஆசிரியர்கள் பெரும் தியாக மனப்பான்மையோடு கல்விப் போதிக்கின்றார்கள்.

அத்தோடு இப்பாடசாலையில் பௌதீக வளப் பற்றாக்குறை அதிகமாக இருகின்றது. மாணவர்கள் கல்வி கற்பதற்குப் போதிய கதிரைகள், மேசைகள் ஆசிரியர்களுக்கான கதிரை, மேசைகள் என்பனவற்றோடு, நிரந்தர அதிபர் காரியாலயம் ஒன்று இல்லாதது பெரும் வேதனையைத் தருகிறது. தற்போது வகுப்பறை ஒன்றே அதிபர் காரியாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் இப்பாடசாலையில் கட்டிடப் பற்றாக்குறையுமுள்ளது. மாணவர்கள் மரத்தின் கீழே இருந்து கல்வியைக் கற்கின்றார்கள். க.பொ.த.உயர்தர 2ஆம் வருட மாணவர்கள் ஓலைக் கொட்டில் ஒன்றினை வகுப்பறையாகப், பயன்படுத்துகின்றனர். இங்கு நீர், மலசல வசதி என்பன இல்லாது மாணவர்கள் அவதிப்படுகின்றார்கள். விஞ்ஞான ஆய்வு கூடம், கணனி அறை, விளையாட்டு உபகரணம், நூல்நிலையம், ஆசிரியர் விடுதி, ஆசிரியர்கள் ஓய்வெடுக்கும் அறை என்பன போன்ற பல்வேறு பௌதீக வளப் பற்றாக்குறைகள் இப்பாடசாலையில் நிலவுகின்றன.

எனவே, உடனடியாக ஆசிரியர்களை நியமித்து பாடசாலைக்குத் தேவையான கட்டிட, மற்றம் பௌதீக வளப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளைப் பொதுமக்களும், மாணவர்களும் கோருகின்றனர்.

– முல்லை றஸீஹா,
முந்தல்


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

### அனைத்தும் உனக்குள்...

வையகத்தில் வாழ்வாங்கு
வாழ்ந்துகொண்டிருக்கும்
தினமுரசே! நீ இன்னும்
நீடூழி வாழ வேண்டும்
எக்ஸ்ரே ரிப்போர்ட், அதிரடி ஐயாத்துரை,
காதிலபூ கந்தசாமி, தேன்
கிண்ணம், லேடீஸ் ஸ்பெஷல்,
ஆன்மீகம்,
வாசகர் பகுதி, பாப்பா முரசு
என பட்டியலில் தொடர்களாய்
நீ தொடர்கின்றாய். இன்னும்
பல சாதனைகள் படைத்து
மென்மேலும் நீ உயர வேண்டும்
என்று நாங்கள்
உன்னை வாழ்த்துகின்றோம்.

எம்.பாரூக் யோகா,
மட்டக்களப்பு.

### காத்திருக்கிறேன்!

தெவிட்டாத சுவையான
அம்சங்களைச் சுமந்து
வாரம் ஒரு முறை
வரவு தவறாமல் என்
வாசல் தேடி வந்திடும்
வாரமலர் தினமுரசே!
உனக்கு என் பலகோடி வந்தனம்....

உனது ஒவ்வொரு பக்கமும்
உணர்ச்சி பூர்வமானது.
உன்னைப் பார்த்தால்
எனக்கு எல்லையில்லா
ஆனந்தம். எப்பக்கம்
புரட்டினாலும் எனக்குப்
பிடித்த அம்சங்களே உண்டு...

ஐ.முகைதீன்,
கல்முனை.

### முத்தான முரசிற்கு!

மூலை முடுக்கெங்கும் முடிந்து வைத்த செய்திகளை தித்திக்கும் தமிழ் மொழியில் திருத்தமாய் தருகின்றவன் நீ மட்டும்தான். உங்கள் பக்கத்தில் எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றாய். பாப்பா முரசு பொது அறிவில் தெரியாத பல துணுக்குகளைத் தெரிந்துகொள்ளச் செய்கிறாய். குறுக்கெழுத்தில் அறிவுக்கு தீனி போடுகிறாய். ஆரூடங்களிலும் அசத்திச் செல்கிறாய். சூடு - சுவை, சுவாரஸ்யம் அதுதான் தினமுரசு. இது உனக்குப் பொருத்தமோ பொருத்தம்!

எஸ்.பி.குமார்,
ஹட்டன்

### அதிரடியான முரசு!


ஒவ்வொரு வாரமும் பக்கங்களுக்கு பக்கம் இனிமை சேர்த்து எம்மை மகிழ்ச்சிப் படுத்தும் இனிய முரசே! நீ...சுமந்து வந்த இதழ் 671 சுவைபட இருந்தது. நரன், மதியூகி தரும் அரசியல் விடயங்கள் மிக அருமை.அதிரடி அய்யாத்துரையும் மிக அதிரடியாய் கலக்குகிறார். தகவல் பெட்டி தந்த நான் பூனையல்ல விடயம் சுவாரஸ்யமாக இருந்தது. மேலும் பட்டாம் பூச்சி பற்றிய தொடர் அருமை.

நுஹா"முஸம்மில், கட்டார்.

# மூதூரில் பழிக்குப் பழி வாங்கும் படலம் தொடர்கிறதா?

## ஜனாஸாக்களைக் காணவில்லை; கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் தொண்டர்களின் சடலங்கள் அழுகி நாற்றம்

திருமலை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூர் மீது புலிகள் நடத்திய தாக்குதலும் பதில் தாக்குதலும் ஓரளவு தணிந்து விட்டாலும் இன்னமும் மழை விட்டும் தூவானம் போகாத நிலையே தொடர்ந்தும் நிலவுவதாக 'அக்ஷன் கொண்ட்ரே லா பாம்' என்ற பட்டினிக்கெதிரான பிரான்ஸிய தன்னார்வத் தொண்டர் நிறுவனத்தின் பெண் பேச்சாளர் ஒருவர் கூறினார். மாவிலாறு அணைக்கட்டு நீர் விநியோகத்தைத் தடுத்த புலிகள், அதன் தொடர்ச்சியாக மூதூர் மீது நடத்திய தாக்குதல்களில் அகதியாகப் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருந்த முப்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டதோடு, எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர். கண்மூடித்தனமான இந்தத் தாக்குதல்கள் தொடர்ந்து வந்த அதேவேளை, படையினர் நடத்திய பதில் தாக்குதல்களாலும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அப்பேச்சாளர் மேலும் சொன்னார். பட்டினிக்கு எதிரான பிரான்ஸிய தொண்டர் நிறுவனத்தில் பணிபுரிந்த 17 தமிழ் ஊழியர்கள் மிலேச்சத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கடந்த நான்காம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை இத்தொண்டர் நிறுவன ஊழியர்களோடு செல்லிடத் தொலைபேசி மூலம் சிலர் உரையாடியதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் வெள்ளிக்கிழமை மாலை இவர்களில் சிலரைப் பலர் கண்டிருக்கின்றனரென்றும் தகவல் கிடைத்திருப்பதாக அப்பெண் பேச்சாளர் மேலும் சொன்னார். ஐந்து தமிழ் யுவதிகளும் பன்னிரண்டு தமிழ் பேசும் ஊழியர்களுமாக மொத்தம் பதினேழு பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். வெள்ளிக்கிழமை இரவு அல்லது சனிக்கிழமை காலை இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலானவர்களின் தலைகளிலேயே சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் முழங்காலில் இருக்கவைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாமென்று பரவலாகப் பேச்சு அடிபடுகிறது. இரண்டு அல்லது மூன்று தினங்களின் பின்னரே இவர்களின் சடலங்களை மீட்பதற்கான உதவிகள் பொலிஸ் தரப்பிலிருந்து கிடைத்திருக்கின்றன. சம்பந்தப்பட்ட தன்னார்வத் தொண்டர் ஸ்தாபனம் இந்த விவகாரத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்த பின்னர் ஐ.நா.சபை, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. இவர்களைப் படையினர் சுட்டுக் கொன்றதாகப் புலிகளும் புலிகள் சுட்டுக் கொன்றதாகப் படையினரும் பரபஸ்பரம் குற்றஞ் சாட்டுகின்றனர்.




தொண்டு நிறுவன ஊழியர்களின் சடலங்களை சக ஊழியர்கள் மீட்டுச் செல்லும் போது...

யார் இந்த மிலேச்சத்தனமான படுகொலைகளைப் புரிந்திருந்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் பெற்றுக் கொள்ள முடியும். சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உயர் மட்டத்தினரின் கவனத்துக்கு இந்த விவகாரத்தைக் கொண்டுவந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியதையடுத்தே சடலங்களை மீட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதற்கு வழி பிறந்திருக்கிறது. சடலங்கள் உப்பிப் பெருத்துப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் அப் பெண் பேச்சாளர் கூறினார்.

இதேபோன்று குழப்ப நிலை காரணமாக கிளிவெட்டியிலிருந்து தப்பிக் கந்தளாய்க்கு பஸ்ஸொன்றில் சென்று கொண்டிருந்த முப்பது தமிழ் மக்கள் கல்லாறு இராணுவ முகாமுக்கு அண்மையில் படையினரால் இறக்கப்பட்டனரென்றும் இவர்களுக்கு என்ன நடந்ததென்று இதுவரை தெரியவில்லையென்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இது தொடர்பாக அமெரிக்காவைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியரொருவர் இலங்கையிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தினதும் வேறு அதிகாரிகளினதும் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. புலிகளின் எறிகணைத் தாக்குதல்களாலும் ஏனைய தாக்குதல்களாலும் கொல்லப்பட்ட பல முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் இதுவரை உற்றார்,

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

### படுபாதகச் செயலுக்குப் பலியானவர்கள்

மூதூர், அக்கரைச்சேனையிலுள்ள பிரான்ஸ் தொண்டர் நிறுவனத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊழியர்களின் விபரங்கள் வருமாறு. ஐந்து பெண்களும் 12 ஆண்களும் கொல்லப்பட்டனர்.

1. றொமிலா சிவப்பிரகாசம்
2. தவிதா கணேஷ்
3. கோகிலவதனி வைரமுத்து
4. கோவர்த்தினி கனகரெட்ணம்
5. அம்பிகாவதி ஜெசீலன்
6. முத்துலிங்கம் நர்மதன்
7. ரிச்சட் அருள்ராஜ்
8. துரைராஜா பிரதீபன்
9. மோகனதாஸ் ரவிச்சந்திர ரிஷிகேஷன்
10. அப்துல் லத்தீப் முகமட் ஜவ்பர்
11. கங்காதரன் ஸ்ரீதரன்
12. சிங்கராசா பிறீமேஸ் ஆனந்த ராஜா
13. யோகராசா கோடீஸ்வரன்
14. மாதவராசா கேதீஷ்வரன்
15. செல்லையா கணேசு
16. தர்மரெட்ணம் முரளிதரன்
17. சக்திவேல் கோணேஸ்வரன்

## தமிழக கட்சிகள் மத்தியில் புதிய அரசியல் உதைபந்தாட்டம்

தமிழ்நாடு, கோயம்புத்தூரிலுள்ள மத்திய ரிசேர்வ் பொலிஸ் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்றுக் கொண்டிருந்த நாற்பது இலங்கைப் பொலிஸ் அதிகாரிகள் இடைநடுவில் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டமை தமிழக அரசியலில் இடம்பெறும் உதைப்பந்தாட்டத்தை எடுத்துக் காட்டுவதாக தமிழக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். தமிழக எதிர்க்கட்சியான செல்வி ஜெயலலிதாவின் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும், மத்தியில் காங்கிரஸ் ஆட்சியோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் வைகோவின் பாட்டாளி மக்கள் கட்சியும் மாநில சட்டசபையில் எழுப்பிய பிரச்சினைகளையடுத்தே கலைஞர் கருணாநிதி இலங்கைப் பொலிஸாரைத் திருப்பியனுப்பும் முடிவை எடுத்தாரென்று அவ் வட்டடாரங்கள் தெரிவித்தன. புலி இயக்க எதிர்ப்பாளராகத் தம்மைப் பிரமாண்டமாக காட்டிக் கொண்டவர் ஜெயலலிதா. புலி இயக்க ஆதரவாளராகத் தன்னைப் பெரிதும் காட்டிக் கொண்ட வைகோ, தமிழக மாநிலத் தேர்தலில் ஜெயலலிதாவின் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வோடு இணைந்து போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவியமைக் குறிப்பிடத்தக்கது. கலைஞர் கருணாநிதியை புலி இயக்க ஆதரவாளராக விமர்சித்துவந்த அ.இ.அ.தி.மு.க. இப்போது புலிகளுக்கு ஆதரவாகக் குரலெழுப்ப முன்வந்தமை தமிழக அரசியலில் நிலவும் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்தை எடுத்துக் காட்டுவதாக அவர்கள் தெரிவித்தனர். புலி இயக்கம் தொடர்பான மத்திய அரசின் கொள்கையே தமிழக மாநில அரசின் கொள்கையுமாகும் என்று கடந்த ஜூலையில் கூறிய கருணநிதி, எதிர்க்கட்சிகளின் அழுத் தத்துக்குச் சிறிது வளைந்து கொடுத்திருக் கிறாரென்றே கூற வேண்டும். ஆனால் கோயம்புத்தூரில் வழங்கப்பட்டது பொலிஸ் பயிற்சியேயொழிய இராணுவப் பயிற்சியல்லவென்றும் கருணாநிதி சமாளித்துக் கொண் டிருக்கிறார். மிஸோராம் போன்ற காட்டுப் பகுதிகளில் நடத்தப்படும் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சிக் கல்லூரிகளில் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியளிக்கப்படுவதாகவும் தகவல்கள் உள்ளன. மத்திய அரசு மசிந்து கொடுக்காதபோதிலும் மாநில அரசு விட்டுக் கொடுக்க வேண்டி வந்தமைக் குத் தமிழக அரசியல் உதைபந்தாட்டமே காரணமாகும் என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிவதாஸன் மீது குண்டுத் தாக்குதல்



பனை அபிவிருத்திச் சபையின் தலைவரும், முன்னாள் யாழ். மாவட்ட எம்.பியும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான எஸ். சிவதாஸனைக் குறிவைத்து (08.08.06) பம்பலப்பிட்டியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் மூவர் உயிரிழந்ததோடு 7 பேர் காயமடைந்துள்ளனர். சிவதாஸன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டாரென்று வைத்தியசாலைச் செய்திகள் தெரிவித்தன. வெடிகுண்டு இவரது வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கலாமென்று இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர். இக்குண்டு வெடிப்பின் போது அவர் பயணித்த வாகனம் தீப்பற்றி எரிந்துள்ளதுடன் தீச்சுவாலை சுமார் 15 அடி உயரத்துக்கு எழுநதுள்ளது.. சிவதாஸனின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் வாகனத்துக்குள்ளேயே உடல் கருகி மரணமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோதலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் மனிதாபிமானக் கோரிக்கை

'மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் மனிதாபிமானச் சட்டதிட்டங்களை மதித்து நடக்க வேண்டும். அது தொடர்பான தமது கடப்பாட்டினைப் பேணி அப்பாவிக் குடிமக்களின் பாதுகாப்பை இரு தரப்புகளும் உறுதிப்படுத்த வேண்டுமென்பதோடு மனிதாபிமான உதவிகளை மக்களுக்கு வழங்கவும் உதவ வேண்டும்" என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியின் தூதுகோஷ்டியின் தலைவரான ரூன் வன்டென்றோவ் கோரிக்கை விடுத்தார். அவசரகால நிவாரணப் பொருட்களோடு திருமலை, மூதூரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற செஞ்சிலுவை சங்கக் கமிட்டி, ஏனைய தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களோடு இணைந்து பணியாற்றி வருகிறது.

## கந்தளாய் முகாமில் இருவர் கடத்திக் கொலை

மூதூரிலிருந்து இடம்பெயர்ந்து கந்தளாய் அகதி முகாமில் தங்கியிருந்த முஸ்லிம் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

நிவாரணப் பணியாளர்கள் போன்று அகதி முகாமுக்குள் வந்த இரு நபர்களே இந்த இளைஞர்கள் இருவரையும் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்துல் காதர் நாஸர் (வயது 34), முஹம்மட் கஸ்ஸாலி (வயது 35) ஆகியோர் அவர்களது முகத்தில் அசிற் ஊற்றப்பட்ட நிலையில் வான்எல எனுமிடத்தில் சடலமாக மீட்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் மனைவி மூதூரில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோழைத்தனமான தாக்குதல் கருணா அணி கண்டனம்

மூதூரிலுள்ள முஸ்லிம் சகோதரர்கள் மீது கோழைத்தனமாக எல்.ரீ.ரீ.ஈ.யினர் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டிப்பதாக கருணா அணியின் பேச்சாளர் தூயவன் தெரிவித்தார். மூதூரிலுள்ள படையினர் மீது வேண்டுமென்றே பிரபா அணிக் குழுவினர் நடத்திய தாக்குதலில் 32க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனரென்றும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் தஞ்சம் தேடி தப்பியோடினரென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அகதி முகாம்களுக்குள்ளும் உளவாளிகள்!

மூதூரிலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 40 ஆயிரம் முஸ்லிம்கள் கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 14 அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றார்கள். தப்பியோடி வந்த இந்த மக்கள், அகதி முகாம்களில் அச்சத்துடனேயே வாழ வேண்டிய சூழ்நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் புலனாய்வாளர்கள் அகதி முகாம்களுக்குள் ஊடுருவியிருப்பதாக தெரிவிக்கப்பட்ட தகவலையடுத்தே இந்த அச்சநிலை தோன்றியுள்ளது. இதனையடுத்து சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோர், கவனிப் பாரற்றுக் கிடக்கும் வாகனங்கள் என்பவை பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது.

புலிகளுக்குச் சார்பாக கருத்துத் தெரிவித்த ஒருவர் பொதுமக்களால் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுக்கப்பட்டார்.

## மக்களைக் குறிவைத்து நடத்தும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் -ஈ.பீ.டி.பீ. கண்டனம்

மூதூர் மற்றும் தோப்பூர் ஆகிய பகுதிகளில் ஷெல் வீச்சில் பலியாகிய முஸ்லிம் சகோதரர்கள் மீதான படுகொலைகளை ஈ.பி.டி.பி. மிகுந்த வேதனையோடு கண்டிக்கிறது.

இரு தரப்பு மோதல்கள் காரணமாக, தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக தஞ்சம் தேடி ஓடி, அவசர மனிதாபிமான உதவியோ, உணவு வசதியோ இல்லாத நிலையிலும் உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு மக்கள் ஒதுங்கியிருந்த மூதூர் நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரி மற்றும் தோப்பூர் அல் நூரியா அரபுக் கல்லூரி மீதும் ஷெல் வீச்சை நடத்தியது மிலேச்சத்தனமானதாகும்.

இவ்விரு சம்பவங்களிலும் 28 பேர் பலியாகியும், 79 பேர் காயமடைந்துமுள்ளனர். இறந்தவர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதில் ஏற்பட்ட சிரமங்கள் ஒருபுறமிருக்க, காயப்பட்டவர்களுக்கான சிகிச்சை வசதிகள் கிடைப்பதில் அந்த மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கவலை தருவதாக உள்ளன. இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் சுமுக நிலைமையைத் தோற்றுவிக்க உதவ வேண்டும்.

இதேவேளை ஆயுத மோதல்களில் ஈடுபட்டுள்ள புலிகள், அப்பாவிப் பொதுமக்களை தமது கவசமாகப் பயன்படுத்துவதை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது. அப்பாவி மக்களைக் குறிவைக்கும் அனைத்துத் தாக்குதல்களையும் ஈ.பி.டி.பி. கண்டிக்கிறது.

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவக் கூடிய நிலைமை உருவாக்கப்பட வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இருந்தால், புலிகள் மக்கள் வாழும் பகுதிகளை விட்டு ஒதுங்கியிருப்பதோடு, அரசும் விரைந்து உதவியை நாடியிருக்கும் மக்களுக்கு உதவ வேண்டுமெனவும் ஈ.பி.டி.பி. அவசரமாகவும், மனிதாபிமான அடிப்படையிலும் கேட்டுக் கொள்கிறது.

## புலி எதிர்ப்பு சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் –தமிழக முதல்வர்

இந்தியாவில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டமை விவாதத்திற்குரிய ஒரு பொருளாக இருக்கலாம். ஆனால் இந்தியாவில் பயங்கரவாத அமைப்பென புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதை சட்டரீதியானதென ஏற்று, அதற்கிணங்கவே இங்குள்ள தனி நபர்களும் அரசியல் கட்சிகளும் நடந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் சட்டதிட்டங்களை உதாசீனம் செய்யும் உரிமை எவருக்கும் கிடையாதென தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறினார். புரட்சிகர இளைஞர் அணி என்ற பெயரில் சிலர் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம் குறித்து தமிழக காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். ஈழத் தமிழர்களின் பிரச்சினை வேறு புலிகளின் நடவடிக்கைகள் வேறு. இலங்கை வாழ் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளில் எமக்கு அக்கறையுண்டு. அதே வேளையில் எம்மைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு நாம் அனுமதியளிக்க முடியாது ஏன்றும் கலைஞர் தெரிவித்தார்.

## மோசடிக்கு உடந்தையாக மறுத்ததால் வங்கி முகாமையாளர் சுட்டுக் கொலை

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளரான பொன் கணேசமூர்த்தி என்பவரை தாமே படுகொலை செய்ததாக 'மக்கள் படை' எனும் அமைப்பு யாழ்ப்பாணத்தில் உரிமை கோரியுள்ளது. கடந்த 4ஆம் திகதி இவர் திருநெல்வேலி பிள்ளையார் ஒழுங்கையிலுள்ள அவரது வீட்டிற்கு அண்மையில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். 'தமிழ் தேசியத்திற்கு சார்பானவரெனக் காட்டிக் கொள்ளும் தமிழ் தேசிய விரோதிகளுக்கு, இதுவே தண்டனை' என்று மக்கள் படையென்ற பெயரில் 5ஆம் திகதி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது. காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளை, கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளை கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. வலிகாமம் வடக்கைச் சேர்ந்த உரிமை கோரப்படாத வங்கிக் கணக்கு வைப்பாளர்களின் பணத்தைத் தமது வரு வாய்த் துறைக்கு வழங்குமாறு புலிகள் இயககத்தின் வருவாய்த் துறை முக்கியஸ்தர் தேவநேசன் என்பவர் கோரியிருந்தார். இதற்கு கணேஷமூர்த்தி மறுப்பு தெரிவித்திருந்ததனால் முன்னர் ஆடியபாதம் வீதியில் இயங்கிய வருவாய்த் துறையில் பணியாற்றிய கண்ணன், காந்தன் என்ற இருவரும் கணேசமூர்த்திக்கு கொலை மிரட்டல்கள் விடுத்தனரென்று சக வங்கி அதிகாரி ஒருவர் கூறினார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## பாரபட்சமற்ற பராமரிப்பு அவசியமாகும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**மாவிலாறு** தண்ணீர் விவகாரம் இன்று இரத்தம் சொரிந்த பிரச்சினையாகவும், கண்ணீர் வடிந்த பிரச்சினையாகவும் மாறியிருக்கிறது.

மாவிலாறுக்கும் மூதூருக்கும் சம்பந்தமில்லை என்றாலும், புலிகள் படையினரை தடுத்து நிறுத்த எடுத்ததாகக் கூறப்படும் மூதூர் தாக்குதல்கள் அப்பகுதிகளில் வாழ்ந்த சுமார் 45 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்களையும் ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களையும் இடம் பெயரச் செய்துள்ளது. 500 பேர்வரையானவர்கள் பலியாகியுமுள்ளனர். மாவிலாறு தண்ணீர் விவகாரத்தை அரசும் புலிகளும் தமது கௌரவ பிரச்சினையாகப்பார்ப்பது புரிகிறது. தமது கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் தண்ணீரைத் திறந்துவிட முடியாது என்றும், மக்களை மீறி தாம் அணையைத் திறக்க முடியாது என்றும் கூறிய புலிகள், இலங்கைக்கான நோர்வேயின் சமாதானத் தூதுவர் பௌயர் வன்னிக்குச் சென்று பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து 05.08.06 அன்று மாலை தண்ணீரைத் திறந்து விடப்போவதாகவும், சேருநுவர போன்ற பகுதி மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை எடுக்கப் போவதாகத் தெரிவித்தனர். முன்னர் மனிதாபிமானம் பற்றி சிந்திக்காத புலிகளின் தமது பகுதி மக்கள் முன்னிலையில் வந்து பேச்சு நடத்த வேண்டும் என்று கூறிய புலிகள் பௌயரோடு பேச்சு நடத்திவிட்டு எந்த மக்களோடு கதைத்து அணையைத் திறக்கும் முடிவை எடுத்தார்கள் என்ற கேள்வியும், பொறியியலாளர்களை அணையைத் திறக்க விடாமல் கண்காணிப்புக் குழுவின் தலைவருடன் சென்று திறந்து அரசியல் இலாபம் பெற முயற்சித்ததும் அரச தரப்புக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்று அரச தரப்பு சொல்வது இறைமையுள்ள அரசு என்பதில் அர்த்தமுள்ளதாக இருக்கின்றபோதும், புலிகள் திறந்து மூடும் நிலை உருவானால் அது எந்த வேளையும் புலிகளின் அச்சுறுத்தலுக்குரிய விடயமென்றும் அரசு கொண்டிருக்கும் கவலைகள் நியாயமானவைதான்.

பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளையும் நெருக்கடிகளையும் பார்க்கின்றபோது, புலிகளோ, அரசோ சொல்லக்கூடிய எந்த நியாயங்களும் ஏற்கக்கூடியதாக இல்லை. ஏற்பட்டிருக்கக் கூடிய படுகொலைகள், காணாமல் போனவர்கள், இடப்பெயர்வுகள் என்பன பாராபட்சமற்ற வகையில் நிகழ்ந்துள்ளன. எண்ணிக்கையின் அளவு வித்தியாசப்பட்டாலும் இழப்புக்கள் என்பது ஒரே அளவானதாகவே யுள்ளது. இதில் முஸ்லிம் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்துள்ளதானது கவலை தருகிறது. மறுபக்கத்தில் எட்டுக்கு மேற்பட்ட முஸ்லிம் அமைச்சர்கள் ஸ்தலத்தில் நின்று அவர்களின் தேவைகளை கவனித்து வருகின்றனர். அது வரவேற்கக் கூடியது. இதே வேளை இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு உதவுவார் யாருமில்லை. அதுதவிர திருமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்களில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் பயப்பீதியில் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களின் பதற்றத்தை குறைப்பதற்கோ அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தீர்த்துவைப்பதற்கோ அரச தரப்பிலிருந்து இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்றே செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலை இருந்தால் அரசு மீது குற்றம் சுமத்த புலிகள் எண்ணியிருந்த தருணம் இதுவாக அமைவதோடு தமிழ் மக்கள் குறித்த அரசின் நிலைப்பாடு மேலும் விரக்தியையே உண்டு பண்ணும். எனவே மாவிலாறு மூதூர் மற்றும் மூதூரை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொடர்பில் சம அளவிலான கணிப்பீடுகளும், பராமரிப்பும் செய்யப்படுவது அவசியமாகும். இதே வேளை படுகொலைகள் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு அங்கு மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மாவிலாறு விவகாரம் மக்களுக்குத் தோல்வி; தொடரும் தாக்குதல்கள் நீடிக்கும் அபாயம்!


**திருகோணமலை** மாவட்டத்திலுள்ள மாவிலாறு அணைக்கட்டைத் திறக்கும் அரசின் முயற்சியும், திறக்காமல் தடுக்கும் புலிகளின் முயற்சியும் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீரையும் செந்நீரையும் ஓட வைத்திருக்கிறது. மாவிலாறு அணைக்கட்டைப் புலிகள் மூடியதால் சுமார் பத்துக் கிராமங்களைச் சேர்ந்த மூவின மக்களும் பாதிக்கப்பட்டனரென்பது பழைய சங்கதி. இதனால் மட்டும் முப்பதாயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பதினையாயிரம் மக்கள் அணைக் கட்டுத் தடுப்பினால் அவலப்பட்டிருக்கிறார்கள். இது கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கதை. இதன் தொடர்ச்சியாக மூதூர் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் ஒட்டு மொத்தமாக ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் அவலங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் அல்லாடிக் கொண்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தமது பகுதியைச் சேர்ந்த மக்களுக்காக என்று கூறிய புலிகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தமது பகுதிகளுக்கு வெளியேயுள்ள அப்பாவி மக்களின் அடிப்படைத் தண்ணீர் வசதியைத் தடுக்கும் பொருட்டு மாவிலாறு அணைக்கட்டை மூடியமை மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு விரோதமானதாகும். குடிநீர் மற்றும் நிவாரணங்களை வழங்கி, பொருளாதாரத் தடையை நீக்கி, குண்டு வீச்சுக்களை நிறுத்த வேண்டுமென்று புலிகள் இயக்கம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தது. உண்மையிலேயே இந்த மக்களின் தேவைகளை ஈடு செய்ய வேண்டுமென்ற நோக்கம் புலிகளுக்கு இருந்திருந்தால், அவற்றைச் செய்வதற்கான எத்தனையோ சமாதான ரீதியான வழிவகைகளை புலிகள் இயக்கம் கையாண்டிருக்க முடியும்.

தமிழ் மக்கள் உட்பட சகல இன மக்களினதும் குரல் வளையை இறுக்கி நசுக்கிப் பிடிப்பதற்காக தண்ணீரை ஆயுதமாகப் பயன்படுத்தியமை, கேடு கெட்ட விடயமாகும். பொருளாதார சமூக, கலாசார உரிமைகளின் சர்வதேச சமவாயம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 11ஆவது ஷரத்தும் 12ஆவது ஷரத்தும், ஏனைய மனித உரிமைகளைப் பேணுவதற்கான முன்னோடித் தேவை தண்ணீருக்கான உரிமையைப் பேணுவதிலேயே தங்கியுள்ளதென்று கூறுகிறது. அதாவது நீர் விநியோகத்தை வேண்டுமென்று இடைநிறுத்துவதோ அல்லது மாசுபடுத்துவதோ பாரிய தவறென்பதையே இது குறிக்கிறது. இந்த வகையில் மாவிலாறு அணைக்கட்டை மூடியதன் மூலம் பாரிய தவறொன்றினைப் புலிகள் இழைத்திருக்கிறார்கள். மூடிய கதவுகளைத் திறக்கச் சென்ற நீர்ப்பாசன இலாகா ஊழியர்களைக் கூட புலிகள் அடித்து விரட்டியிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் அதனைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்ட விவகாரத்திற்கு வேறு உள் நோக்கங்கள் இருந்திருக்கின்றன என்ற உண்மையை கடந்த காலச் சம்பவங்களோடு இணைத்துப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். அடுத்த யுத்தத்திற்கான ஆரம்ப சீண்டல் முயற்சிகளுக்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி திருமலைத்துறை முகத்தில் வைத்து கடற்படை கப்பலொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் மூலமாகவே புலிகள் மூன்றாவது ஈழ யுத்தத்தை ஆரம்பித்து வைத்தனர். வடமராட்சி கடற்பரப்பில் 700க்கும் மேற்பட்ட நிராயுதபாணிகளான சிப்பாய்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த 'பேர்ள் குரூஸ்' கப்பல் மீது புலிகள் இயக்கம் தாக்குதல் நடத்தியமையும் இதற்கான ஒரு முயற்சிதான். அண்மையில் திருமலைத் துறைமுகத்தில் வைத்து 'ஜெட்லைனர்' என்ற கப்பல் மீது புலிகளின் தற்கொலைத் தாக்குதல் நடத்த எடுத்த முயற்சிகளும் இதே நோக்கத்திற்காகத்தான். வடக்கிலிருந்து விடுமுறையில் சென்று கொண்டிருந்த 854 சிப்பாய்களுடன் வந்த 'ஜெட் லைனர்' என்ற கப்பல் மீது புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்த எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது.

அரசும் - புலிகளும் யுத்த நிறுத்தத்தைப் பேணுவதாகத் தொடர்ந்தும் அறிவித்துக் கொண்டிருக்கின்ற போதிலும் இருதரப்புகளுமே மோட்டார் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களயும் நடத்தி வருகின்றன. யுத்தநிறுத்தத்தைப் பேணுவதாகக் கூறிக் கொண்டே இருதரப்பும் பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. திருமலை துறைமுகத்துக்கு அண்மித்ததாக தெற்குப் புறத்தே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் இருக்கின்றன. பவுல் முனைக்கு அப்பால் மட்டக்களப்பின் வெருகல் ஆறுக்கும் அப்பால் தமது பிரதேசங்கள் நீண்டு செல்வதாக புலிகள் உரிமை கோருகிறார்கள். இந்த நிலப்பரப்பை விஸ்தரித்துக் கொள்வதற்காகவே புலிகள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூர் மீது அண்மைய தாக்குதல்களை நடத்தினார்கள் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூரையும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூருக்குத் தென்புறமாகவுள்ள தொடர் நிலப்பகுதியையும் கைப்பற்றித் திருகோணமலைத் துறைமுகத்தின் செயற்பாட்டைச் சீர்குலைக்கக் கடந்த வாரம் புலிகள் எடுத்த முயற்சியைப் படையினர் முறியடித்துவிட்டனர். புலிகளின் முத்துச்செல்வி, குஞ்சன் ஆகியோரின் தலைமையில் புலிகளின் அணி மூதூருக்குள் ஊடுருவித் தாக்குதல்களை ஆரம்பித்தபோது ஆரம்பத்தில் சில பகுதிகள் புலிகளின் ஆதிக்கத்துக்குள் வந்திருந்தன. தப்பியோடிக் கொண்டிருந்த மக்களுக்குள் மறைந்திருந்து புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதல்களால், மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். படையினரும் பதில் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தபோது மூதூர் ஓர் யுத்த களமாகவே தென்பட்டது.

வடக்கில் நிலைகொண்டிருக்கும் சுமார் நாற்பதாயிரம் படை வீரர்களின் போக்குவரத்துக்கு முக்கியமான மார்க்கமாக விளங்குவது திருகோணமலைத் துறைமுகம்தான். அதாவது விடுமுறையில் செல்லும் படைச் சிப்பாய்கள் திருகோணமலைக்கு வந்தே அங்கிருந்து தென்பகுதிக்குச் செல்கிறார்கள். அதேபோன்று படையினரை வடக்குக்குக் கொண்டு செல்வதற்கும் அங்கிருந்து வெளியே கொண்டு செல்வதற்குமான மார்க்கமாகவும் திருமலைக் கடற்படைத்தளமே பயன்படுத்தப்படுகிறது. எனவேதான் திருகோணமலையையும் மூதூரையும் குறிவைத்து மக்கள் வாழும் பகுதிகள் மீது புலிகள் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். இதனால் பதினைந்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வீடு, வாசல்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். திருமலை, கிண்ணியா, தம்பலகாமம், கந்தளாய் உட்படப் பல பகுதிகளில் பதினைந்துக்கும் மேற்பட்ட அகதி முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த மோதலில் காணாமல் போன உறவுகளைத் தேடி இன்னமும் மக்கள் அலைந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.


மூதூர் தாக்குதலில் பாதிக்கப்பட்டு அகதிகளான மக்களின் அவல நிலையைச் சித்தரிக்கும் படங்கள்.

எனவே மூதூரையும் அயல் பிரதேசங்களையும் கைப்பற்றுவதற்கு புலிகள் எடுத்த முயற்சிக்கான காரணம் இதுதான். அரசாங்கப் படைகளும் புலிகளும் மாறிமாறி பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினாலும் உண்மையில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள்தான். மூதூர் நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரியிலும் தோப்பூர் அல் நூரியா அரபுக் கல்லூரியிலும் தஞ்சமடைந்திருந்த அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 72 பேர் காயமடைந்திருக்கின்றனர். இதே வேளை மூதூரில் பட்டினிக்கெதிரான நடவடிக்கை என்ற அமைப்பினைச் (அக்ஷன் பாம்) சேர்ந்த நிவாரண ஊழியர்களான 15 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்த நிவாரண அமைப்பின் பெனியன்களை அணிந்த நிலையில் சடலங்கள் காணப்பட்டிருப்பதாகவும் முழங்காலில் நிறுத்தி வைக்கப்பட்டு இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் படையினரா அல்லது புலிகளா என்ற உண்மை கண்டறியப்பட வேண்டும். இது தொடர்பான நீதியான, நேர்மையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். படையினர்தான் அப்பாவிகளான இந்தத் தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியர்களைச் சுட்டுச் கொன்றார்களென்றால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறான அக்கிரமங்கள்தான் இனவிரிசல்களுக்கு இடமளிக்கின்றன என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிர்ந்து போய் மௌனித்து நிற்கிறது. 58 கண்காணிப்பாளர்கள் இருந்த இடத்தில் டென்மார்க், பின்லாந்து, சுவீடன் ஆகிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த 37 பேர் வெளியேறிவிட்டார்கள். எஞ்சியுள்ள 21 பேரும் தமது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஈயோட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். ●

---

## ஊரிலிருந்து....



**அ**ரசியல் பணி செய்ய எண்டு ஊருக்குள்ள வந்தவையள் செய்த அரசியல் பணி என்னவெண்டு உலகத்திற்கே தெரியும். அதில ஒண்டு மயானங்களை புனரமைத்தது. இதற்காக வசூல் செய்த விதமே தனிரகம். ஊருக்குள்ள பெரிய மனுஷர், பசை உள்ள ஆக்களாகப் பார்த்துப் பிடிச்சு ஒவ்வொரு கல்லறை பராமரிப்புக்கும், ஸ்பொன்சர் கேட்டிச்சீனம். இது பழைய கதை.

இப்ப லேட்டஸ்ட் வசூலிப்பு என்ன தெரியுமோ?

தென்பகுதியில் இருந்து வடபகுதியில் வர்த்தகம் செய்யிற கொம்பனி ஆக்களிட்ட அன்பளிப்பு கேக்கினமாம். சமாதான செயலக செற்றி செற், மீன்தொட்டி, குளிர்சாதனம்., கார்பெற் எல்லாம் முன்னம் அப்படிக்கிடைச்சதுதானாம்.

ஒருவேளை இப்போதைய நிமையில வர்த்தகர்மார்கிட்ட 50 கிளேமோர், 100 ஏ.கே எண்டு வேண்டுவினமோ தெரியாது எண்டு சொல்லுறார் மாஸ்டர்.

ந
ர
ன்

---

# திருமலைத் துறைமுகப் பாதுகாப்புக் குறித்து அமெரிக்க இராணுவம் விடுத்த எச்சரிக்கை

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததையடுத்து, 2002ஆம் ஆண்டு ஜுலை மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை வாஷிங்டனில் சந்தித்துப் பேசினார். இச் சந்திப்பையடுத்து இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளை ஆணையகத்தின் உயர்மட்டக் குழுவொன்று, இலங்கைக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தது. "இலங்கை ஆயுதப் படைகளின் மதிப்பீடு" என்ற தலைப்பில் இலங்கை அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், திருமலைத் துறைமுகம் சம்பந்தமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அது வருமாறு :-

கலந்துரையாடல் : இலங்கைக் கடற்படையின் மிக முக்கியமான தளம், திருமலைத் துறைமுகம் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. தற்போது இத் துறைமுகத்தின் தெற்குப் பகுதியை எல்.ரி.ரி.ஈ.கட்டுப்படுத்துகிறது. இப் பகுதியிலிருந்து துறைமுகத்துக்கு வந்து செல்லும் சகல கப்பல்களின் நடமாட்டங்களையும் எல்.ரி.ரி.ஈ. திறமையாகக் கண்காணித்து, இந்த கடற்படைத் தளத்தின் மீது தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தி, இத் துறைமுகத்துக்குள் வருகின்ற, வெளியே செல்லுகின்ற எந்தக் கப்பலையும் தாக்கி அழிக்கக் கூடியதாகவுள்ளது. இலங்கை இராணுவம் இப் பகுதிக்குப் பொறுப்பானது. ஆனால் அதனைப் பூரணமாக பாதுகாப்பாக வைத்திருக்க அதனால் முடியவில்லை.

*சிபாரிசுகள் :*

◎ இந்தத் தரைப்பகுதியை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தம் வசப்படுத்த வேண்டும். தற்போது இருக்கக் கூடிய ஆபத்தான நிலைமையை கட்டாயமாகச் சரிப்படுத்துவதற்கு பெரும்பாலான இலங்கை கடற்படையைச் சரியான நிலைப்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். யாழ்.குடா நாட்டுக்கு மீள் விநியோகம் கொழும்பிலிருந்து வர வேண்டுமென்பதே நிலைமையாக இருக்கிறது. அதாவது இதற்கான தூரம் யாழ்ப்பாணத்துக்கான தூரத்தை விட நான்கு மடங்கு அதிகமானதாகும்.

◎ "தற்போது எல்.ரீ.ரீ.ஈ.க்கெனப் பிரதேசங்களும் இலங்கைப் பந்தோபஸ்து படைகளுக்கென பிரதேசங்களும் இருக்கின்றன. திருமலைத் துறைமுகத்தின் தென்பகுதிமுனை எல்.ரீ.ரீ.ஈ.யின் வசம் இல்லாதிருந்தால், மோதல்கள் ஆரம்பிக்கும் பட்சத்தில் இலங்கை அரசாங்கத்தினால் இப்பிரதேசத்தில் பொலிஸாரையும் இராணுவ ஆளணியினரையும் குவிக்க முடியாத நிலையே ஏற்படும்.

'இப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு என்றுமே தோல்வியடையும் யுத்தகளமாகவே விளங்கும். திருகோணமலை துறைமுகம் இல்லாமல் யுத்தத்தை முன்னெடுப்பதற்கான திறமை மிக மோசமாகப் பாதிக்கப்படும்.'


இவ்வாறு திருமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றி அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளை ஆணையகம் குறிப்பிட்டிருந்தது. 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையேற்றமைக்கு திருமலை துறைமுகப் பாதுகாப்பும் ஒரு காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

திருமலைக்குத் தெற்கேயுள்ள குரங்குபாஞ்சான் என்னுமிடத்தில் புலிகள் முகாமமைத்து வருவதாக அப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மூதூரில் நடந்த இன சுத்திகரிப்பு!

**யாழ்ப்பாணத்தில்** வாழ்ந்த முஸ்லிம் மக்களை உடுத்த உடைகளோடு ஒரே இரவில் புலிகள் வெளியேற்றிய 16ஆவது வருட நினைவும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்குள்ளேயே புலிகளால் படுகொலை செய்யப்பட்ட 16ஆவது வருடப் பூர்த்தியும் நினைவு கூரப்பட்டுக் கொண்டிருந்தபோது, மீண்டும் ஒருமுறை புலிகளால் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டும், தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறவும் செய்யப்பட்ட ஒரு கறுப்பு நாள் மூதூரில் நடந்துள்ளது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்பன அந்தக் காலகட்டத்தில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் பெரியளவில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கவில்லை. ஆனால் இப்போது ஒரு போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் இருதரப்பும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை மாவிலாறு பகுதியில் நடத்திக் கொண்டிருந்தபோது படைத்தரப்பின் விநியோக வளங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்ட தாக்குதல் என்ற பெயரில் 02.08.06 பின்னிரவு புலிகள் மூதூரில் நடத்திய தாக்குதல்களும் அதனோடு ஒட்டிய செயற்பாடுகளும் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன. படையினரை முகாம்களுக்குள் முடக்கியது, மூதூர் துறைமுகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டது, தாக்குதல் நோக்கமாக இருந்திருக்குமாக இருந்தால் அதன் தேவை உணரப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அதே நடவடிக்கையின் போது பயப் பீதியில் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து பள்ளிவாசல்களிலும், பாடசாலைகளிலும் இருந்த மக்கள் மீது ஷெல் வீச்சுக்களை நடத்தியதும், பின்னர் அங்கிருந்து மக்கள் மூதூரைவிட்டு வெளியில் ஓட முயற்சித்தபோது அவர்களை வழிமறித்த புலிகள், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளாக ஓடவிடாமல், அங்கே மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகப் பயமுறுத்தி தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் உள்வாங்கச் செய்து, அவ்வாறு அகப்பட்டுப்போன சுமார் 30 ஆயிரம் மக்களை கண்மூடித்தனமாகத் தாக்கி, வரிசைப்படுத்தி விட்டு பெண்களையும், சிறுவர்களையும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களையும் பாலத்தோப்பூர் ஊடாக மூதூரைவிட்டு வெளியேறச் சொல்லிவிட்டு, ஆண்களை வரிசைப்படுத்தி இரண்டு முகமூடிகள் முன்பாக ஏற்கனவே தாம் குறிவைத்துத் தயாரித்திருந்த பெயர்ப் பட்டியலின் பிரகாரம் ஒவ்வொருவரையும் பரிசோதித்துள்ளனர்.



பாலத்தோப்பூர் வழியாக மூதூர் முஸ்லிம்கள் ஓடிவந்த அவலக் காட்சி

அப்போது அலைமோதிக் கட்டுக்கடங்காமல் இருந்த அந்த மக்களை மேலும் பயமுறுத்தவதற்காக அவர்கள் முன்னிலையிலேயே ஒருவரை சுட்டுக்கொன்றுள்ளனர். அந்தப் படுகொலையானது மிஞ்சியவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பின்னர் சுமார் 50 பேர் வரையான இளைஞர்களைக் கைகளைக் கட்டி அவர்கள் அவலக்குரல் எழுப்புவதைக்கூட கணக்கில் எடுக்காமல் மறைவான தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்றுள்ளனர். அதன் பின்னர் சுமார் 200 பேர் வரையான ஆண்களை கைகளைக் கட்டி ஏனையவர்களையும் கொண்டு செல்ல முற்பட்ட வேளையில், புலிகளை நோக்கி படையினர் ஏவிய எறிகணைகள் அவ்விடத்தில் வீழ்ந்து வெடித்துள்ளன. அதனால் பொதுமகன்கள் 16 பேர் அந்த இடத்திலேயே இறந்துள்ளனர். புலிகள் நான்கு பேர் பலியாகியுள்ளனர். மிஞ்சிய புலிகள் அவ்விடத்தை விட்டு ஓட்டமெடுக்கவும், புலிகளால் தடுத்து வைக்கப்பட்டவர்களும் பாலத்தோப்பூர் ஊடாக உயிர் தப்பி ஓடியுள்ளனர்.

இந்த விடயத்தில் கவனத்தைத் திருப்பும் சம்பவங்களாகக் கருதப்படுபவையானது, முஸ்லிம் மக்களைத் திட்டமிட்டுப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றதும் ஏற்கனவே பெயர், விபரங்களைத் தயாரித்து அவர்களைப் பழிவாங்கும் நோக்கமும், முகமூடிகளைப் பயன்படுத்தியிருப்பதுமாகும். மேற்குறிப்பிட்ட சம்பவமானது ஒரு நேரத்தில் நடைபெற்றது. அவ்வாறெனில் ஒவ்வொரு தடவையும் அப்பாவி மக்கள் ஓடிவந்த போது இப்படி எத்தனை பேரைப் பிடித்தார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியும் அச்சமும் இன்று மேலெழுந்துள்ளது. இடம் பெயர்ந்து உறவுகளையும், சொந்தக் குடியிருப்புகளையும், நிம்மதியையும் பறிகொடுத்துவிட்டு இன்று கந்தளாயிலும், கிண்ணியாவிலும், சேருநுவர மற்றும் ஏனைய பகுதிகளிலும் அகதிகளாகி இருக்கும் மக்களின் வாக்குமூலத்தின்படி சுமார் 350 பேரை புலிகள் கொலை செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்தப் படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டவைதான். இது முஸ்லிம் மக்கள் மீது புலிகள் புரிந்த சதிவேலை என்று அந்த மக்கள் நம்புகிறார்கள்.

இந்த நாட்டில் முஸ்லிம்களும் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அவர்களுக்கான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, வாழ்வுரிமை தொடர்பில் அதீத கவலை கொண்டுள்ளனர். கடந்த காலங்களைப் போல் அல்லாமல் இனிவரும் நாட்களில் முஸ்லிம்கள் தமது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சில கடுமையான முடிவுகளை எடுக்க முற்படுவார்கள் என்றும், அது புலிகளின் படுகொலைகள் வற்புறுத்திய அனுபவங்களிலிருந்து கட்டியமைக்கப்பட்டதாக அமையும் என்றும் சில கடும்போக்கு முஸ்லிம் தலைமைகள் சிந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் பல சடலங்கள் புதைக்கப்படுவதாகவும், குழிகளை தோண்டுவதற்கு அப்பகுதி மக்களை புலிகள் பலாத்காரமாக அழைத்துச் சென்றதாகவும் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் கூறுகிறார்கள். இது தவிர மூதூரின் பல பகுதிகளில் இன்னும் அழுகிய நிலையில் சடலங்கள் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அகதிகளாகியுள்ள குடும்பத்தவர்களின் சரியான கணக்கெடுப்பை இன்னும் எடுக்கமுடியாமல் தொண்டர் நிறுவனங்கள் திக்குமுக்காடிப் போயுள்ளன. இந்தக் கணக்கெடுப்பு வேலைகள் முடிந்த பிறகுதான் தனித்தனியாகக் குடும்பங்களைப் பார்வையிட்டு அவர்களில் எத்தனை பேர் காணாமல் போயிருக்கிறார்கள் அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றிய சரியான தகவல்கள் வெளிவரக்கூடும். தற்போதைக்கு மூதூரை விட்டு இடம் பெயர்ந்து சுமார் 17 இடங்களில் 47 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

பாடசாலைகளில் அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். உள்ளூர் தொண்டு நிறுவனங்களும், வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களும் அரசும் இணைந்து இந்த மக்களுக்கான உடனடி உதவிகளைச் செய்து வருகின்றன.

இருந்தாலும், உணவு, குடிநீர் தவிர்ந்த மலசலகூடம், மாற்று உடை, தற்காலிக குடிசைகள், சிறுவர்களுக்கான, பெண்களுக்கான உடைகள் என்பனவற்றின் தேவை மிகவும் பெரியளவில் உள்ளது. அந்த மக்கள் உளவியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர் பௌஸி தலைமையிலான அமைச்சர்கள் குழு அங்கு நின்று இந்த மக்களுக்கான அடிப்படை மற்றும் உடனடி வசதிகள் குறித்து செயலாற்றி வருகின்றபோதும், இன்னும் அதிகரித்த சேவை தேவைப்படுவதாகத் தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன. இந்த மக்கள் விரைவில் சொந்த இடங்களுக்குச் சென்று வாழக்கூடிய நிலையும் காணப்படவில்லை. புலிகளின் செயற்பாடுகள் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இந்த நாட்டில் முஸ்லிம்களும் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அவர்களுக்கான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, வாழ்வுரிமை தொடர்பில் அதீத கவலை கொண்டுள்ளனர். கடந்த காலங்களைப் போல் அல்லாமல் இனிவரும் நாட்களில் முஸ்லிம்கள் தமது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சில கடுமையான முடிவுகளை எடுக்க முற்படுவார்கள் என்றும், அது புலிகளின் படுகொலைகள் வற்புறுத்திய அனுபவங்களிலிருந்து கட்டியமைக்கப்பட்டதாக அமையும் என்றும் சில கடும்போக்கு முஸ்லிம் தலைமைகள் சிந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதன் தேவை நியாயமானதாக இருந்தபோதும், அது தமிழ், முஸ்லிம் மக்களின் உறவைப் பாதிக்காமல் பாதுகாப்பது அவசியமாகும். புலிகளின் சதி நடவடிக்கைகள் அப்பாவிகளான முஸ்லிம், தமிழ் மக்களைப் பாதிக்க விடக்கூடாது என்ற நியாயமான கவலைகள் முஸ்லிம் மதத் தலைமைகளிடம் இருந்து வெளிவருகின்றன.

மூதூரில் நடந்த தாக்குதல்கள் ஏற்படுத்திய படிப்பினைகள் எதிர்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகிறதோ என்ற கவலைகள் அனைத்துத் தரப்பு மக்களிடமும் காணப்படுகின்றன.

அலசுவது
- மதியூகி -

## அதிரடி அய்யாத்துரை



**மாவிலாறு** அணையை திறக்கப்போறம், சேருநுவர மற்றும் அதனை அண்டிய மக்களின்ர நிலைமையை மனிதாபிமான ரீதியாக யோசிச்சுத்தான் உந்த முடிவை எடுத்த நாங்கள் எண்டு பௌரை உங்க வச்சுக் கொண்டே செய்திகளை கசிய விட்டிச்சினம். உந்தச் செய்தி வெளியால வந்த உடன, அடடே ரெண்டெழுத்தாரும் தங்களுக்கு மனிதாபிமானம் இருக்கெண்டதைக் காட்டியிருக்கினமே எண்டும், தண்ணி வரப்போகுதெண்டும் பாதிக்கப்பட்ட மக்களும், நாட்டு மக்களும் ஆவலோடு இருந்திச்சினம். பிறகு என்னடாவெண்டால் படைத்தரப்பு ஷெல் அடிக்குதாம், உங்க போக முடியல்லை யாம் எண்டு தண்ணியைத் திறக்கமுடியல்லை யாம்.

படைத்தரப்பு ஷெல் அடிச்சது பிழைதான். அதை இல்லையெண்டு சொல்ல முடியாது. ஆனால் அணைக்கட்டு தங்கட கட்டுப்பாட்டிலதான் இருக்குது எண்டும், அதை தங்கட ஆக்கள் பாதுகாத்துக் கொண்டிருக்கினம் எண்டும் சொன்ன ரெண்டெழுத்தார், இப்ப மட்டும் ஆமிக்காரன் ஷெல்லடிக்கிறான் எண்டும், போக ஏலாதெண்டும் ரொம்ப நடுங்கிப் போன மாதிரியும் சொல்லிச் சினமே அதுதானுங்கோ யோசிக்கேக்க தலையெல்லாம் சுத்துறமாதிரி இருக்கு...நான் தெரியாமக் கேக்கிறன், உந்த விஷயத்தில அரசாங்கத்தை அவமானப்படுத்தி, உண்மையிலேயே மக்கள் மீதான மனிதாபிமானத்தை வெளிப்படுத்துவதாக இருந்தால் ரெண்டெழுத்தாருக்கு உந்த அணையைத் திறப்பது ஒண்டும் கஷ்டமான காரியமில்லையுங்கோ. ஆமிக்காரரின்ர கேம்புக்குள்ள புகுந்து திரியிறவைக்கு உது நொண்டிச்சாட்டெல்லோ...

**மூதூரில** இருந்து இடம் பெயர்ந்து கந்தளாயிலையும், கிண்ணியாவிலையும் இருக்கிற மக்களுக்கு உதவப் போறம் எண்டு புதுசா தொண்டுப்பணி செய்யப் புறப்பட்டவை தொடர்பில கொஞ்சம் விழிப்பா இருக்க வேணுமுங்கோ. சுனாமி வந்த போது இதே மாதிரி தொண்டுப் பணி செய்யிறன் எண்டு திரிஞ்சவை கிடைச்சதில பாதியை விழுங்கி ஏப்பம் விட்டிச்சினம்.

அந்த மூட்டம் உந்த சக்தியான தொலைக் காட்சிக்காரர், சாமாங்களைச் சேர்த்து மக்களுக்குக் குடுக்குமாப்போலை ரெண்டெழுத்தாருக்குக் கொடுத்துப்போட்டு திரும்பி வந்திச்சினம். அதிலையும் முழுக்கக் கொடுத்திச்சினமோ எண்ட சந்தேகம் இன்னும் இருக்கு. உந்த மோசடியிலதான் அவர் ரங்கமணியும் சுவிஸ் நாட்டுக்கு ஓடிப்போனவர் எண்டும் பிறகு கதையள் அடிபட்டுது. ருசி கண்டவை விடுவினமோ, இப்ப மறுபடியும் மூதூர் அகதிகளையும் சொல்லிக்கொண்டு சாமாங்களை சேர்க்கினமாம். உப்பிடி இன்னும் ஒரு சில மலை விழுங்கிகள் வெளிக்கிட்டிருக்கினம்: உதுகளைக் கவனத்தில கொண்டு உதவி செய்யிற கொடை வள்ளல்கள் உதவ வேணுமுங்கோ. புள்ளை பேரைச் சொல்லி, பூதங்களைச் சாப்பிட விட்டுப் போடாதேங்கோ. புரியுதோ...

**இடம்** பெயர்ந்து வந்திருக்கிற முஸ்லிம் மக்களுக்கு உதவிற வேலைத்திட்டத்தில ஏழெட்டு அமைச்சர்கள் கந்தளாயில நிண்டு பணிபுரியினம். உது வரவேற்கவேண்டிய விஷயம்தான். உப்பிடியான அனர்த்தம் இடம் பெறுகிற நேரங்களிலை அதிகாரத் தரப்பின்ர உயர்மட்டத்தினர் ஸ்தலத்துக்குச் சென்று கவனிக்கிறது எல்லா நேரத்திலையும் செய்யப்பட யில்லையே எண்ட குற்றச்சாட்டும் ஒருபக்கத்தாலை தெரிவிக்கப்படுகுது. உதில நான் என்ன சொல்ல வந்தனான் எண்டால், மூதூரில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறின மாதிரி சுமார் ஆறாயிரத்துக்கும் மேலான தமிழ் மக்களும் தங்கட இடங்களை விட்டு இடம் பெயர்ந்து திக்குத் திக்காக அகதியாக இருக்கினம். அவையைப் பற்றி யாரும் கண்டு கொண்டதாகவோ, அவைக்கான நிவாரண உதவிகள் வழங்கப்படுவதாகவோ இதுவரை எந்தவிதமான ஒரு செய்தியையும் கேள்விப்படயில்லை. ஏனுங்கோ தமிழ் மக்கள் உப்பிடி புறக்கணிக்கப்பட்டவை? அவையைப் பற்றி யாரும் வாய் திறந்து கதைக்கினமில்லையே! ஏன்? கூத்தமைப்பு எம்.பி.மார். சுய புத்தியில்லா, சோணகிரிகள் எண்டது ஒருபக்கமிருக்கட்டும். அரசாங்கத்துக்கு அந்தக் கடமை இருக்குது எண்டதாலை இடம் பெயர்ந்து இருக்கிற தமிழ் மக்களுக்கு அரசாங்கம் உதவ வேண்டும். அவர்கள் பற்றிக் கணக்கெடுப்புகள் எடுக்கப்பட வேண்டும். இல்லாட்டில் பாரா பட்சம் காட்டப்பட்டது என்ற குற்றச் சாட்டுக்கு அரசு ஆளாக வேண்டியிருக்குமுங்கோ.

**சிகப்புச்** சட்டைக்காரருக்கு சிக்கன் குனியா மாதிரி ஏதும் வியாதி புடிச்சிட்டுதோ தெரியல்லை. ஒருபக்கம் நாடு கொலைகளும், வன்முறைகளுமாக அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கே...அதிகாரமானவருக்கு சப்போர்ட் பண்ணி, அவரை நிதானமாக ஒரு முடிவு எடுக்கவிடாமல், அவருக்கும் மூளையில்லை, படைத்தரப்புக்கும் மூளையில்லை எண்டினம். பிறகு என்னடா எண்டால் தொழிற்சங்கங்களைத் தூண்டிவிட்டு அதிகாரத்தரப்புக்கு ஒரு நெருக்கடியைக் குடுக்கினம். பிறகு இருபது அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அதிகாரமானவருக்கு சப்போர்ட் கொடுக்கத் தயார் எண்டினம். உப்பிடி காலையில ஒரு கதையும், பின்னேரம் ஒரு கதையுமாக அந்தர் பெல்டி அடிச்சுக் கொண்டு திரியினம். மொத்தத்தில கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் அவையில நாப்பது எம்.பி.மார் இருந்தும் அவையால ஒண்டும் செய்து முடிக்க முடியாம சும்மா எதிர்ப்பு, அறிக்கை, கொடிபிடிப்பு எண்டு கொக்கரிச்சுக் கொண்டிருக்கினம். அவை, வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேணுமெண்டு கேஸ் போட்டிருக்கினம் சில வேளை அது ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கு வருமாக இருந்தால் முஸ்லிம் மக்களை இணைந்த வடக்கு - கிழக்குக்கு எதிராக வாக்களிக்கச் செய்யப்பண்ணியிருக்கினம் ரெண்டெழுத்தார் எண்டு கவலையோடை வாத்தியார் இருக்கிறாருங்கோ...

**சுனாமி** வந்தாப் பிறகு பாதிக்கப்பட்ட சனத்துக்கு உதவ பல தொண்டு நிறுவனங்கள் புதுசா முளைச்சதும், இருந்த தொண்டு நிறுவனங்கள் பிரபலமானதும் நடந்ததுதான். தொண்டு நிறுவனங்கள் ஏராளமாக இருந்தாலும் அதில வேலை செய்யிறதில எங்கட சனம் முன்னம் அவ்வளவாக ஆர்வம் காட்டயில்லை எண்டது நாம அறிஞ்சதுதான். ஆனால் சுனாமிக்குப் பிறகு படிச்சுப் போட்டு வேலை வெட்டி இல்லாமல் இருந்த எல்லாப் பிள்ளையளும் ஆண், பெண் எண்ட பேதமில்லாமல் ஆளுக்கொரு தொண்டு நிறுவனத்தில போய்ச் சேந்திச்சினம்.

அதில கூட பெண் பிள்ளைகள் சில தவறுகளுக்கு உள்ளாக்கப்படுகினம் எண்டும், எங்கட கலாச்சாரமெல்லாம் அழிக்கப்படுகுதெண்டும் சில கதைகள் வந்துது. உந்தக் கதைகளில சில உண்மையும் இருந்ததுதான். ஆனால் அநேகமான பெண் பிள்ளைகள் ரொம்பவும் கட்டுப்பாட்டோடை வேலை செய்து கொண்டு இருந்திச்சினம்.

இப்புடி சொல்லடி, ஷெல்லடிகளுக்கு மத்தியிலையும் போய் மக்களுக்கு உதவி செய்த பிள்ளையள் பதினைஞ்சு பேர், மூதூரில படுகொலை செய்யப்பட்டிருந்திச்சினம். அதில நாலு பொம்பிளைப் பிள்ளையளும், பதினொரு பெடியளும் நாலு நாளா பிணமாகக் கிடந்தும் யாரும் போய்ப் பார்க்க முடியாமல் கிடந்ததுகள். அந்தப் பிள்ளைகளைப் பெற்றதுகளும், கூட வேலை செய்ததுகளும் சடலங்களை எடுக்க முடியாமலும், போகமுடியாமலும் தவிச்ச தவிப்பும், அழுத அழுகையும் சொல்ல முடியாத வேதனைங்கோ. உதவப் போன பிள்ளைகளை சடலங்களாகப் பார்த்த பெற்றோருக்கு எப்புடிங்கோ ஆறுதல் சொல்லுறது...

# தங்கம்

**ஆண்களை** விடவும் பெண்களுக்குத்தான் தங்கத்தின் மேல் விருப்பம் அதிகம். எரிபொருளுக்கு அடுத்தபடியாக அதிக விலையேற்றத்துக்குள்ளாவது தங்கம்தான். வங்கியில் பணமாகச் சேமிப்பதை விடவும் தங்கமாகச் சேமித்தாலே அதிக இலாபத்தைக் காண முடியும். உலக நாடுகள் தங்களது தன்னிறைவு மற்றும் பொருளாதார இருப்பு என்பவற்றைத் தீர்மானிக்கின்றபோது, தங்கத்தின் கையிருப்பைக் கொண்டுதான் தீர்மானிக்கின்றன. அமெரிக்கா எவ்வளவு தங்கத்தைச் சேமிப்பில் சராசரியாகக் கொண்டிருக்கிறது என்பதையும், வருடத்துக்கு அதிக



தருவது
-தேசன்

தங்கம் கொள்வனவு செய்யப்படும் நாடுகளில் இந்தியா முதன்மை வகிக்கிறது. இதேபோல் தங்கத்தை சேமிப்புச் செய்வதில் சுவிஸ் நாடு முதன்மை வகிக்கிறது. தங்கத்தை உற் பத்தி செய்வதில் ஆபி ரிக்கா முதன்மை




வகிக்கிறது. இதனோடு ஒட்டிய தகவல்களைப் பின்னர் பார்க்கலாம். அதற்கு முதல் தங்கம் கொடுத்து ஒரு தீவு வாங்கப்பட்ட சுவாரஸ்யமான சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து ரஷ்ய நாடு மிக மோசமான பொருளாதார வீழ்ச்சி கண்ட 1950ஆம் வருடக் காலப்பகுதியில் அமெரிக்கா, ரஷ்யாவிடம் அலாஸ்கா உபகண்டத்தை வாங்கிக் கொண்டது. அந்த உபகண்டமானது கடுமையான பனிப் பிரதேசமாகும். ரஷ்யாவின் ஆதிக்கத்துக்குள் இருந்தாலும் ரஷ்யாவால் உபயோகப்படுத்தப்படாத பிரதேசமாக இருந்தது. அதை அமெரிக்கா கேட்டபோது, அங்கு எந்தவிதமான இராணுவத் தளபாடங்களும் கொண்டுவரப்படக்கூடாது என்ற நிபந்தனையோடு அமெரிக்காவுக்கு வழங்கச் சம்மதித்தது. இந்த உபகண்டத்தை வழங்குவதற்கு கைமாறாக அமெரிக்கா, தங்கத்தை ரஷ்யாவுக்கு வழங்கியது. பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்து கிடந்த ரஷ்யாவுக்கு உதவாத உபகண்டமான அலாஸ்காவை விட, அமெரிக்காவின் தங்கம் அவசியமாக இருந்தது. அதன் அடிப்படையில் 14 விமானங்களில் அமெரிக்கா தங்கம் வழங்கியது. எவ்வளவு தங்கம் என்பது இதுவரை வெளியிடப்படவில்லை.

ரஷ்யாவின் உபயோகத்துக்கு உதவாத அலாஸ்கரவை அமெரிக்கா வேண்டியது எதற்காக என்ற கேள்விக்கு விடை என்ன தெரியுமா? அலாஸ்காவில் எண்ணை வளம் இருக்கிறது. ஒப்பீட்டளவில் மத்திய கிழக்கு நாடுகளை விடவும் 10 வீதம் அதிகமாகவே அலாஸ்காவில் எண்ணைவளம் இருப்பதாக அமெரிக்கா கண்டு பிடித்துள்ளது. இப்போதைக்கு அங்கு எதையும் அமெரிக்கா செய்யவில்லை. இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு எண்ணை விவகாரம் எல்லா நாடுகளினதும் கழுத்தைப் பிடித்து நெரிக்கும்போது - எண்ணை வளம் குறைந்த பிறகு - தான் அலாஸ்காவில் அமெரிக்கா தன் பணியை ஆரம்பிக்குமாம். இப்போது ரஷ்யா கவலைப்பட்டு அர்த்தமில்லை. அமெரிக்காவின் தூரநோக்குத்தான் வல்லரசாக தலை நிமிர்த்தி வைத்துள்ளது.

தங்கத்தை விரும்பாத பெண்களும் இருக்கிறார்கள். அநேகமான பெண்கள் தங்கத்தில் ஆடம்பரமாகக் காட்சியளிப்பதை இப்போதெல்லாம் வெறுக்கிறார்கள். இந்த வாரம் அமெரிக்காவில் நடத்தப்பட்ட கணிப்பீடு ஒன்றில், பெண்கள் ஆடம்பரமான நகைகளைவிடவும், நவீன தொழில் நுட்பங்களில் அதீத அக்கறை காட்டுவதாக அறிந்துள்ளனர். குறிப்பாக, தமிழ்ப் பெண்கள்தான் தங்க ஆபரணங்கள் மீது விருப்பமிக்கவர்களாக இருக்கிறார்கள்.

அதற்குப் பிரதானமான காரணமாக நான் நினைப்பது, தமிழ் தெய்வங்களின் புகைப்படங்களைப் பார்க்கின்றபோது விதம் விதமான தங்க ஆபரணங்களை அணிந்து கொண்டிருப்பதுதான் பெண்களுக்கு அந்த விருப்பத்தை அதிகரிக்கச் செய்திருக்கலாம். குறிப்பாக, கோயில்களில், திருநாள்களில் தமிழ்ப் பெண்கள் புத்தாடை அணிந்து முடியுமான அளவுக்கு தங்கத்தை அணிந்து கொண்டு வீதியில் இறங்கினால்தான் ஒரு கௌரவம் கிடைப்பதாக நம்புகிறார்கள். இப்படியான பெண்களுக்கு நான் சொல்வதெல்லாம், தங்கத்தை குறிவைக்கும் ஒருவன், உங்களுக்குத் தொல்லை தரக்கூடும். ஏன்; தோடுகளை திருடன் பிடுங்க முற்பட்டதால் காதுகள் அறுந்துபோன பெண்களின் கதைகளை நான் அறிந்திருக்கிறேன். சங்கிலியை அறுத்ததில் கழுத்து அறுபட்ட பெண்களும் இருக்கிறார்கள். இளம் யுவதிகளிடம் தங்கம் பற்றிய விருப்பம் குறைந்து காணப்படுகிறது. அவர்கள் பிளாஸ்ரிக், முத்துமணி போன்ற மிகவும் எளிமையான ஆபரணங்களை விரும்புகிறார்கள். தங்கத்தை விடவும் விலை அதிகமான பிளாட்டினம் ஒரு சாம்பல் கலரில் இருக்கும். அந்த ஆபரணங்கள் புதுமையாக இருந்த போதும், விலை அதிகம் என்பதாலும், தங்கம் ஏற்படுத்திய பாதிப்பு தனித்துவம் காரணமாகவும், தங்கத்தை விடவும் பிளாட்டினத்தால் தனக்கான இடத்தைப் பிடிக்க முடியவில்லை. இப்போது பிளாட்டினத்தையும் தங்கத்தையும், இரண்டு வடிவங்களில் இணைத்து ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. இந்த முயற்சி ஓரளவு வெற்றியளித்துள்ளது. காதலர்களும், அன்புக்குரியவர்கள் - தமது விருப்பத்துக்குரியவர்களுக்காக தங்கத்திலான ஒரு ஆபரணத்தைப் பரிசாகக் கொடுப்பது பிரயோசனமுள்ளதாக இருக்கும். தங்கத்தைப் பற்றி எழுத எனக்கு தங்கத்தைப் பற்றி என்ன தெரியும் என்று சொல்லியே ஆகவேண்டும்.

எனக்கு 13 அல்லது 14 வயதிருக்கும். எங்கள் ஊரில் தங்க ஆபரணம் செய்பவர் ஒருவர் இருந்தார். அவரை 'மாமா' என்று அன்போடு அழைப்பேன். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். இப்போது அவர் உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. அவர் திருமணம் முடித்தவராக இருந்தாலும் எங்கள் ஊரில் தனிமையில் இருந்ததால் அவருக்கு உதவிக்கு கடைக்குப் போகவும், வேலைத்தளத்தில் உதவிக்கும் ஒரு நல்ல பையன் தேவையாக இருந்தது. ஒரு நாள் அவரே வந்து என் அப்பாவிடம், என்னை அவரோடு கடைக்கு அனுப்புமாறு கேட்டார். அப்பாவும் சம்மதித்தார். அவருடன் சுமார் மூன்று மாதங்கள் தான் வேலை செய்ய முடிந்தது. அதற்குப் பின்னர் நான் நாட்டு நிலைமை மோசமடைந்ததால் அகதி வாழ்க்கை... பின்னர் ஊரைவிட்டு ஓடி வந்து விட்டேன்.

அவரோடு இருந்த காலத்தில் தங்கத்தில் கலப்பதற்காக செம்பு வெட்டுவது, அடுப்பு ஊதுவது, வளையல், தோடுகளுக்கு குறுக்காக இருக்கும் மெல்லிய துவாரம் வெட்டுவது, ஒட்டுவதற்கு வரும் மோதிரங்களை ஒட்டுவது, பட்டத்தில் போட்டு தங்கத்தை மெல்லிய கம்பிகளாக இழுப்பது, (இப்படி இழுத்துத்தான் சங்கிலிகளுக்கு அளவெடுத்து வெட்டுவது), தங்கத் துகள்களை ஒன்று சேர்த்து உருக்கியெடுப்பது, எரித்த அல்லது பழைய தங்கத்தை மினுமினுப்புக் காட்டச் செய்வதற்காக அறப்புக் கொண்டு கழுவுவது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## நாகரீகம் தெரியாதவர்களா?

**எம்.ரீ.வி. தொலைக்காட்சியின் அதிகாலை நிகழ்ச்சியான "குட் மோர்னிங் ஸ்ரீலங்கா" 21.07.2006இலும் - 26.07.2006 இலும் ஒளிபரப்பான ஆங்கில நிகழ்ச்சியில் இரு மகளிர்கள் கலந்து கொண்ட விதம். அவர்களை ஈன்ற மாதா, பிதா, ஆசான், உற்ற சகோதரர்களுக்கும் மற்றும் கல்விமான்கள், புத்தி ஜீவிகள், மதப் பெரியோர்களுக்கும் சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கும்.**

**காரணம் - இருவரும் இறுக்கமான உடையணிந்து, காலுக்கு மேல் கால்களைப் போட்டு அமர்ந்து, தாங்கள் மட்டும் தான் ஆங்கில மொழி கற்றவர்கள் என்ற தோரணையில் நிகழ்ச்சிகளை வழங்கிய விதம் என்னை மட்டுமல்ல, என் போன்ற இரசிகர்களையும் தொலைக்காட்சி நேயர்களையும் சலிப்புக்குள்ளாக்கி இருக்கும்.**


**எதற்கெடுத்தாலும் நிகழ்ச்சிக்கு இடையில் எதிலும் முதல்வன் என தம்பட்டம் அடிக்கும் ஊடகம் இதையெல்லாம் கவனத்தில் கொள்வதில்லையா? அல்லது நாகரீகம் தெரியாத ஜடங்களா?**

**குறைபாடுகளைக் கண்டறிந்து, தரமான நிகழ்ச்சிகள், தரமான நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் என்ற பாராட்டுச் சான்றிதழ்களைப் பார்வையாளர்கள், இரசிகர்கள் மத்தியில் பெற முயல வேண்டும். அதுவே முதன்மை பெற வழி!**

***—எஸ். ஏ. சி. நிபாஸ், புத்தளம்.***

## பதவி உயர்வுகள், வேறு நியமனங்கள் இன்றித் தவிக்கும் வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைச் சிற்றூழியர்கள்

**வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் ஆய்வுகூட உதவியாளர், நூலக உதவியாளர் (ஏவலர்) ஆகிய பதவிகளுக்கு 400க்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இருந்தும் மாகாணக் கல்வி அமைச்சு அவற்றை நிரப்பாது காலம் தாழ்த்தி வருகின்றது. குறிப்பாக 12.06.2006ஆம் திகதி கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ED/07/96/C4 III இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் உள்ள நூலகங்களில் நூலக ஏவலாளர்களை நியமிக்கும்படி பணிக்கப்பட்டிருந்தும் இதுவரையும் எவருக்கும் அந் நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் பணியாற்றும் சிற்றூழியர்கள் எதுவிதப் பதவிகளுக்கும் மாற முடியாது, நியமனம் பெற்ற பதவிகளிலேயே தொடர்ந்து பணியாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் அவர்களே! கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைய சிற்றூழியர்களுக்கான நியமனங்களும், பதவி உயர்வுகளும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.**



Ministry of Education

***—பாதிக்கப்பட்ட சிற்றூழியர்கள், திருகோணமலை.***


# விளம்பரப் பகுதி

### மலையாள மாந்திரீகம்



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

### அருள் சித்த எண்ணெய்



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

### ஜாதகம்



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி
**P.K.சாமி (J.P.) ஐயா**

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

**ABI Beauty Parlour**



Abi Beauty Parlour
Bridal Dressing, Latest Facials
Hair Rebonding, Hair Treatments
Watts Removing.....

No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)

## இன்னொருவர் பார்வையில்

# தோல்வியுற்றுவரும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு

**சமாதான** முயற்சிகள் முறிவடையக் கூடிய விளிம்பில் நிற்கின்ற இந்த நிலையில், சமாதான முயற்சிகளில் முக்கிய தூண்களில் ஒன்றான இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கேள்விக்குரியதாகி விட்டதோடு, அச்சுறுத்தலையும் எதிர்நோக்கி நிற்கிறது. யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழு ஆரம்பித்த காலத்திலிருந்தே அதன் பாரபட் சங்கள் காரணமாக பல்வேறு விமர்சனங்களை எதிர்நோக்கி வந்துள்ளது. அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பேணிவந்ததாகப் பாராட்டப்பட்டும் வந்திருக்கிறது. எனவே அதன் பங்களிப்பு, செயற் பாடு, திறமை ஆகியவற்றை மீளாய்வு செய்வது பொருத்தமானது. யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவோடு சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்வ தற்காக கடைசிச் சுற்றுப்பேச்சுவார்த்தை ஒஸ்லோ வில் நடத்தப்பட்டது.

### யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு

இரு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து வந்த வன்செயல்களை நிறுத்துவதற்காக நோர்வேயின் முன் முயற்சி மூலம் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கத் திற்கும் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் விளைவாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் நீடித்த சிவில் யுத்தத்திற்கு நின்று நிலைக்கக் கூடிய தீர்வொன்றினை காண்பதற்கான உகந்த சூழ்நிலை யொன்றினை ஏற்படுத்துவதே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமாகும். யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை அரசாங்கம், புலிகள் இயக்கம் ஆகிய இருதரப்புகளுமே

> **மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த பிரதீப் பீரிஸ் என்ற அரசியல் ஆய்வாளர் எழுதிய 'சாத்தியமற்ற பணி?' என்ற தலைப்பிலான கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இக் கட்டுரை 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் கடந்த நான்காம் திகதி பிரசுரமாகியிருந்தது.**

யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவுக்கு தலைமை தாங்குமாறு நோர் வேயை அழைத்தன. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஸ்கன்டிநேவிய நாடுகளே பிரத்தியேகமாக இடம்பெற வேண்டுமென்றும் இரு தரப்புகளுமே கேட்டுக் கொண்டன. ஒப்பந்தம் கைச்சாத்தாகிச் சில வாரங் களுக்குள் கண்காணிப்பு வேலை களை ஆரம்பிப் பதற்கு 24 கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். இந்த எண்ணிக்கை மூன்று மாதங்களுக்குள் 46ஆக உயர்ந்தது. பின்னர் அது தற்போதைய 60 பேர்கள் என்ற எண்ணிக் கைக்கு அதிகரித்தது. பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் இக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்றனர். அதாவது இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சட்டத்தரணிகள், சமூக சேவை யாளர்கள், பரோபகாரிகள், மனித உரிமை நிபுணர்க ளென்று பல்துறை சார்ந்தவர்கள் இடம்பெற்றனர்.

கண்காணிப்புப் பொறிமுறைகளுக்கு அமுலாக் கும் அதிகாரங்கள் உண்டு. அதாவது, இணக்கப் பாட்டினை ஏற்படுத்துவதற்காக அரசியல், பொருளா தார அல்லது இராணுவ வழிமுறைகளூடாக செயற் பாடுகளை மேற் கொள்ள முடியும். அல் லது 'பெயரைக் குறிப் பிடுவதும் குற்றஞ்சாட்டி வெட்கமுற வைப்பதும்' என்ற உத்தியினூடாகக் கையாளுகிறது. யுத்த நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக விளங்கிய காலஞ் சென்ற ஹக்ரப் ஹோக்லண்ட் சுட்டிக் காட்டியதைப் போன்று, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வுக்குச் செயலாற்று அதிகாரங்கள் வழங்கப்படவில்லையென்பதால், கண்காணிப் புக் குழுவின் வெற்றி முற்று முழுதாகவே இரு தரப்பினதும் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.



போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன்.

எவ்வாறெனினும் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு எடுத்த முடிவுகளுக்கு யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப் புகளும் அளித்த ஒத்துழைப்பு, இரு தரப்புகளுமே குழுவின் முடிவுகள் குறித்து அக்கறை கொள்ளவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்புகள் செல்வாக்குச் செலுத்துபவையாகக் கணிக்கப் படவில்லை.

### 2002இல் இருந்து 2005 வரை...

2002இற்கும் 2005இற்கும் இடைப்பட்ட காலத்தை வர்ணிப்பதற்கு, 'எதிர்மறைச் சமாதானம்' அல்லது 'யுத்தமுமில்லை சமாதானமுமில்லை' என்ற பதத் தையே அரசியல் ஆய்வாளர்கள் பயன்படுத்து கின்றனர். இந்தக் காலகட்டத்தில், இந்த இரண்டு முக்கிய தரப்புகளுக்குமிடையில் நேரடி மோதல்கள் இடம்பெறவில்லை. அல்லது சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் நீடித்த, நீதியான தீர்வைக் காண்பதில் கணிசமான முன்னேற் றம் எதுவும் காணப்படவுமில்லை.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான நேரடி மோதலை யுத்த நிறுத்த ஒப்பந்தம் தவிர்த் துள்ள போதிலும், பெருமளவிலான மனித உரிமை மீறல்களுக்கு அது இடமளித்திருக்கிறது. அதாவது, ஆட்களுக்குத் தொந்தரவு கொடுத்தல், மிரட்டிப் பணம் பறித்தல், படையணிகளுக்குச் சிறுவர்களை சேர்த்துக் கொள்ளுதல் போன்ற புலிகள் இயக்கத் தின் அத்துமீறல்களும் புலி எதிர்ப்பு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களை கொன்றொழித்தல் போன்ற மனித உரிமை மீறல்களும் 2005ஆம் ஆண்டின் இறுதிவரை இடம்பெற்ற மொத்த ஒப்பந்த மீறல்களில் 55 சதவீதமானவையாக இருந்தன. யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து 2005ஆம் ஆண்டின் இறுதிவரை 612 கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. பெரும்பாலான இப் படுகொலைகளின் சூத்திரதாரிகள் இனங்காணப் படவில்லை. பெரும்பாலான இப்படுகொலைகள் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளென்பதைக் காட்டக்கூடிய அறிகுறிகள் தென்பட்டாலும், இவற்றைச் சரிவர அறிய முடியாத சாதாரண காரணத்தினால் கண்காணிப்புக் குழுவினால் தீர்ப்பு வழங்க முடியவில்லை.

2005ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளில் 50 சதவீதமானவைக்கு மட்டுமே கண்காணிப்புக் குழு தீர்ப்புகளை அறிவித்துள்ளது. இதிலிருந்து கண் காணிப்பு வேலைகளை மேற்கொண்டு முடிவுகளை அறிவிப்பதில் கண்காணிப்புக் குழு எதிர்நோக்கிய சவால்கள் தெளிவாகத் தெரிகின்றன. 2002இலிருந்து 2005ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 3577 யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் இடம்பெற்றிருக்கின் றனவென்று கண்காணிப்புக் குழு வெளியிட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் 96 சதவீதமான மீறல்கள் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 2005ஆம் ஆண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட வேண்டிய மேலும் 830 மீறல் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

### மக்கள் நம்பிக்கை

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முதன் முதலாகத் தனது செயற்பாடுகளை ஆரம்பித்த பொழுது, கண்காணிப்பு வேலைகளைச் செய்வது தொடர்பான குழுவின் திறமைகள் குறித்து பொது சன அபிப்பிராயம் இரண்டாகப் பிரிந்திருந்ததை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய பொதுசன அபிப்பிராய் ஆய்வு எடுத்துக் காட்டியது. இலங்கையர்களைப் பொறுத்தவரை, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு என்பது மிகவும் புதிய அனுபவம் என்பதால், இதனைப் புரிந்து கொள்வது இலேசானது. எனினும், 2003ஆம் ஆண்டின் இறுதியில் வடக்கு - கிழக்கில் வன்செயல்கள் அதிகரித்திருந்ததாலும் சமாதானப் பேச்சுவார்த்தை யிலிருந்து புலிகள் வாபஸ் பெற்றமையினாலும் கண்காணிப்புக் குழு தொடர்பான பொதுஜன அபிப்பிராயம் பெருமளவுக்கு எதிராகவே இருந்தது. கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் திறன்வாய்ந்தவையாக இல்லையென்று நாற்பது சதவீதமானவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். தம்மால் சரிவரத் தெரிவிக்க முடியவில்லையென்று 19 சதவீதமானவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். 2005ஆம் ஆண்டு செப்டம்பரில் நடத்தப்பட்ட பொதுசன அபிப்பிராயக் கருத்துக் கணிப்பீட்டின்படி, கண்காணிப்புக்குழு ஒன்றில் திறமையற்றது அல்லது அக்குழுவின் திறமை குறித்துத் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியவில்லையென்று 75 சதவீதமான இலங்கையர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு எதிர்நோக் கும் சிக்கல்களை இது நன்கு விளக்குகிறது. ஒருபுறத்தில் தண்டனை விதிக்கும் அதிகாரம் கண்காணிப்புக் குழுவுக்கு இல்லை. மறுபுறத்தில் யுத்த நிறுத்த அத்துமீறல்களைக் கண்காணிப்புக் குழு தடுத்து நிறுத்த வேண்டுமென்று மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

### 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர்

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அரசியல் சூழ்நிலையும், குழு செயற்படத் தொடங் கிய நிலைமைகளும், ஐக்கிய தேசிய முன்னணி அரசு தோற்கடிக்கப்பட்டமையையடுத்துக் கணிச மானளவுக்கு மாற்றம் பெற்றது. யுத்த நிறுத்த ஒப்பந் தத்தையும் நோர்வே தரப்பினரையும் விமர்சித் தவர்கள், ஒப்பந்தத்தின் பாதுகாவலர்களில் ஒருவராக மாறினார்கள். தனது ஆயுத பலத்தை முன்வைத்து சம அதிகாரம் கோரிய புலிகள் அமைப்பு, கருணா அம்மான் அந்த இயக்கத்தி லிருந்து விலகி ஆயுதக் குழுவாக தோற்றம் பெற்றதன் பின்னர் புலிகள் இயக்கம் ஈடாட்டம் காணத்தொடங்கியது. நாட்டில் ஐந்தாவது செய லாற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்படுவதற்கு புலிகள் இயக்கமும் மறைமுகமாக பங்களித்திருக்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி மார்க்கத்தில் தீர்வு காண்பதற்குப் பதிலாக ஒற்றையாட்சிக்குள் ஆகக்கூடிய அதிகாரப் பகிர்வு வழங்குவதென்ற ஜனாதிபதி ராஜபக்ஷவின் அறிவிப்பு, யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு வித்தியாசமானதொரு அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தியது.

2002ஆம் ஆண்டிற்கும் 2005ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மாதாந்தம் சராசரியாக 13 கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதிக்கும் மே மாதம் 28ஆம் திகதிக்கும் இடைப்பட்ட 93 நாட்களில் ஆகக்குறைந்தது 223 குடிமக்களாவது கொல்லப் பட்டிருக்கிறார்களென்று யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழு தெரிவித்துள்ளது. எனினும் படுகொலை களின் போக்கில் பாரிய மாற்றமொன்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் காணப்பட்டது. அதாவது கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாவர். குறிப்பாக புலிகளுக்கு எதிரான அரசியல் குழுக்களோடு தொடர்புடையவர்கள் அல்லது தொடர்புடையவர்கள் என்று கருதப்பட்ட வர்கள் கொல்லப்பட்டார்கள். 2005ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பந்தோபஸ்துப் படைகளுக்கு எதிராக வும் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

2005ஆம் ஆண்டு மிக உயர்தரத்திலிருந் தவர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம், அரசாங்கப் புலனாய்வு அதிகாரிகளான மேஜர் முத்தலிப், கோர்ணல் மீடின், புலிகள் இயக்கத்தின் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவர் கௌசல்யன் உட்படப் பலர் கொல்லப்பட்டனர். இதனால் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் கண்காணிப்புப் பணியும் கேள்விக்குள்ளாகியது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய்த்தின் ஆய்வுப் பிரிவு நடத்தியதாகப் பிந்திய பொதுசன அபிப்பிராயங்களின்படி சிங்களவர்களில் 56 சதவீத மானவர்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திறமைகளில் நம்பிக்கை கொள்ளவில்லை. 31 சதவீதமானவர்கள் இதுகுறித்து எதுவும் தெரிவிக்க முடியாதவர்களாக இருந்தனர். இதனால் இலங்கை யின் சமாதான முன்னெடுப்புகளில் தாம் வகிக்கும் பாத்திரம் பற்றி நோர்வே தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட யுத்தச் சூழலில் கண்காணிப் பாளர்களின் உயிர்கள் கூட ஆபத்துக்குள்ளா கியுள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர் ஒருவர் 'பேர்ள் குரூஸ்' கப்பலிலிருந்தபோதே அதனை மூழ்கடிக்க புலிகள் எடுத்த முயற்சி தோல்வியுற்றமை யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு உயிரா பத்து அதிகரித்து வருவதற்கு ஓர் உதாரணமாகும். புலிகள் இயக்கம் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிலைப்பாட்டை மேலும் சிக்கலாக்கியுள்ளது. அரசியல் நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையினால் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பது நோர்வேயே என்று கூற வேண்டி யுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத் தடையை அடுத்து டென்மார்க் பின்லாந்து, சுவீடன் போன்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கண்காணிப்புக் குழுவிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று புலிகள் இயக்கம் கோரி யமை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மேலும் பலவீனப்படுத்தியுள்ளது. இரு தரப்புகளுமே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு ஆதரவு வழங்குவதற்குப் பதிலாக அதுகுறித்து கூடிய அள வுக்கு விமர்சிக்கத் தொடங்கியுள்ளன. ஐந்து கேள்வி களைச் சமர்ப்பித்து அரசாங்கத்திடமிருந்தும் புலிகள் இயக்கத்திடமிருந்தும் ஆதரவைப் புதிதாகப் பெறுவ தற்கு எரிக் சொல்ஹெய்ம் முயற்சித்த போதும் புலிகளின் கோரிக்கைக்குப் பதிலளிக்க வேண்டிய நிலையில் பந்து இப்பொழுது நோர்வே தரப்புக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் சம்பந்தப் பட்ட தரப்புகளுக்கு விசுவாசமான ஒரு கடப்பாடு இல்லாத நிலையில், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் வெற்றிபெற வேண்டு மானால் அதன் வெற்றி அரசினதும், புலிகளினதும் ஆதரவிலேயே முற்றுமுழுதாகத் தங்கியுள்ளது. அது கிடைக்கக் கூடிய சாத்தியம் இல்லையென்பதுபோல் தென்படுகிறது.

*நன்றி : டெயிலி மிரர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—


"அப்படி தானே செஞ்சேன்!" என்று இடைமறித்தார் எம்.ஜி.ஆர்.

"அதுதாண்ணே பத்தாத மாதிரி பட்டுச்சு எனக்கு" என்றேன் நான்.

இன்னும் நிறையப் பூவெத் தின்னுருக்கணும்கறீங்களா நீங்க?'

"ஆமாண்ணே!"

"யோவ்! ஹீரோயின் தலையில வெச்சுக்கிட்டு வந்தது மல்லிப்பூ.. ரெண்டு பூவெத்



தின்னாலே பத்து பாகக்காய்த் தின்ன மாதிரி கசக்குதய்யா, நீர் தின்னு பாரும்!' என்றார் எம்.ஜி.ஆர்.

"மல்லிப்பூ கசக்கும்னு எனக்குத் தெரியும்ண்ணே, அதுக்கு பதிலா ஹீரோயின் தலையிலே ரோஜாப்பூவே வெச்சு, நீங்க நிறைப் பிச்சுத் திங்கிற மாதிரி எடுத்தா, நல்லாருக்கும்னு என் கருத்து..." என்று தயங்கியவாறே நான் சொன்னேன்.

"இப்ப சொன்னீங்களே - இது கரெக்ட். நீங்க சொல்ற மாதிரி ரோஜாப்புவே வெச்சு - இன்னொரு Take எடுத்துருவோம்.." என்றார் எம்.ஜி.ஆர். இப்போது அவர் முகத்தில் கோபம் மறைந்து மெல்லிய புன்னகை படர்ந்தது.

இந்தச் சம்பவத்தை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், ஒருசில எழுத்தாளர்கள் பெரிய கதாநாயகனிடமோ, கதாநாயகியிடமோ தங்கள் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லுவதால், தங்கள் பிழைப்பிற்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சி, மௌனம் காக்கிறார்கள். அப்படி அவர்கள் அஞ்சி நிற்க அவசியமில்லை என்பது என் கருத்து. சிலர் நம் கருத்தை ஏற்கலாம். சிலர் மறுக்கலாம். இருப்பினும் ஊதவேண்டிய சங்கை ஊதி வைப்பதுதான் ஒரு எழுத்தாளனுடைய கடமையாகும்.

இன்றைய சினிமாவில் கருத்துப் பரிமாற்றம் என்பது, காணாமல் போய்விட்டது. தமிழ் சினிமாவின் தரம் தாழ்ந்து போனதற்கு இதுவும் ஒரு காரணம்.

நான் கதை வசனம் எழுதிய படங்களில், அதிகமாக இயக்குநராகப் பணியாற்றியவர் என் அன்பிற்குரிய நண்பர் திரு.எஸ்.பி. முத்துராமன் ஆவார்.

எனக்கும் அவருக்கும் திரைக் கதையிலும், உரையாடல்களிலும் காரசாரமான விவாதங்கள் நடப்பதுண்டு. இருப்பினும், அந்த விவாதங்களை ஆரோக்கியமானவையாக ஏற்கும் மனப்பக்குவம் நண்பர் முத்துராமனுக்கு உண்டு.நான் சந்தித்த நல்ல இயக்குநர்களின் வரிசையில் திரு. முத்துராமனும் ஒருவர். நண்பர் முத்துராமன், "திடீர்" இட்டிலி போல் திரையுலக இயக்குநராகப் பரிமாணம் பெற்றவரல்ல. திரைப்படங்களின் நுட்பங்களை ஏவி.எம்.மின் நிழலிலும், தமிழின் நுட்பங்களைக் கண்ணதாசன் நிழலிலும் இருந்து கற்றவர். கண்ணதாசன் நடத்திய "தென்றல்" இதழில் ஆரம்ப நாட்களில் பணியாற்றியவர்தான் திரு.முத்துராமன்.

இதுவரையில் நான் எழுதிய உரையாடல்களை, என் எண்ணம்போல் திரையில் வெளிப்படுத்தியவர் முத்துராமன் ஒருவர்தான் என்பதை நான் மறப்பதற்கில்லை.

பிரம்மாண்டமான Back drops , நவீனமான Back lighting என்றெல்லாம் பம்மாத்து வேலைகளைச் செய்து, கதையைக் கோட்டை விடும் காரியத்தை முத்துராமன் கனவிலும் செய்ததில்லை.

நவீன உத்திகளையெல்லாம், அவர் நன்கு அறிந்தவர் தான். இருப்பினும் சந்தனம் அதிகமாக இருக்கிறதென்று, அதை வழித்துப் புட்டத்தில் பூசிக்கொள்ளும் பைத்தியக்காரத்தனம் அவருக்கு உடன்பாடல்ல.

குறைந்த செலவில், நிறைந்த அழகைக் காட்சியில் கொண்டுவர வேண்டுமென்று கருதுபவர் அவர். Yes, Muthuraman is Producer 's Delight.

(தொடரும்.......)






# சமத்துவம்

ஒருவர் செய்வதை அதே போல் இன்னொருவர் செய்வதென்பது புதுமையானதொன்றல்ல!

இப்போது இது ஒரு பொது விடயமாகிவிட்டது.

இங்கே நீங்கள் காண்பதும் அவ்வாறானதொரு விடயமே!

2006 ஆம் வருடத்துக்கான ஆணழகனைத் தெரிவு செய்யும் போட்டியின் போது பெண் ஒருவர் ஓர் ஆண் செய்யும் செயலைக் செய்து காட்டுகிறார்.

இதுதான் சமத்துவமோ?

# கஞ்சா பாடகி

பிரபல இசைக்குழுவான கேர்ள்ஸ் எலவ்ட் தொடர்பில் புதிதாக ஒரு சர்ச்சை கிளம்பியுள்ளது.

இக்குழுவில் உள்ள கிம்வேர்லி வோல்ஸ் பகிரங்கமாக கஞ்சா புகைக்கிறார் என்பது தான் சர்ச்சைக்குரிய விடயம்.

இச்செயல், குழுவின் மரியாதையைக் கெடுப்பதுடன் இரசிகர்களிடையே தவறான முன்மாதிரியைக் கொடுக்கும் என்பது இக்குழுவில் உள்ள ஏனையோரின் கருத்தாகும்.

வோல்ஸ் கஞ்சா புகைக்கும் காட்சி ஒன்று அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்த நிலையிலேயே இந்த சர்ச்சை கிளம்பியுள்ளது.




தான் பகிரங்கமாக கஞ்சா புகைத்தது தவறு என்பதை வோல்ஸ் உணர்ந்துள்ளார். இதற்காக அவர் பகிரங்கமாக மன்னிப்பும் கேட்டுள்ளார்.

நல்ல பாடகி!

# தள்ளாடிய நடிகை



கடும் மழை பெய்து கொண்டிருந்த போது ஒரு கார் தள்ளாடிக் கொண்டே வருவதை அமெரிக்கப் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் கண்டார்.


உடனே அவர் வீதியில் இறங்கி அந்தக் காரை வழிமறித்து உள்ளே பார்த்த போது காருக்குள் போதையில் இருந்தார் ஓர் இளம் நடிகை.

'லொஸ்ட்' எனும் திரைப்படத்தில் நடித்துள்ள மிஷெல் ரொட்ரிகுஸ் என்பவர் தான் அந்த நடிகை.

குடிபோதையில் வீதியில் வாகனம் ஓட்டிச் சென்ற இவருக்கு சட்டம் கொடுத்த தண்டனை 5 நாட்கள் மக்கள் பணி செய்ய வேண்டும் என்பதாகும்.

ஆஹா...

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




இந்த நிறுவனம் இராணுவத் தளபாடங்களைச் சப்ளை செய்கின்ற நிறுவனமாகும்.

லார்கின்ஸ் சகோதரர்களின் நடவடிக்கைகள் 1981இல் இருந்தே இந்திய உளவுத் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வந்தது. இவர்கள் வாழ்ந்த ஆடம்பர வாழ்க்கையும், அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததும் சந்தேகங்களைத் தோற்றுவித்தது.

இவர்களைக் கையுங்களவுமாகப் பிடிப்பதற்கு இந்திய உளவுத்துறையினர் ஒரு திட்டம் வகுத்தனர். கேப்டன் ஜெகஜீத் சிங் விமானப் படையில் வேலை பார்த்தவர். அதற்குப் பிறகு ஜெகஜீத் சிங் ஏர் வைஸ்மார்ஷல் ராகவேந்திராவின் கீழ் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். இந்திய உளவுத் துறையினர் அவரைத் தங்களின் உதவிக்கு அழைத்துக் கொண்டார்கள். அலுவலகத்திலேயே உட்கார்ந்து வேலை பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது என்றும், பரபரப்பாக எதையாவது செய்ய வேண்டுமென்று தோன்றுவதாகவும், யாராவது தனக்குப் பண உதவீ செய்தால் அவர்களுக்குத் தன்னால் விமானப் படை பற்றிய ரகசியத் தகவல்களைக் கொடுக்க முடியும் என்றும் கென்னத் லார்கின்ஸிடம் சென்று ஜெகஜித்சிங் சொன்னார். அப்படி சொல்லும்படியாக உளவுத்துறையினர் அவரை ஏற்பாடு செய்திருந்தார்கள். ஜெகஜித் சிங் வேலை பார்த்த இடத்திலிருந்து ரகசியங்களை அவர் அறிந்து சொல்வது சாத்தியமானதால் கென்னத் இதை நம்புவதற்கு சிரமமிருக்க வில்லை.,

இந்தியா உபயோகித்துவந்த MIG விமானங்கள் பற்றிய ரகசியத் தகவல்களைத் தனக்கு கொடுக்க முடியுமா என்று 1983 மார்ச் மாதம் இருபதாம் திகதி கென்னத் கேட்டார். அது சம்பந்தமாக ஜெகஜித் சிங் கொடுக்கும் ஒவ்வொரு தஸ்தாவேஜு க்கும் முப்பதாயிரம் ரூபாய் கொடுக்க கென்னத் ஒப்புக்கொண்டார்.

ஜெகஜித்சிங் இந்த பேரத்தை உளவுத் துறையினரிடம் தெரிவித்தார். MIG-23 பற்றிய தகவல்கள் அடங்கிய தஸ்தாவேஜு களை ஜெகஜித்சிங் லார்கின்ஸ் சகோதரரிடம் ஒப்படைத்தார். இரண்டு சகோதரர்களின் நடமாட்டங்களையும் இந்திய உளவுத்துறையினர் நிழல் போல் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். லார்கின்ஸ் சகோதரர்கள் தஸ்தாவேஜு களை CIA ஆட்களிடம் ஒப்படைக்கும் போது, அவர்களைக் கையுங்களவுமாகப் பிடிக்க வேண்டும் என்பது இந்திய உளவுத்துறையினரின் திட்டம். லார்க்கின்ஸ் சகோதரர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல அவர்கள் முயற்சித்தபோது கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான ஆதாரத்தைக் காட்டியபோது பிரான்க் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதோடு சம்பந்தப்பட்டிருந்த CIA அதிகாரி ஹாரிவெதர்பீ இந்தியாவிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டார்.

பிரான்க் தான் இந்தியாவுக்குத் துரோகம் இழைக்க வில்லை என்றும், தான் சேகரித்த தகவல்கள் இந்திய பாதுகாப்புக்கு எந்த விதத்திலும் பாதகம் விளைவிக்கக்கூடியது அல்ல என்றும் வாதாடினார். தன்னிடமிருந்து தகவலைக் கேட்டு பெற்றவர்கள் பாகிஸ்தானின் ஆதரவாளர்கள் என்று தனக்குத் தெரிந்திருந்தால் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கமாட்டேன் என்றும் குறிப்பிட்டார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# வாய்ப்புத் தரும் பாடகி

பிரபல பாடகி பெயோன்ஸ் நோவ்லஸ் தனது புதிய பாடல்கள் அடங்கிய அல்பத்தை எதிர் வரும்செப்டம்பர் மாதம் வெளியிடவுள்ளார்.


தற்போது இவர் இளம் பாடகர்களுக்குப் பயிற்சி வழங்கும் நல்லதொரு திட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு பயிற்சியளிக்கப்படும் பாடகர்களில் சிறந்த பாடகர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான தகுதி போட்டியும் வைத்து அதிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இவர் வாய்ப்பு வழங்க உள்ளாராம்.

இப்படி வாய்ப்பு பெறுபவர்கள் பெயோன்ஸுடன் உலக வலம் செல்லலாம்.!



# ஈராண்டு நீங்காத நினைவுகளில்...




தாயின் மடியில் 22 - 11 - 1955

தாயக மண்ணில் 10 - 08 - 2004

**ஆத்மலிங்கம் ரமணி**
**(தோழர் பாண்டியன்)**

(இணை அமைப்பாளர்)




தாயின் மடியில் 06 - 06 - 1957

தாயக மண்ணில் 16 - 08 - 2004

**கந்தசாமி பாலநடராஜ ஐயர்**
**( தோழர் சின்னபாலா )**

(ஈ.பி.டி.பி.யின் ஊடகச் செயலாளர்)



தாயின் மடியில் 22 - 09 - 1972

தாயக மண்ணில் 21 - 07 - 2004

**வேலாயுதம் ரவீந்திரன்**
**(தோழர் கமலன்)**

(முன்னாள் ஆலையடி வேம்பு பிரதேச சபைத் தலைவர்)

**தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் பெற்றுத் தராத புலிகளின் வஞ்சகத் தனத்தை எதிர்த்து நியாயம் கேட்டீர்கள் என்பதற்காக... புலிகளினால் சுடப்பட்டீர்கள். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை குறிவைக்கும் புலிகளின் தமிழ் இனத் துரோகம் தொடர்கிறது. உங்கள் ஒவ்வொருவரின் மரணத்தின் போதும் இன்னுமின்னும் மாற்றுக் குரல்கள் ஜனனித்துக் கொண்டிருக்கிறது.**

**தோழர்களே உங்கள் இழப்புக்களையும் சுமந்து கொண்டு எங்கள் மக்கள் பணி தொடரும்...**


**- தோழர்கள், உறவுகள்**

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)




**ஆ**யுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு வந்த வியட்கொங் இராணுவத்தினர் பெரிதும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருந்தனர். ஆனாலும் அவர்கள் எந்த விதத்திலும் தங்கள் நிதானத்தை இழக்கவில்லை. ஆனால் அங்கு விமானப் படைத் தளபதியோ தன் நிதானத்தை முற்றாக இழந்து அவளிடம் சரண் புகுந்து கொண்டிருந்தார். வியட்கொங் இராணுவத்தினர் தங்கள் வேலையை முடித்து விட்டு தங்கள் மறைவிடத்தை நாடிச் சென்றிருந்தார்கள். அ ப்போது கூட விமானப் படைத் தளபதி அவளின் பிடியில் கைதாகியிருந்தார். அவளின் ஒவ்வொரு அசைவையும் அவர் ரசித்துக் கொண்டிருந்தார். அவளும் சும்மாவல்ல, சளைக்காமல் அவருக்கு ஒத்துழைத்துக் கொண்டிருந்தார். திருப்தியடைந்த விமானப்படைத் தளபதி அவளின் காதுகளுக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் நிலைமை தலைகீழாக மாறிவிட்டிருந்ததை தொலைபேசி மூலம் அறிந்து கொண்ட ஜனாதிபதி ஜோன்சன் மிகவும் கொதித்தார். அவர் உடனடியாகக் கேட்டார ! விமானப் படையினரின் உதவியை நீங்கள் கோரவில்லையா? என்று. அங்கிருந்து




வந்த பதில் அவரை இன்னும் கோபமடையச் செய்தது. விமானப் படைத் தளபதி எங்கே? என்று அவர் எழுப்பிய கேள்விக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. காரணம் விமானப் படைத் தளபதி எந்த இடத்திலும் இருக்கவில்லை. அவர் அவளின் பிடியில் அல்லவா சிக்கியிருந்தார்.

ஒருவாறாக விமானப் படைத் தளபதி எங்கிருக்கிறார் என்று தெரிந்து கொண்ட ஜனாதிபதி, விமானப்படைத் தளபதியை தேடிச் சென்றார். அவர் இருக்கும் ஹோட்டலின் அறையில் ஜனாதிபதி வரும் வரை விமானப் படைத் தளபதிக்கு மயக்கமே இருந்தது. ஹோட்டல் அறைக்கு மிகவும் கோபத்தோடு வந்த ஜனாதிபதி, அங்கிருக்கும் மெய்க்காப்பாளர்களை வாயில் வந்தபடியெல்லாம் திட்டினார். அவர்களிடம் உங்களின் தளபதி எங்கேயடா என்று மிகவும் கோபத்தோடு கேட்டார். அவர் அந்த அறையில் இருப்பதாக அவர்கள் கூறினார்கள். அந்த அறை என்றால் எது என்று கேட்டுக் கொண்டே சாத்தப்பட்டிருந்த அறையை மிகவும் வேகமாகத் தட்டினார். தட்டிய வேகத்தில் திடுக்கிட்ட விமானப் படைத் தளபதி "யாரடா அங்கு" என்று மிகவும் கோபமாகக் கேட்டுக் கொண்டே கதவைத் திறக்கச் சென்றார்.

அதற்கிடையில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்த அவள் தன் உடைகளை மிகவும் வேகமாக அணிந்து கொண்டு எதற்கும் தயாராக இருந்தாள்.

உள்ளாடை மட்டும் அணிந்து கொண்டு அறைக் கதவை திறந்த விமானப் படைத் தளபதி மிகவும் ஆச்சரியமும் கலவரமும் அடைந்தார். அவர், திடீரென ஜனாதிபதி இப்படி இங்கெல்லாம் வருவார் என்று எதிர்பார்க்கவில்லை வந்த ஜனாதிபதி ஒன்றும் பேசாமல் அவரைப் பார்த்து "இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்றார் அதற்கு விமானப் படைத் தளபதி பதில் கூற முதலே அறையை எட்டிப் பார்த்த ஜனாதிபதி, "அப்படியா நீ இங்கு பெண்களுடனா உல்லாசம் காண்கிறாய்" என்றார். என்ன நடந்தது தெரியுமா என்றார். ஏதும் அறியாமல் முழித்த விமானப் படைத் தளபதி தனது மெய்க்காப்பாளர்களைப் பார்த்தார். அவர்களும் ஏதும் அறியாமல் இருந்தார்கள். தங்கள் தொலைபேசிகளை அவர்கள் நிறுத்தி வைத்திருந்ததால் அவர்களும் எதனையும் அறிந்திருக்கவில்லை "உனக்குப் பெண்கள் முக்கியமென்றால் போய் உன் வீட்டில் இதையெல்லாம் வைத்துக் கொள். எனக்கு நாடு தான் முக்கியம். ஆகவே உனக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் இருக்கும் நிலையில் உன்னையெல்லாம் எப்படி படைத் தளபதியாக வைத்துக் கொள்வது?" என்று கொதித்துத் தள்ளினார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த விமானப்படை தளபதியை "பார்த்து போய் முதலில் ஆடைகளை அணிந்து கொண்டு வா" என்றார். அவரும் பிள்ளைமாதிரி அறைக்குள் வந்து ஆடைகளை அணிந்து கொண்டிருக்கையில் அவளை அழைத்த ஜனாதிபதி, அவளைத் தீவிரமாக விசாரித்தார் அவளும் அப்போது தான் ஆடைகளை அணிந்திருந்ததால் கொஞ்சம் ஆடைகள் முக்கிய இடங்களில் விலகியே இருந்தது. அதனை அடிக்கடி வெளியில் காட்டிக் கொண்டுதான் அவளும் ஜனாதிபதி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறிக் கொண்டிருந்தாள். அவளின் சில அசைவுகள் ஜனாதிபதிக்கும் பிடித்துக் கொண்டதால் அவளின் விலாசத்தை வாங்கி வைக்கும்படி தனது செயலாளருக்கு மெல்லிய புன்னகையுடன் கட்டளையிட்டார். அவளை விட்டுவிட்டு விமானப் படைத் தளபதியின் பக்கம்




திரும்பிய ஜனாதிபதி, "உடனடியாக என் அலுவலகத்திற்கு வா" என்று கூறி விட்டுச் சென்றார். அவரின் பின்னால் பூனை போல் பதுங்கிப் பதுங்கிச் சென்றார். விமானப் படைத் தளபதி.

(தொடரும்)




மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்,
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்;
நான்வி ரும்பிய காளி தருவாள்.

- சுப்பிரமணிய பாரதியார்



# யார் சிறந்தவர்?



சிறுதாவூர் என்ற கிராமத்தில் கருவேந்தன் என்ற விவசாயி வாழ்ந்தான். அவன் நல்ல உழைப்பாளி. எனவே, அவனது நெற்களஞ்சியங்கள் நிரம்பி வழிந்தன. எல்லாரும் அவனிடம் தான் நெல் வாங்கினர். இதனால் அவன் மனதில் பெருமை உண்டானது. மறுநாளிலிருந்து அவன் பேச்சு, தோரணை எல்லாமே மாறிப் போய்விட்டது. அவனிடம் அரிசி, நெல் போன்றவை வாங்க வருபவரிடம் அவன் சொன்னான்:

"என்னை விடப் பெரியவன் இந்த உலகிலேயே இல்லை. நான் மட்டும் இவ்வூரில் இருந்து விவசாயம் செய்யா விட்டால் உங்கள் நிலைமையை எண்ணிப் பாருங்கள். சாப்பாட்டுக்கே கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும். நான் சொல்வது உண்மையா, இல்லையா?" என்று கேட்டான். வேறு வழியின்றி அவனை எதிர்க்க துணிவு இல்லாமல் மக்கள் ஆம், ஆம் என்று தலையாட்டி விட்டு, அவனிடம் அரிசி, நெல் ஆகியவற்றைக் கொள்முதல் செய்துகொண்டு சென்றனர். அன்றிலிருந்து அவன் பெயர் கருவேந்தன் என்பதை மக்கள் மறந்து போனார்கள். பட்டப் பெயர் வைத்து விட்டார்கள்.

"உலகிலேயே உயர்ந்தவன் கடைக்குப் போனாயா? நெல் வாங்கினாயா? உலகிலேயே உயர்ந்தவன் இன்று என்ன

## பாப்பா முரசு சிறுகதை

பீற்றினான்?" என்று கருவேந்தனுக்குத் தெரியாமல் ஒரு பட்டம் அவனை தொற்றிக் கொண்டது.

ஒரு சமயம் கருவேந்தனின் வீட்டைப் பழுது பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதைச் சீர் செய்ய வேண்டும் என்பதற்காகக் கொத்தனாரைக் கூப்பிட்டு அனுப்பினான். இவனால் ஏற்கனவே புண்பட்ட கொத்தனார், 'இதுதாண்டா சமயம்' என்று நினைத்து "நீதான் உலகிலேயே உயர்ந்தவனாயிற்றே...உனக்குப் போய் நான் என்ன வீடு கட்டித் தருவது?" என்றான்.

கலப்பையைச் சீர் செய்து தரும்படி வேண்டினான்.

ஏற்கனவே கருவேந்தனின் பேச்சினால் புண்பட்டிருந்த கொத்தனார், "நீதான் உலகிலேயே உயர்ந்தவனாயிற்றே. உன்னால் ஒரு கலப்பையைக் கூடவா சரி செய்ய முடியவில்லை?" என்று கேட்டான். அப்போதுதான் தன் தவறுணர்ந்தான் கருவேந்தன்.

"உழக்கூடிய நான் உயர்ந்தவன் என்றால் மக்கள் வாழ வீடு கட்டித் தரும் நீ என்னை விட உயர்ந்தவன்தானே! இதை நான் மற்றவர்களிடம் சொல்லலாமா? மனதுக்குள் வைத்திருக்கிறேன்!" என்றான். இந்தப் பதிலில் திருப்தியடைந்த கொத்தனார் வந்து வீட்டை சரிபார்த்துக் கொடுத்தான். இன்னொரு நாள் வீட்டில் மரச் சாமான்கள் செய்ய ஆசாரியைக் கூப்பிட்டு அனுப்பினான் கருவேந்தன். அவனும் இவனைத் திட்டி அடித்து அனுப்பினான். அவனிடம், "வீட்டை அலங்கரிக்கும் பொருட்களைச் செய்யும் நீ என்னை விட உயர்ந்தவன் அல்லவா?" என்றான்.

அதன் பிறகே காரியம் நடந்தது. இப்படியாக இவன் செல்லும் இடங்களில் எல்லாம் நன்றாக மொத்து வாங்கினான். அப்பொழுதுதான் ஒரு உண்மையை உணர்ந்தான் கருவேந்தன். ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொருவர் உயர்ந்தவர்கள். யாருமே தாழ்ந்தவர்கள் இல்லை. இந்த உலகில் எல்லாருடைய உதவியும் எல்லாருக்கும் தேவைப் படுகிறது. எல்லாருமே ஒவ்வொரு விதத்தில் உயர்ந்தவர்கள்தான். இவர்கள் எல்லாரையும் படைத்து ஆளும் இறைவன் ஒருவனே உயர்ந்தவன் என்ற உண்மையை உணர்ந்தான் கருவேந்தன்.

# ஆத்திசூடி

## ஒப்புரவொழுகு

**நீ உலக நடைமுறைகளைத் தெரிந்து, அதற்கேற்ப நடந்து கொள்.**

-ஔவையார்

*எஸ். நிரஞ்சலா, கண்டி.*

# வழிகாட்டி

நாயைப் பார்த்து – உயர்
நன்றியைக் கற்பாய்! பூமித்
தாயைப் பார்த்து –
எதையும்
தாங்கும் பொறுமை கற்பாய்!.

ஊரும் எறும்பைப் பார்த்து
உழைப்பைக் கற்பாய் –
ஒன்றாய்ச்
சேரும் காகத்தைப் பார்த்து
சமத்து வத்தைக் கற்பாய்.

தேனைச் சேர்க்கும்
பூச்சியில்
தேடலைக் கற்பாய் – கவரி
மானைப் பார்த்து –
வாழ்வில்
மானம் பெரிதெனக் கற்பாய்.

நரியைப் பார்த்து – நீயும்
நல்ல தந்திரம் கற்பாய்!
அரிய பசுவைப் பார்த்து
அமைதி தன்னைக் கற்பாய்.

வெண் புறாவைப் பார்த்து
வெற்றிச் சமாதானம் கற்பாய்
அன்புப் பாப்பாவுக்கு இந்த
அஃறிணை வழிகாட் டியாம்.

*–கலைமகன் அன்ஸார்,*
*கிண்ணியா – 02.*

# அதிசய உலகம்

## கொரில்லாக் குரங்கு!


**ஒரு** கொரில்லாக் குரங்குக் கூட்டத்தில் 15 முதல் 20க்கும் மேற்பட்ட குரங்குகள் இருக்கும். கூட்டத்தின் தலைமைப் பொறுப்பை வகிப்பது என்பதில் இரு ஆண் குரங்குக்கு இடையே கடுமையான சண்டை நடக்கும். வெற்றி பெற்ற குரங்கு ஆட்சியைப் பிடிக்கும். தோற்ற கொரில்லா கொல்லப்படும் அல்லது கூட்டத்திலிருந்து வெளியேற்றப்படும்.



கொரில்லாக் குரங்குகள் வசிப்பதற்கு ஏற்ற இடங்கள் மலைப்பகுதியும், மலையையொட்டிய தாழ்வான பகுதிகளும்தான். இங்கு கொரில்லாக் குரங்குகளுக்குத் தேவையான உணவு, வசிப்பிடம், இயற்கையாகவே அமைந்துள்ளது. பொதுவாகக் கொரில்லாக் குரங்குகள் தாவரங்களை அதிக அளவில் தின்னுகின்றன. பழங்கள், கிழங்குகள் கிடைத்தாலும் தின்னும். பூச்சிகளையும் விட்டு வைப்பதில்லை.

கொரில்லாக் குரங்குகள் கோபத்தைக் காட்டும்போது நின்ற நிலையில் முன்னங்கால்களால் தங்கள் மார்பில் அடித்துக் கொள்கின்றன. குட்டிகளுக்குப் பெரிய குரங்குகள் விளையாட்டுக் காட்டும். அப்போது குட்டிகள், எவ்வாறு உயிர் வாழ்வதற்கு சாகசங்கள், வீரம் அவசியம் என்பதைப் பெரிய குரங்குகள் சொல்லித் தருகின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.08.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 656**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும்.போட்டி இல: 654

**பரிசுக்குரியவர்:**
மர்ஸியா நாபிர், இல. 11/2A, பாகிர் மாகார் அவனியூ, மருதானை, பேருவளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். ஜனார்த்திக்கா, இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | கே. பிரசாந்தி, 89,பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| ரா. திவ்யா, 175. லோவர் வீதி, பதுளை. | ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்த. |
| தி. தனுஜா, தரம் -1, விவேகானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு. | கி சர்தசன், இல. 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன். |
| பாத்திமா றுஸ்தா, தரம் - 3, இல. 4/1, பிஸ்கால் வீதி, அக்கரைப்பற்று - 02 | சாஜிதா நஸார், தரம் - 3A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12. |
| சஹனா, தரம் - 6, கிங்ஸ்டன் சர்வதேக் கல்லூரி முகத்துவாரம், கொழும்பு - 15. | டி. ஆர். ஆன் டிலுக்ஷி, தரம் 6சி, நல்லாயன் அரசினர் தமிழ் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை. |

# சில விடுகதைகள்


1. கை, கால் இல்லாதவன் காடு, மலை தாண்டுவான் - அவன் யார்?
2. காற்றைக் குடித்தவன் கைகளில் தவழுவான் - அவன் யார்?
3. குண்டுக் குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்து நிற்கும் - அவன் யார்?
4. கைக்குள் அடங்குவான் காதோரம் நாள் தோறும் பேசுவான் - அவன் யார்?
5. கையடக்கக் கத்தி கையோட இருக்கும் அது என்ன?
6. வெள்ளைச் சிப்பாய்க்கு கறுப்புக் குல்லா; அறைக்குள் இருந்தாலும் அனல் வீச்சில் தீப்பிடிக்கும் - அது என்ன?
7. தச்சர் செய்யாத பெட்டி தானே திறந்து மூடும் பெட்டி - அது என்ன?
8. துளித்துளியாய் கண்ணீர் விட்டு இருளைத் தூர விரட்டுவான். - அவன் யார்?
9. பற்கள் பலவும் உண்டு. ஆனாலும் எதையும் தின்ன முயற்சிப்பதில்லை இவன் - அவன் யார்?
10. பச்சை இலை அசைந்தால் பாம்பு நெளிந்து ஓடுது - அது என்ன?

**விடைகள்**

1. வெள்ளம்
2. காற்று
3. தேங்காய்
4. செல்போன்
5. நகம்
6. தீக்குச்சி
7. கண் இமை
8. மெழுகுவர்த்தி
9. சீப்பு
10. ரயில்.

# தகவல் பெட்டி

## அசத்தல் கிளிக்



**சாகசங்கள்** நிகழ்த்துவதற்கு தனிச்சிறப்பும், தனிப் பயிற்சியும் வேண்டும். இங்கும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ரொபர்ட் நியூபிரேயும் மத்திவும் சேர்ந்து நிகழ்த்திய சாகசம் இது. இதனை தத்ரூபமாகப் படம் பிடித்திருக்கும் படப்பிடிப்புக் கலைஞரை பாராட்டத்தான் வேண்டும். கிட்டத்தட்ட 10 மீற்றர் உயரத்தில் இவர்கள் சாகசம் செய்யும் போது மிகத் துல்லியமாக கெமராவுக்குள் அடக்கிய ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பத்திரிகைப் படப்பிடிப்பாளரின் சாதனையே இது.

## புராதன நடனம்



**அமெரிக்கா** எவ்வளவுதான் முன்னேறினாலும், அங்கு அதிகமாக இருப்பவர்கள் செவ்விந்திய கலப்பினத்தவர்களே. இவர்கள் தங்கள் பாரம்பரியங்களை எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்க விரும்பமாட்டார்கள். அந்த வகையில் நியூயோர்க் நகரில் இருக்கும் செவ்விந்திய கலப்பினத்தவர்கள் தங்களின் விடுதலை தினத்தினை, தங்கள் பாரம்பரிய நடனத்துடன் கொண்டாடிய காட்சியே இது.




## கள்ளத் தோணி

**அமெரிக்காவின்** புளோரிடா மாநிலத்தில் இருந்து கியூபா நாட்டுக்கு திருட்டுத்தனமாகத் தப்பிப் போவதற்கு கையாளும் வழியே இது. 1951ஆம் ஆண்டு போருக்காக பயன்படுத்தப்பட்ட இராணுவ ட்ரக் வண்டியே இங்கே படகாகப் பயன்படுத்தப்படுகின்றது. வெற்று கொள்கலன்களை அடுக்கி அதன் மேல் இந்த ட்ரக் வண்டியினை அழகாகப் பொருத்தி, வேகப் படகொன்றினை தயாரித்துள்ளனர். இப் படகு 40 மைல் வேகத்தில் செல்லக்கூடியதாகும். இப் படகு அமெரிக்காவிலிருந்து கியூபாவுக்குச் செல்லும்போது அமெரிக்க கடற்படையினால் பிடிக்கப்பட்டது.

## வெற்று வண்டி

**இந்தோனேசியாவின்** தலைநகரான ஜகர்த்தாவில் கொகோ கோலா வெற்றுக் கொள்கலன்களைப் பாவித்து ட்ரக் வண்டி ஒன்றினை வடிவமைத்துள்ளனர். இந்த ட்ரக் வண்டியினை அமைக்க 57,000 கொகோ கோலா வெற்றுக் கொள்கலன்கள் பாவிக்கப்பட்டன. அத்துடன் இதனை உருவாக்க 19 வேலையாட்களுக்கு 9 நாட்கள் எடுத்ததாம். இது கொகோ கோலா நிறுவனத்தின் விளம்பரத்திற்காக அமைக்கப்பட்டதாம்.



**வெளிநாடுகளில்** ஒரு மிருகம் காணாமல் போனால் கூட பொலிஸாரினை வைத்து எப்படியாவது கண்டுபிடித்துவிடுவர். அந்த வகையில் இங்குள்ள காட்டெருமை மாடுகள் காட்டிலிருந்து தப்பி வந்து நகரத்திற்குள் புகுந்து விட்டன. மிகவும் அபாயகரமான இக் காட்டெருமைகள் பாதையில் சென்ற இரண்டு வாகனங்களை அடித்து நொறுக்கியதால் உடனடியாக ஸ்தலத்திற்கு வந்த பொலிஸார் இக் காட்டெருமைகளை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் போராடி பிடித்தனராம். பின்னர் மிருகக் காட்சிச்சாலையில் அடைக்கப்பட்டதும் இன்னொரு தகவல்.

## ஒன்றாக சறுக்குவோம்!



**நீர்ச்சறுக்கு** விளையாட்டுக்களில் அநேகமாக ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோதான் பங்குபற்றுவது வழமை. உலக சாதனை என்று வந்துவிட்டால் எத்தனை பேரும் பங்குபற்றலாம். அந்த வகையில் இங்கிலாந்து நாட்டின் ஷென் லிவிஸ் கடற்கரையில் 12 ஆண்களும் 2 பெண்களும் சேர்ந்து மொத்தம் 14 பேர் ஒரே நீர்ச்சறுக்கு பலகையில் நீர்ச்சறுக்கு சாதனை ஒன்றினை நிகழ்த்தியுள்ளனர். இந்த நீர்ச்சறுக்குப் பலகை 37 அடி நீளமும் 400 இறாத்தல் நிறையுமுடையதாம்.

## சுற்றி வளைப்பு





பிரசாந்த்
புலன் விசாரணை (பாகம் 2)

## ஐஸ்வர்யாவின் சுயசரிதை

ஐஸ்வர்யாராய் தனது வாழ்க்கை வரலாற்றை சுயசரிதையாக எழுதுகிறார். விரைவில் இது வெளியாக இருக்கிறது. வெளிநாட்டுப் பட விழாவொன்றில் பேசும்போது, எனக்குள் நிறைய சோகம் இருக்கு. அதைப் புத்தகமாக வெளியிடப் போகிறேன் என்றார் ஐஸ்வர்யா. அதை எழுதி முடித்து விட்டாராம்.

சிறு வயதில் உறவினர்களால் ஐஸ்வர்யா பாலியல் கொடுமை அனுபவித்தாராம். சுயசரிதையில் அதுபற்றி எழுதியுள்ளாராம். சினிமாவில் சந்தித்த மனிதர்கள், காதல் என அனைத்து விஷயங்களையும் தனது சுயசரிதையில் சொல்லியுள்ளாராம்.

## மோகன் நடராஜன் தயாரிப்பில் அஜித் நடிக்கும் 'ஆழ்வார்'

ஸ்ரீ ராஜகாளியம்மன் சூப்பர் பிலிம்ஸ் சார்பில் மோகன் நடராஜன் தயாரிக்கும் புதிய படம் ஆழ்வார்.

இந்தப் படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக அசின் நடிக்கிறார்.

பசுபதி, மனோரமா, பிதாமகன் மகாதேவன், சத்யன் மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கன் இதில் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்துக்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைக்கிறார். இவர் அஜித்துடன் இணையும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கும் மேற்பட்ட டியூன்களை இதற்காக அவர் உருவாக்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் செல்வா. இவர் எஸ்.ஜே.சூர்யாவிடம் வாலி, குஷி, நியூ, அ.ஆ. ஆகிய படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

ஐம்பதுக்கும் மேற்பட்டோரிடம், கதை கேட்டு இவர் கதை தேர்வு செய்யப்பட்டுள்ளது. 'ஆழ்வார்' என்றால் பயமில்லாதவன் கூரிய அம்புபோல் எதிரிகளைத் தாக்கும் பலம் படைத்தவன். அதிரடி ஆக்ஷனும், அருமையான குடும்பப் பின்னணியும் கொண்ட படமாக இது உருவாகிறது.



## அக்காள் - தங்கை திருமணம்

சூர்யா - ஜோதிகா திருமணம் அக்டோபரில் நடக்கிறது. சினிமாவுக்கு முழுக்குப் போட்டு திருமணத்துக்குத் தயாராகிறார் ஜோதிகா. இதுபோல் இவரது அக்கா நக்மாவும் திருமணம் செய்து கொள்ளப் போகிறார். மணமகன் இந்தி நடிகர் ரவிகிஷன். இருவரும் நீண்ட நாளாகக் காதலித்தனர். விரைவில் திருமணம் செய்ய இருக்கிறார்கள். ஜோதிகா திருமணத்துக்கு முன்பே தன் திருமணத்தை முடிக்க நக்மா திட்டமிட்டுள்ளாராம்.

## திரிஷா படம் மீண்டது

விலங்குகளைப் பயன்படுத்தி சர்ச்சையில் சிக்கிக் கிடந்தது திரிஷா நடித்த 'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்' படம். இதற்கு அனுமதி கேட்டு கோர்ட்டுக்குப் போனார்கள்.

இப்போது ஒரு வழியாக இந்தப் படத்துக்குத் தடை நீங்கியுள்ளது. தணிக்கைக் குழு யூ சர்டிபிகேட் கொடுத்து படத்தை ரிலீஸ் செய்ய அனுமதித்துள்ளனர்.

## மாமா விஜயம்

பாம்பே கண்ணனின் சுபா கிரியேஷன்ஸ் சார்பில் உருவாக்கியுள்ள புதிய டிவிடி படம் 'மாமா விஜயம்'. இந்தப் படத்தை பாஸ் இயக்கியுள்ளார். எழுத்தாளர் சுஜாதாவின் கதையை 'மாமா விஜயம்' படமாக அவர் இயக்கியுள்ளார்.

இவர் திரிஷா, கவுசல்யா, சங்கவி, மந்த்ரா போன்றோர் நடித்த விளம்பரப் படங்களை எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாமா விஜயம் படத்தில் டெல்லிகணேஷ், குயிலி, வையாபுரி, பிரியா மகாலட்சுமி, பாம்பே கண்ணன், அரவிந்த், கிச்சா, அஜித், மாஸ்டர் உதயராஜ், மாஸ்டர் சாணக்யா நடித்துள்ளனர். இணை இயக்கம் கமல், ஜெகதீஷ். ஒளிப்பதிவு பி.எஸ்.செல்வா. எடிட்டிங் கவுதம், இசை ரஜினி, கதை, திரைக்கதை, வசனம் இயக்கம் சுஜாதா.

குறைந்த செலவில் இப் படத்தை உருவாக்கி தயாரிப்பாளருக்கு லாபம் ஈட்டிக் கொடுத்துள்ளாராம் இயக்குநர்.



ஆர்யா பூஜா
ஆட்டோ

## கமல், அஜித் படங்கள் பிரச்சினை தீர்ந்தது

கமல் நடித்த வேட்டையாடு விளையாடு படமும் அஜித் நடித்த 'காட்பாதர்' படமும் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கி வெளிவராமல் முடங்கிக் கிடந்தன. படங்களை ரிலீஸ் செய்ய பல மட்டங்களில் சமரசப் பேச்சு நடந்தது. தற்போது பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. அடுத்த மாதம் இரு படங்களும் ரிலீஸ் ஆகின்றன.



ஜீவா - பூஜா
பொறி

## இம்சை அரசன் படத்துக்கு திடீர் எதிர்ப்பு!

நடிகர் வடிவேலு நடித்து சமீபத்தில் வெளியான படம் 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி'. இப்படம் வெளியாவதற்கு முன்பே குதிரைகளைப் பயன்படுத்தியதாகக் கூறி படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டது.

பின்பு ஒரு வழியாக அந்தப் பிரச்சினைத் தீர்ந்து படம் வெளியாகி ஓடிக் கொண்டிருக்கிறது. இதனிடையே நெல்லையில் இப்படத்துக்கு திடீரென எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இந்தப் படத்தில் மன்னன் வடிவேலு, அரசு பொற்கொல்லரிடம் வாள் செய்து தரச் சொல்வார். அது இரண்டாக உடைந்து விடும். மற்றொரு காட்சியில் எதிரிகளின் சங்கிலியால் வடிவேல் கட்டப்பட்டிருப்பார்.

அப்போது அங்கு வரும் அரச பொற்கொல்லரிடம் இந்தச் சங்கிலியைத் தயாரித்தது யார் என்பார். அவர் நான்தான் என்றதும், வடிவேலு நீ உருவாக்கியதுதானா? என்றவாறு சங்கிலியை உடைத்து வெளியே வருவார்.

அப்போது வடிவேலு பேசும் வசனங்கள் தங்களை புண்படுத்துவதாகக் கூறி நெல்லையைச் சேர்ந்த கொல்லர் தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இம்சை அரசன் 23ஆம் புலிகேசி திரைப்படத்தில் எங்கள் விஸ்வகர்ம சமுதாயத்தைச் சார்ந்த கொல்லர் தொழில் செய்பவர்களின் தொழிலை களங்கப்படுத்தும் வகையில் மிகவும் இழிவாக சித்திரித்து வசனம் பேசிய நடிகர் வடிவேலு, டைரக்டர் சிம்புதேவன், தயாரிப்பாளர் சங்கர் ஆகியோரை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த விஷயத்தில் சென்சார் போர்டு உடனடியாகத் தலையிட்டு அந்த காட்சிகளை அனைத்து தியேட்டர்களிலும் தடைசெய்ய வேண்டும். இல்லாவிட்டால் தமிழகம் முழுவதும் இப்படம் திரையிட்ட அனைத்து தியேட்டர்கள் முன்பும் போராட்டம் நடத்துவோம். - இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.



இஷா கோபிகா



சூர்யா
ஜில்லுனு ஒரு காதல்

# என்னை அவமானப்படுத்தினால் சட்டப்படி சந்திப்பேன் –சேரன்

டைரக்டர்கள் சேரன், தங்கர் பச்சான் ஆகியோர் பாலியல் பலாத்காரம் செய்ததாக திருச்சியைச் சேர்ந்த ரஸ்மத் நிஷா இரண்டு வருடங்களுக்கு முன்பு பொலிஸில் புகார் கொடுத்தார். விசாரணையில் நிஷா முன்னுக்குப் பின் முரணான தகவலைக் கூறியதால் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று சேரன் மற்றும் தங்கர் பச்சானை வழக்கில் இருந்து பொலிஸார் விடுவித்தனர்.

இப்போது திடீரென்று நிஷா கோர்ட்டுக்குச் சென்று பழைய குற்றச்சாட்டுகள் குறித்து இரகசிய வாக்கு மூலம் கொடுத்துள்ளார். இதனால் இந்த வழக்கு மீண்டும் விறு விறுப்பாக உள்ளது. பொலிஸாரும் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

இது பற்றி டைரக்டர் சேரனிடம் கேட்டபோது கூறியதாவது :-

நிஷா என்பவரைப் பற்றி இன்றுவரை எனக்கு ஏதும் தெரியாது. நான் அப்படியொருவரை சந்தித்ததே இல்லை. அவர் சொன்ன குற்றச்சாட்டை சட்ட ரீதியாக எதிர்கொண்டேன். எனக்கும் அந்த புகாருக்கும் சம்பந்தமில்லை என்று பொலிஸாரிடம் தெரிவித்தேன்.

அதை நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களையும் அவர்களிடம் கொடுத்தேன். அதன் பிறகுதான் வழக்கில் இருந்து என்னை அவர்கள் விடுவித்தார்கள். இப்போது மீண்டும் இந்த விஷயம் கிளம்புகிறது என்றதும் எனது வக்கீல்களை தொடர்பு கொண்டு பேசினேன்.

அவர்கள் நிஷா கோர்ட்டில் இரகசிய வாக்கு மூலம் கொடுத்தது கோர்ட்டு நடைமுறை என்று தெரிவித்தனர். இதன் பின்னணியில் ஏதேனும் சூழ்ச்சியோ என்னை அவமானப்படுத்தும் நோக்கமோ இருக்குமானால் அதை சட்டரீதியாக சந்திப்பேன்.

அரசியல் வாதிகளோடு மோதும் அளவுக்கு நான் பெரிய ஆள் இல்லை. ஆனால் மக்கள் பலம் இருக்கிறது. அந்த சக்தியை வைத்து ஒரு கை பார்ப்பேன். எத்தனையோ இழப்புகளைச் சந்தித்து கஷ்டப்பட்டுத்தான் இந்த அளவுக்கு வந்திருக்கிறேன்.

இவ்வாறு சேரன் கூறுகிறார்.




ஸ்ரீகாந்த் - பாவனா
கிழக்கு கடற்கரை சாலை

## முன் ஜாக்கிரதை பாவனா

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது தானே! விளம்பரங்களில் நடித்து வரும் பணத்தை அள்ள வேண்டியதுதானே என்று முணு முணுப்பவர்கள் ஒரு பக்கம், பாவனா விளம்பரங்களில் ஏன் நடிக்க மறுக்கிறார் என்ற கோஷ்டியின் ஆராய்ச்சி ஒரு பக்கம்.

இரசிகர்களுக்கு தன் மேல் இருக்கின்ற ஈர்ப்பு குறைந்து விடக்கூடாது என்னை பார்க்க ஆசைப்படும் இரசிகர்கள் சினிமாவில் பெரிய திரையில் என்னை கண்டுகளிக்கட்டும். அப்போது தான் அவர்களுக்கு என் மேல் உள்ள ஈர்ப்பு நிலைத்திருக்கும். அதைவிட்டு விளம்பர படங்களின் மூலம் அடிக்கடி டி.வியில் தோன்றி என் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தால் இந்த பாவனா பழசாகி விடுவாள். என் முகம் பார்த்து அலுத்துப் போய்விடும் என்கிறார். சபாஷ் சரியான முன் ஜாக்கிரதை அம்மணிதான். பிழைத்துக்கொள்வார்.

## கிரண், வடிவேலு நடனம்

ஜி.கே.பிலிம் கார்ப்பரேஷன், சண்டைக்கோழி வெற்றியைத் தொடர்ந்து புதிதாக தயாரிக்கும் படம் திமிரு. இதில் விஷால் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக ரீமாசென் நடிக்கிறார். ஷ்ரேயா ரெட்டி, வடிவேல், மனோஜ் கே.ஜெயன், விநாயகம், ஸ்ரீரஞ்சனி, பவன், மீரா கிருஷ்ணன், மாணிக்க விநாயகம், ஐயம் விஜயன், பானுசந்தர் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

மதுரை, காரைக்குடி, சென்னை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடக்கிறது. இந்த படத்தில் ஒரு பாடலுக்குக் கிரண் நடனம் ஆடியுள்ளார். ஒரு பாடலை கங்கை அமரன் பாடியுள்ளார். அந்த பாட்டுக்கு வடிவேல் நடனம் ஆடியுள்ளார்.



ரவி - பாவனா
தீபாவளி

# விசிட்

## திருமணத்துக்குத் தயாராகும் ஜோதிகா

திருமணத்துக்கு ஜோதிகா தயாராகிறார். புதுப்படங்களில் அவர் நடிக்கவில்லை. திருமணத்துக்குப்பின் சினிமாவுக்கு முழுக்கு போடுவாராம். சமீபத்தில் சென்னையில் நடந்த விருந்து நிகழ்ச்சியொன்றில் பங்கேற்றார்.

விழாவுக்கு வந்த சக நடிகர் - நடிகைகளிடம் அக்டோபரில் தனக்கு திருமணம் என்று மகிழ்ச்சி பொங்க சொன்னாராம். மாப்பிள்ளை சூர்யாதான் என்று நூறு சதவீதம் நம்புகிறது கோடம்பாக்கம்.

## தியேட்டரில் திடீர் மோதல் - திடீர் பேனர்களை அகற்றிய ஜெயம் ரவி இரசிகர்கள்



நடிகை திரிஷாவுக்கு இரசிகர் மன்றம் தொடங்கப்பட்டுள்ளது. மன்றத்துக்கு புதிய கொடியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெயம் ரவி, திரிஷா நடித்த 'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்' படம் ரிலீசாகியுள்ளது. இந்தப் படம் திரையிடப்பட்ட தியேட்டர்கள் முன்னால் நேற்று திரிஷா இரசிகர்கள் திரிஷா உருவப்பட பேனர்களை வைத்தனர். மன்றக் கொடிகளையும் பறக்கவிட்டனர். கே.கே. நகரில் உள்ள ஒரு தியேட்டர் முழுவதும் திரிஷா படங்களே காட்சியளித்தது.

இதைப் பார்த்த ஜெயம் ரவி இரசிகர்கள் ஆத்திரப்பட்டனர். அவர்கள் திரிஷா பேனர்களை அப்புறப்படுத்தி ஜெயம் ரவி கட் அவுட்டுகளை வைத்தனர். இதனால் இரு தரப்பு இரசிகர்களிடையே மோதல் ஏற்பட்டது. வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

இது குறித்து திரிஷா இரசிகர் மன்ற செயலாளர் ராமராஜன் கூறியதாவது :-

திரிஷாவுக்கு இரசிகர் மன்றம் தொடங்கி அவர் நடித்து வெளியான படத்தை விழாவாக கொண்டாடினோம். தியேட்டர்களிலும் கட் - அவுட் பேனர்களை வைத்திருந்தோம். 60 பேருக்கு கூலி கொடுத்து இந்த பணியில் ஈடுபடுத்தினோம். திரிஷா இரசிகர் மன்றத் தலைவர் ஜெசி, நள்ளிரவு வரை தியேட்டர்களில் இருந்து இந்த வேலைகளைக் கண்காணித்தார். திரிஷா இரசிகர்களுக்கும் ஜெயம் ரவி இரசிகர்களுக்கும் பேனர் வைக்க தனித்தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஜெயம் ரவி இரசிகர்கள் எங்கள் பிரமாண்ட போஸ்டர் பேனர்களை எதிர்பார்க்கவில்லை. தியேட்டரில் சென்று பார்த்த போது அதிர்ச்சி அடைந்தனர். திரிஷா பேனர், கட் அவுட்டுகளை அகற்றி விட்டு ஜெயம் ரவி பேனர், கட் அவுட்களை வைத்தனர். இதை பார்த்து அதிர்ச்சியானோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இது பற்றி திரிஷாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் கூறியதாவது :-

கட் அவுட் வைத்து பாலாபிஷேகம் செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. மன்ற பொறுப்பாளர்களைத் தொடர்பு கொண்டு இரசிகர் மன்றம் கதாநாயகர்களுக்குத்தான் பொருத்தமாக இருக்கும். கதாநாயகிகளுக்கு சரிப்படாது என்றேன். அதற்கு அவர் சமூக சேவை பணிகளுக்காகவே தொடங்கப்பட்டதாகவும் நான் சினிமாவில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இதன் பணிகள் தொடரும் என்று கூறினார். அது என்மனதை தொட்டது. வருகிற 31ஆம் திகதி கேன்சர் இன்ஸ்டியூட்டில் என் இரசிகர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள் ளனர். அதில் நான் கலந்து கொள்வேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

டைரக்டர் ஜெயம் ராஜாவிடம் இதுபற்றிக் கேட்டபோது எங்கள் கவனத்துக்கு வராமல் இந்த சம்பவங்கள் நடந்துள்ளன. திரிஷா பேனர்களை எடுத்த இடத்திலேயே வைக்குமாறு கூறியுள்ளேன். தற்போது பிரச்சினைகள் சுமுகமாகியுள்ளது என்றார்.



சூர்யா - பூமிகா
ஜில்லுனு ஒரு காதல்




## நீயும் நிலவும் இல்லாத...

ஒரு ஒட்டகமாய்
எப்போதோ பருகிய
உன் காதல் நீரில்
இன்னும்
தாகம் தீர்த்துக் கொண்டிருக்கிறது
என் மனம்.
முன் வந்து நின்றால்தான்
விம்பத்தைக் காட்டும்
கண்ணாடி.
நீ வந்து பார்க்காமலே
உன் முகம் பார்க்கிறது
என் கண்கள்!
உறக்கமில்லை;
ஆனாலும் படுக்கிறேன்.
நீயுமில்லை -
பக்கத்தில் யாருமில்லை;
ஆனால் பேசுகிறேன்!
இப்போது -
ஈரம் தொலைந்த நிலத்தில்
உன் நினைவால்
வளரும் செடி
என் காதல்.
நீயும் இல்லாத...
நிலவு இல்லாத
அமாவாசை இருட்டில்
தனியே பறக்கும்
ஒரு மின்மினியாய்
நான்!

*–வே.கர்ணாநிதி,*
*டயகம.*

## காதல் சருகுகள்

காதலில் தோற்றுப் போன
கல்லறைகளெல்லாம்
ஒரு நாள் விழித்துக் கொண்டால்
உலகமெனும் மயான பூமியில்
காதல் பிசாசுகள் கூட
கண்ணீர் வடிக்கலாம்.

சாஜஹான்
மும்தாஜுக்காகச் சிந்திய
ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரிலும் தான்
தாஜ்மஹாலின்
ஜமுனை நதி ஆர்ப்பரிக்கிறது.

நடு நிசியின் சோகத்தில்
காதல் சருகான போது
இரவின் நிசப்த இருள்கள்
பூலோகத்தில்
நிரந்தரமாகிவிட்டன.

சஹாராவின் சூடு தணிய
வேண்டுமென்றால்
அகிலக் காதல் மனசுகளின்
ஏக்கங்கள் தீரத்தான் வேண்டும்.

வாழ்க்கையின் அத்தியாயங்கள்
தூசு தட்டியும் கூட
காதலின் ஏடுகளுக்கு
முடிவுரை தொலைந்ததாயில்லை.

நான்கு சுவர்களுக்குள்
சுவடுகள் சுற்றித் திரியலாம் - ஆனால்
காதலரின் சுயாதீன இதயத்தில்
ஊடல்களும் ஊமையைப் போல
ஊசலாடிக் கொண்டே இருக்கும்.

*–ஏ.பி.முஹம்மட் இர்ஸாத்,*
*கல்முனை*

## நாகரீக ஹைக்கூ...

கனவில்
உணர்வுகள் அறுக்கப்படுகின்றன
அதில்
ஏதும் வடிவதாய் தெரியவில்லை.

சிதைந்து போன
கருவொன்று
கதை சொல்கின்றது
மூன்று மாத பிறப்பு வடிவை...

தீ காயப்பட்ட முகத்துடன்
பெண் பார்க்க
வந்துபோன மாப்பிள்ளை
பெண் அழகில்லையென்று
சொல்லிச் சென்றான்
தன் நிலைமை மறந்து...

பணத்திற்காக
மானம் விற்கும் ஏரியாக்களில்
இன்று குதூகலம்
யாரோ புதிய வரவின்
மானம் விற்பனையாகுவதால்.

ஒரு வயதுச் சிறுவன்
சிகரெட் வாங்க,
மூன்று வயதுச் சிறுவன்
புகைத்தான் என்று
தலைப்புச் செய்தி...

படர்ந்த புற்று நோய்க்கான
மருந்து...
கிடைக்காமலே போகும்...
புகைவிட்டு ஆத்திய
சதைப்பிண்டம் சல்லடையானதால்.

ஆடுகளை வெட்டி
இரத்தம் கேட்கும் மனிதர்களுக்கு
வீசுங்கள்!
வெறித்தன்மை இல்லாமல் போகட்டும்.

*–ஜே.எம்.பஸ்லி,*
*ஏத்தாலை.*

## உயிருள்ளவரை...

நான் தேடிக்
கொண்டிருந்த
அந்த நாட்களை - அவன்
திருடிவிட்டான்...
நிஜத்தில் நடக்குமென
நிழலாய் வடிவமைத்த - அந்த
உருவங்களும் உணர்வுகளும்...
நான் உயிருடன்
இருக்கும்போதே - அவை
இறந்து விட்டன.
ஏனெனில் - என்னை
ஏமாற்றி விட்டு அவன்
மௌனம் காக்கிறான்...
நானும்
காத்துக் கொண்டிருக்கிறேன் - அவன்
கல்லறை மேல்!!!
என் கற்பனைகள் தொடரும்
எனது உடலில்
உயிருள்ளவரை...

*–மதி தாசன்,*
*யாழ்ப்பாணம்.*

## யுத்தம்!

புயலின் கைப்பிடித்து
பூங்காவில் நுழையும்
எரிமலை.

வண்ணத்துப் பூச்சிகளின்
வானத்தில் வீடு கட்டும்
விஷச் சிலந்தி.

நிலவில் குடியிருக்க
ஆசைப்படும்
குருட்டுச் சூரியன் இது
பனித்துளியை உண்ணும்
நண்பகல்!

அறுவடை வெள்ளாமைக்
காடுகளில்
காட்டெருமையாய்
நுழைந்து மனிதம் புசித்து
குருதி குடித்து
நிம்மதிகளின் நெஞ்சில்
நிரந்தரமாய் விளையாடும்
பூகம்பம்.

இந்த மழை பெய்யும்
எங்கள் தேசத்தில்
உடைந்து போன
சமாதானக் குடையை
கட்டிக் கொடுக்க
சர்வதேச அழுத்தக்
கம்பிகள் வந்ததால்
குடை விரிக்க
ஆசைப்பட்டோம்.

ஆஹா...
அதோ இதோவென
குடை கட்ட
வந்தவர்களையும்
பேச்சுவார்த்தைக்
காற்ற,
பேசத் தடைவிதித்து
பேராபத்தில்
தள்ளிவிட்டதே...!

இனி மீண்டும்
கா(போ)ர் மேகம்
சூழ்ந்த எம் வானம்
வெளிரும் வரை
நில நடுக்கங்களாய்...
தொடரும் மனித
உள நடுக்கங்கள்...!

*–மெய்யன் நட்ராஜ்,*
*வத்தளை.*

## காலங்களைக் கடந்து காதலுடன்...!

நிஷ்டையில் இருந்த
மோனப் பெருவெளியில் - நீ
நிகழ்ந்து கொண்டிருந்தாய்
உனது
நிதான வீச்சுக்கு அப்பால் நான்
நின்று கொண்டிருந்தேன்.
எனது நிலைகளுக்குள்ளும்
நீ நிகழ்ந்து கொண்டிருப்பதை
உனக்கு உணர்த்துவதற்குள்
உதிர்ந்து போயிற்று உயிர்.

உருகி வழிதல் அற்று
உணர்வுகளை உன்னோடு தழைத்து
உறவு வட்டத்துக்கப்பால்
அழைத்துக் கொண்டிருந்தேன்.

நிகழ்தலைக் காரணம் காட்டி
'நிலை'யை விட்டு நீ
நகரமுடியாததை யுணர்த்தினாய்
உணர்வதற்குத் திராணியில்லை.
உறுதியிருக்கிறது; உப்புச்சப்பில்லாத
உறவுகளிருக்கிறது.

எல்லாவற்றையும் மீறி
நிகழ்தலைப் பலப்படுத்தும் முயற்சியில் நீயும்...
நிலையை விட்டு நகராமல் நானும்...
தாக்கப்படலாம் என்ற அச்சத்தில்
எனது கனவுகளும் - ஒரு
கைக்குழந்தையாய்க் காத்திருக்கிறது
காலங்களைக் கடந்து,
காதலுடன் மட்டுமில்லாமல்.

*–வை.சாரங்கன்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

**கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான ப. முத்துக்குமார், பி. பாலமுருகன் மற்றும் ரேணுகா தேவி ஆகியவர்கள் எழுதிய மூன்று கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.**

## பருவம் எனும் பாதையிலே...!

தோழனே! நமது நட்பு
அறிமுகத்தில் ஆரம்பித்து
ஆற்றலையும் அன்பையும் பெருக்கி,
இன்ப துன்பங்கபைள பகிர்ந்து
ஈர மனதுடன் பழகி
உதவிக்குப் பழகாமல்
ஊடல்கள் இல்லாமல்
எண்ணங்கள் கலந்து
ஏளனம் செய்யாமல்
ஒற்றுமையாய் இருந்து
ஓருயிராய் மகிழ்ந்ததுவே!

பிறந்து விட்டோம்
காலத்தின் கட்டாயத்தால்
தொடர்கிறோம் நம் பந்தயத்தை
மடலின் மூலமாய்.

கண்டேன் மடலில்
காதல் எனும் கனியை நீ ருசிப்பதாக
கொண்டேன் மகிழ்ச்சி
இருந்தும் மனதின் ஓரத்தில் ஏனோ
தளர்ச்சி
ஏன்? என்னை நானே கேட்கிறேன்.

மனம் அறிந்து மணம் புரிவது அபூர்வம்
குணம் அறிந்து இனி இணைவது நலம்
சிலர் காதல்லை பொழுது போக்காக்கி
ஏமாற்றலாம் உன்னை

உன்னவனை தெரியவில்லை எனக்கு
எனவே புரிய வைக்கிறேன்
காதலைப் பற்றி உனக்கு!

தோழனே! காதல் என்பது
தழுவுவதால் வருவதுமல்ல
தவிர்த்தலால் வராமல் இருப்பதுமல்ல

கனவினில் கலந்து மனதினில் நினைந்து
மரணத்தில் விழுவதுமல்ல

அழகாலும் அறிவாலும்
அமைக்கப்படுவதுமல்ல
அது அழிக்கப்படுவதுமல்ல

பருவம் என்னும் பருவத்தில்
விழி என்னும் விதையால்
பார்வை என்னும் பாசனத்தால்
இதயம் என்னும் இடத்தில்
வளர்வதுதான் காதல்

தோழனே! உனது காதல்
கண்ணில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை
மண்ணில் முடியாமல் இருக்கட்டும்.
மனதில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை

கனத்தில் முடியாமல் இருக்கட்டும்
ஏன் எளிமையாக ஆரம்பித்தாலும்
பரவாயில்லை
ஏளனத்தில் முடியாமல் இருக்கட்டும்.
மடலில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை
உடலில் முடியாமல் இருக்கட்டும்
அது மறுப்பில் ஆரம்பித்தாலும்
பரவாயில்லை
மரணத்தில் முடியாமல் இருக்கட்டும்.

தோழனே! பெற்றோர் மனம் புண்படாமல்
உற்றார் கண் படாமல்
உறவினர் சொல் படாமல்
கற்பின் நெறி கலையாமல்
வறுமைகள் பறந்து வசந்தங்கள் பிறந்து
வளங்கள் நிறைந்து வாழ்க்கை சிறந்து
எனது காதல்
அன்பு என்னும் குன்றால்
உன்னா உயரம் அடையட்டும்.

*–ப.முத்துக்குமார்,*

## மரண அவஸ்தை!

தட்டுவதற்கு தயார் தான்
தாழ் திறக்குமா?
தெளிவாகத் தெரிந்து விட்டால்
தெம்பாகத் தட்டலாம்
தெரியாத வரையில்
மரண அவஸ்தை தான்

வானம் வசப்படுமா?
தெரிந்தால் மட்டும் தான்
என்னால் சிறகு விரிக்க முடியும்
தெளிவாகத் தெரியாமல்
சிறகுகளைச் சிதைத்துக் கொள்ள
என்னால் எப்படி முடியும்?

உனக்குள் நான் கட்டிய
மெலியதாய்த் தொடுகையில்
இனியதாய் சப்திக்கும்
வீணைக்கம்பிகள் இன்னும்
அறுந்து போகாமல் இருக்கின்றனவா?

தெரிந்து விட்டால்
தட்டி விட்டு
காத்திருப்பதிலும்
ஒரு சுகம் மறைந்திருக்கிறது
தெரியாத வரையில்
மரண அவஸ்தைதான்.

*–பி. பாலமுருகன்.*

## வாங்கிவைத்த வாழ்த்து அட்டைகள்

பலவித வண்ணங்களுடனும்
விரிந்து மலர்ந்த பூக்களுடனும்
தொடும் பொழுதே
பூவென உணரும் வகையில்...
வாங்கிவைத்த வாழ்த்து அட்டைகள்
அனுப்ப நினைத்தும்
அனுப்பாமல்
இன்னும் என்னிடமே...!

அனுப்பிவைத்தால்
அந்நியமாகி விடுவோமோ...
என்று அஞ்சியஞ்சியே
அனுப்பாமல் விட்டவைகள் ஏராளம்...!


ஒருவேளை -
அனுப்பியிருந்தால்...
நம்மிருவரது அந்நியோன்யத்தையும்
அழுத்தமாய் சொல்லியிருக்குமோ...?

இருந்திருக்கலாம்
ஆனால்...
நீ திருமணமாகிச் சென்றபின்
உனக்கான பிறந்த நாளின்போது

வாங்கி வைத்த வாழ்த்து அட்டைகள்
இன்னும் என்னிடமேதான் இருக்கிறது
என் பிரிய சகோதரியே...!

*–ரேணுகா தேவி.*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : கே. தர்சன்
வயது : 26
முகவரி :தபால் பெட்டி இல. 24989
டோகா – கட்டார்
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் : ரி. எல். எம். அசத்
வயது : 18
முகவரி : முனையவளவு வீதி,
ஏறாவூர் – 01
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு



பெயர் : இ. ரேகா
வயது : 17
முகவரி : நடுக்குடியிருப்பு,
பனிச்சங்கேணி
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் : எஸ். மதன்
வயது : –
முகவரி : சுதா கராச்சி நொறுக்குளம்,
வவுனியா
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.




# ‘அவரை’ புரிந்துகொள்ள முடியாமல் தவிப்பது ஏன்?

**அவரை** ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை? எல்லா விஷயத்தையும் உங்கள் கோணத்தில் இருந்தே யோசிப்பது தான் பிரச்சினையே. இதோ உதாரணங்கள் பல:

- சொன்னா சொன்ன நேரத்துக்கு வருவதில்லை. என்னை விட அப்படி என்ன முக்கியப் பிரச்சினை...என் மீது பாசமே இல்லையா? இருந்திருந்தால், நான் வருவதற்கு முன்பாகவே இங்கு நிற்கணுமே?
- ஜீன்ஸ் வாங்கக் கடைக்குப் போகணும்னு சொன்னேன். இன்னிக்குத் தான் பெரியம்மாவை ஆஸ்பத்திரியில் பார்க்கணுமா? ஆஸ்பத்திரிக்குப் போவதைக் கொஞ்ச நேரம் தள்ளிப் போடக் கூடாதா?
- திருமணத்திற்கு ஆடம்பரமாகச் செலவு செய்ய வேண்டாம் என்று சொல்கிறேன். என் பேச்சை அவர் ஏன் மதிப்பதே இல்லை?
- எனக்குப் பிடிச்ச டிரெஸ் போடுவதற்கு இவர் ஏன் தடுக்க வேண்டும்? இவர் மாதிரி எண்ணெய் வழிந்த தலையும், பழங்கால மாடலுமாய் என்னை இருக்கச் சொன்னால் என்னால் முடியுமா?
- மத்தவங்க இருக்கும்போது என் முகத்தைக் கூடப் பார்க்கப் பிடிக்காதவர் போல் ஏன் ‘ஆக்ட்’ கொடுக்க வேண்டும்?
- இப்போதே சேமிப்புக்கு ஏதாவது யோசிப்போம் என்று சொன்னால் காதில் வாங்கவே மாட்டேங்கறாரே? என்ன மனிதர் இவர்? இவருடன் எதிர்காலத்தில் எப்படிக் குடித்தனம் நடத்துவது?
- அவருடைய காலில் ஒரே வெடிப்பா கிடக்கு. ‘பார்லர்’ போய் சரி செய்துக்கச் சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறார்.
- நானும் ஒரே ஒரு முறையாவது தலை முடியைச் சுருட்டையாக்கிக் கொள்கிறேன் என்று கேட்கிறேன். அனாவசிய செலவு செய்யாதே என்கிறார். ஹூம்...ரசனையே இல்லாத மனிதரைத் திருமணம் செய்து கொண்டால் வாழ்க்கை முழுதும் கஷ்டந்தாம்ப்பா!
- திருமணம் முடித்த கையோடு, குழந்தைகளைப் பெத்துப் போடச் சொல்லி வீட்டில் வற்புறுத்துவாங்களே? இவர் எனக்கு எதிரா கருத்து வச்சிருந்தா அவரை எப்படி சமாளிக்கிறது?
- திருமணம் முடிஞ்சாச்சுன்னா தினமும் காலையில் சீக்கிரமே எழுந்துக்கணுமே? எனக்கு ஒத்தே வராத பழக்கம் இது. எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? இவர் எனக்கு அலாரம் வைத்துக் கொடுக்கப்போவதில்லை என்கிறார். என்ன செய்யலாம்?

இதுபோன்று பலவிதமாய் யோசிக்கும் நீங்கள் அடிப்படையாக ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அனைத்து கேள்விகளுமே உங்களைச் சுற்றியே எழுப்பப்படுபவை. அவரைச் சுற்றியும், அவரது வீட்டைச் சுற்றியும் நீங்கள் யோசிக்கவே இல்லை.

இன்னும் சொல்லப்போனால், நாம் எந்த இடத்தில் வாழ்ந்தாலும், சுற்றுச்சூழலோடு ஒத்து வாழ்ந்தாலே மாபெரும் பிரச்சினைகளைத் தவிர்த்து, சாதாரணமான, சந்தோஷமான வாழ்க்கை வாழலாம்.

‘ஊரோடு ஒத்து வாழ்’, என்று பெரியோர் சொல்லியிருப்பதை ஊர் என்று அர்த்தம்



கொள்ளாமல், சுற்றுச்சூழலோடு ஒப்பிட்டுக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்.

நீங்கள் வாழப் போவது வேறொரு வீட்டில். அந்த வீட்டில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது உங்கள் கடமை என்று சொல்வதை விட, உங்களின் திறமைகளை அவர்களிடம் காட்டுவதை அவர்கள் வரவேற்கின்றனர் என்று எடுத்துக்கொள்ளுங்கள்.

குறிப்பாக, உங்கள் கணவரின் விருப்பு வெறுப்புகளை எந்த விதத்திலும் மாற்ற முயல வேண்டாம். நீங்கள் மாற வேண்டாம்; உங்கள் கணவரையும் மாற்ற முயற்சிக்க வேண்டாம்.

சில அடிப்படைத் தேவைகளுக்கான உங்கள் கோரிக்கைகளை வெளிப்படையாகச் சொன்னால், அதை யாருமே நிறைவேற்றித் தருவர். உங்களையே உங்கள் அவர் சுற்றிச் சுற்றி வந்தால், அவருடைய அத்தியாவசிய வேலைகள் என்னாவது? காதல் முக்கியம் தான்; பாசம் முக்கியம் தான். ஆனால், அவைகளே மற்ற அத்தியாவசியக் கடமைகளையும், வேலைகளையும் ஒதுக்கித் தள்ளச் செய்து விட்டால், அதனால் ஏற்படும் இழப்பு, உங்கள் காதலைக் கொண்டாட முடியாமல் செய்துவிடும்.

**உங்கள் கேள்விகளுக்குப் பதில் :**

- சொன்ன நேரத்தில் வராமல் இருந்ததற்கு நீங்கள் சந்தேகப்படும்படியாக எந்தக் காரணமும் இருந்து விடாது. எனவே முதலில் சந்தேகத்தை விட்டுத் தள்ளுங்கள். அவர் என்ன காரணம் சொல்கிறாரோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.
- ஜீன்ஸை விட பாசம் முக்கியம்ங்க. ஜீன்ஸை நாளை கூட வாங்கலாம். தவிப்புக் கூடிய பாசத்தோடு அவரைப் பார்க்கக் காத்திருக்கும் பெரியம்மாவின் அன்புக்கு அடிபணிவதில் தவறு ஒன்றும் இல்லையே?
- திருமணத்திற்கு ஆடம்பரச் செலவு வேண்டாம் தான். ஆனால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? பளபள பட்டுப்புடவையும் நகையுமாக வாங்கப் போவதில்லையா? இரண்டு நாட்கள் முழுவதும் 10 ஆயிரம் ரூபாய் பியூட்டி பார்லருக்குக் கொடுக்கப் போவதில்லையா? அவருடைய நண்பர்களை ஒரே ஒரு நாள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த அவர் ஆசைப்படுவதைத் தடுப்பதில் நியாயம் இல்லையே?
- வெளியிடங்களிலும் உங்கள் கையோடு, கை கோர்த்து நடந்து செல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது நல்லதில்லையே? மற்றவர்கள் எதிரில் நீங்கள் காதலர்கள் என்று காட்டிக் கொள்ளும் ஆசை முக்கியமா? கண்ணியம் முக்கியமா?
- சேமிப்பு அவசியம் தான். அவருடைய தங்கை திருமணம், அக்கா மகப்பேறு என்று செலவுகள் வரும்போது அவை தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன. என்ன செய்ய முடியும்? இதற்கெல்லாம் தடை போட்டு வில்லத்தனமாய் நடந்து கொள்ளாதீர்கள்.
- இவ்விஷயத்தில் இருவரும் மிகவும் கவனமாய் முடிவெடுக்க வேண்டும். உங்கள் வயது, அவர் வயது, குழந்தை பிறக்கும் ஆண்டிலிருந்து குழந்தைக்குத் திருமணம் செய்யப் போவது வரை அழகாய் யோசித்து வைத்தால், நீங்கள் மகப்பேறுக்குத் தயாராகி விடுவீர்களா, இல்லையா என்பது குறித்து ஒரு முடிவுக்கு வரலாம். குழந்தைக்குத் திருமணம் செய்த பிறகு, அதனுடைய எதிர்காலத் தேவைக்கு உதவப் போகும் நீங்கள் தள்ளாமையால் அவதிப்படாமல் இருக்கும் வகையில், இப்போதே திட்டமிட வேண்டும்.
- அதிகாலை சீக்கிரம் எழுந்து கொள்வது சிரமம்தான். இன்றே ஒரு அலாரம் டைம் பீஸ் வாங்கி எப்படி இயக்குவது என்பதைக் கற்றுக் கொண்டு நாளை முதல் சீக்கிரம் எழுந்து கொள்ளப் பழகுங்கள். இதுதான் ஒரே தீர்வு!


## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

34

பெயர் : ....................

முகவரி : ....................

....................

....................

தே.அ. அட்டை இல : ....................

கையொப்பம் : ....................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -34**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
15.08.2006

பரிசுப் போட்டி இல - 32
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

பி. சாந்தி லுசில்டா, 30/25, 8 ஆவது ஒழுங்கை, சீவலிபுர, பொரல்ல, கொழும்பு - 8.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* **–ஷோபா–**

## பிரட் கட்லட்

***தேவையான பொருட்கள் :-***

சால்ட் பிரட் பெரிய சைஸ் - 6
உருளைக் கிழங்கு வேகவைத்து உதிர்த்தது - 3 கப்
கரட், பீட்ரூட் துருவியது - 2 கப்
மஞ்சள் பொடி, காரப் பொடி, கரம் மசாலா, உப்பு - தேவையான அளவு
தயிர் (புளிப்பில்லாதது) - 3 கப்
சர்க்கரை - 2 தேக்கரண்டி
கொத்தமல்லி பொடியாக நறுக்கியது - 1/2 கப்
சீரகப்பொடி - 1 தேக்கரண்டி
பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய்.

***செய்முறை :-***


முதலில் வாணலியில் 2 தேக்கரண்டி எண்ணெய் விட்டு கடுகு, சீரகம் தாளிக்கவும். நறுக்கிய வெங்காயத்தை நன்றாக வதக்கவும். பட்டாணி, கரட், பீட்ரூட் துருவல் சேர்த்து மிதமான தீயில் வதக்கி சிறிது நேரம் மூடிவைக்கவும். பின்பு கரம் மசாலா, காரப்பொடி, மஞ்சள் பொடி, உப்பு இவைகளை சேர்த்து நன்றாக வதக்கியவுடன் உதிர்த்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கைச் சேர்த்து நன்கு சுருள வதக்கவும். பிரட்டை தண்ணீரில் நனைத்து இரண்டு கைகளுக்குமிடையே வைத்து நன்றாக பிழியவும்.

இரண்டு பிரட்டிற்கு இடையிலோ அல்லது ஸ்லைஸின் நடுவிலோ காய்கறிகளை வைத்து நன்கு மூடி வைக்கவும். தேவைக்கேற்ற வடிவத்தில் (உருண்டையாகவோ, தட்டையாகவோ செய்து, எண்ணெயில் சிவக்கும் பதத்தில் பொரித்தெடுக்கவும்).

தயிரில் சர்க்கரைச் சேர்த்து நன்றாகக் கடைந்து பொரித்து வைத்திருக்கும் கட்லட் மீது இரண்டு டீஸ்பூன் அதன் மேல் சீரகப் பொடி கொத்துமல்லி தூவி பரிமாறவும்.

# தன்னம்பிக்கை - மகிழ்ச்சி வளரணுமா? ஸ்மைல் ப்ளீஸ்

**ம**னிதனின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் கண்ணாடியாக முகம் உள்ளது. சோகம், மகிழ்ச்சி, விரக்தி, கோபம், அருவருப்பு எனப் பல வகையான உணர்வுகளை ஒருவன் பூட்டிக்கொள்ள நினைத்தாலும் அது முடியாது. இப்படிப்பட்ட முகத்துக்கு அழகு



தருவது எது? சிரிப்புத் தான்.

சிரிப்பு இல்லாத முகம் தெய்வம் இல்லாத கோவில் போன்றது என்று சொல்லலாம். கள்ளங் கபடமற்ற குழந்தைகள் சிரிப்பதைப் பார்த்தால் சகல சோகங்களும் ஓடி விடும். அதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றும். அதுபோல சிலர் எப்போதும் சிரித்த முகத்துடன் பொலிவுடன் காணப்படுவர். இத்தகைய நபர்களிடம் பழகுவதற்கு அனைவரும் விரும்புவர். சிரித்த முகம் தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருகிறது.

சிரிப்பைப் பொறுத்தவரை பல வகைகள் உண்டு. இருப்பினும் வாய்விட்டு, பல் ஈறுகள் தெரிய சிரிப்பது உடம்புக்கு ஆரோக்கியமானது என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதுபோல வாய் விட்டுச் சிரிக்க வேண்டுமென்றால் பற்கள் முத்துப் போல இருக்க வேண்டும். பல் ஈறுகள் தெளிவாக இருக்க வேண்டும். ஆனால் கறை படிந்த மஞ்சள் நிறம், ஒன்றிரண்டு பற்கள் காணாமல் போதல், பற்கள் அரித்து காணப்படுவது, பற்குழி, துர்நாற்றம் போன்ற பிரச்சினைகள் இருப்பவர்களால் இதுபோல சிரிக்க முடியுமா? அவர்கள் உண்மையிலேயே சிரிக்க வேண்டும் என்று நினைத்தாலும், பல பிரச்சினைகளை நினைத்து வாயை மூடிக் கொள்வார்கள். அல்லது நமுட்டுச் சிரிப்பு சிரிப்பார்கள். இதுபோன்ற நமுட்டுச் சிரிப்பால் ஒரு பயனும் இல்லை.

வாய் விட்டுச் சிரிக்கும்போது முகத்தில் உள்ள தசைகள் நன்றாக இயக்கப்படுவதால் முகம் பொலிவடைகிறது. தோற்றத்தில் நன்றாக இருப்பவர்கள், தங்களைப் பற்றி நல்லவிதமாக உணர்கிறார்கள். இதனால் சமுதாயத்தில் உள்ளவர்களிடம் சகஜமாகப் பழக முடிகிறது. தன்னம்பிக்கையுடன் இருப்பதால் வாழ்க்கையில் உயர்வான நிலையை அடைகிறார்கள். ஆனால் வாய்விட்டுச் சிரிக்காதவர்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால், சமுதாயத்துடன் இணைந்து பழகுவதில் பின்தங்கி இருப்பார்கள். ஒருவேளை அவர்களுடைய பல் பிரச்சினைகள் சரி செய்யப்பட்டால், எல்லாம் நார்மலாகி விடும். தன்னம்பிக்கை அதிகரித்து, நிலையும் உயரும்.

பல் குறைபாடுகளைச் சீர் செய்வதால் 2 லாபம் கிடைக்கிறது. ஒன்று, ஒவ்வொருவரும் தங்களைப்



பற்றி நல்ல விதமாக உணர்வதால், தன்னம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இன்னொன்று ஆபத்தான பல் நோய்களும் அகற்றப்படுகின்றன. உதாரணத்துக்கு ஒருவருக்கு, பற்கள் அதிக இடைவெளி விட்டு இருப்பதாக வைத்துக் கொள்வோம். இந்நிலையில் உணவு உண்ட பிறகு, உணவு துணுக்குகள் இந்த இடைவெளிகளில் போய் தங்கும். அப்போது என்னதான் பிரஷ்ஷை வைத்துத் தேய்த்தாலும் உணவுத் துகள் வெளிவராது. இந்நிலையில் என்ன ஆகும்? நாளடைவில் பாக்டீரிய கிருமிகள் குடிபுகுந்து பற்களை அழித்து விடும். இதுதவிர வாயில் துர்நாற்றம் உண்டாவதால், அடுத்தவருடன் பேசத் தயங்குவர்.

வாழ்க்கையில் தன்னம்பிக்கை அதிகரிக்க முதலில் பற்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் வாய்விட்டுச் சிரியுங்கள்.




கோட்டையிலிருந்து அவர்கள் வெளிப்பட, வெளிப்பட மேலும் அதிகமான பொலிஸ்காரர்கள் துப்பாக்கி அல்லது இலேசான மெஷின் கன் ஏந்திக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். இரண்டு கெஜம் தள்ளினாற் போல் கைதிகள் குழுவுடன் சேர்ந்து நடந்தார்கள் இவர்கள்.

நாங்கள் கடல் கடந்த சிறைக்காகக் கப்பலேறுவதைப் பார்ப்பதற்கு ஒரு



பெரும் கூட்டம் கூடியிருந்தது. அவர்களைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது இன்னொரு பொலிஸ் பட்டாளம். துறைமுகத்தை நோக்கிப் பாதி வழி சென்றிருப்போம். ஒரு வீட்டின் ஜன்னல்களிலிருந்து சீழ்க்கையொலி கேட்டது.

நிமிர்ந்து பார்த்தேன்.

என் மனைவி நீனெட்டும், என் நண்பனொருவனும் தென்பட்டார்கள். இன்னொரு ஜன்னலில் தேகாவின் மனைவி பாலாவும் சிநேகிதனொருவனும் இருந்தார்கள். தேகாவும் அவர்களைப் பார்த்தான். எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் வரை அந்த ஜன்னல்களில் பார்வையைப் பதித்தபடியே நாங்கள் அணிவகுத்தோம். அதுதான் நான் என் மனைவியைக் கடைசியாகப் பார்த்தது. அதற்கு வெகு காலம் கழித்து அந்த நண்பனும் ஒரு விமானத் தாக்குதலின் போது இறந்து விட்டான்.

எங்களில் யாரும் பேசவில்லை. முழு நிசப்தம் நிலவிற்று. ஆயிரத்துத் தொண்ணூறு பேர் இந்த அன்றாட வாழ்விலிருந்து அடியோடு மறைந்து போகவிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள். கூட்டத்திலிருந்த எவரும், எந்தப் பொலிஸ்காரரும், எந்தக் கைதியும், எந்த வார்டரும் அந்த நிமிடத்தின் மோனத்தைக் கலைக்கத் தயாராயில்லை.

கப்பலில் ஏறினோம் நாங்கள் நாற்பது பேரும். கப்பலின் கீழ்ப்பகுதிக்கு அனுப்பப்பட்டோம். தடித்த கம்பிகள் போட்ட கூண்டு அது. அங்கே ஓர் அறிவிப்புப் பலகையைக் கண்டேன். 'ஹால் நம்பர் - 40 பேர். தனிப்பிரிவு. தொடர்ந்த கண்டிப்பான பாரா'.

ஒவ்வொருவருக்கும் ஒரு தூளித் துணி சுருட்டிக் கொடுத்தார்கள். அருகிலேயே அவற்றை மாட்டுவதற்கு நிறைய கொக்கிகள் தென்பட்டன.

யாரோ என் கையைப் பிடித்தார்கள். ஜூலட்தான். அவனுக்கு இதைப்பற்றி அனைத்தும் தெரியும். பத்து வருடங்களுக்கு முன் இதேபோல் ஒரு பயணம் சென்றவனாயிற்றே. எப்படி வசதி செய்து கொள்வதென்று அவனுக்குத் தெரிந்தது. "இந்தப் பக்கமாய் வா. தூளித் துணியை மாட்டப் போகிற இடத்திலேயே உன் பையையும் மாட்டு. இதோ, இங்கே இரண்டு ஜன்னல் துவாரம் மூடி வைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் கடலில் போக ஆரம்பித்ததும் திறந்து விடுவார்கள். இந்தக் கூண்டில் மற்ற இடங்களைவிட இங்கே சுத்தமான காற்று கிடைக்கும்" என்றான்.

தேகாவை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். நாங்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் ஒரு கைதி அந்த இடத்துக்கு வந்தான். ஜூலட் கையை நீட்டி அவன் பாதையை மறித்தான். "அக்கரைச் சிறைக்கு உயிரோடு போய்ச் சேரவேண்டுமென்று ஆசையிருந்தால் இனி இந்தப் பக்கம் வராதே, புரிகிறதா?" என்றான்.

"சரி" என்றான் அவன்.

"ஏன் என்று தெரிகிறதா?"

"தெரிகிறது."

"பிடி ஓட்டம்."

அந்த ஆள் போய்விட்டான்.

**எழுதியது: ஹென்றி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

ஜூலட் தன் பலத்தைக் காட்டிய விதத்தைக் கண்டு தேகாவுக்கு ஒரே மகிழ்ச்சி. அதை அவன் மறைக்கவுமில்லை. "நீங்கள் இரண்டு பேரும் இருக்கிற வரையில் நான் நிம்மதியாகத் தூங்கலாம்" என்றான்.

"எங்களுடன் இருக்கும் போது உனக்குக் கிடைக்கிற பந்தோபஸ்து, கடற்கரையில் எந்த மாளிகையிலும் கிடைக்காது" என்றான் ஜூலட்.

பதினெட்டு நாள் நடைபெற்றது கடல் பிரயாணம். ஒரே ஒரு பரபரப்பான சம்பவம் தான் நிகழ்ந்தது.

ஒரு கைதியை ஏணியோடு வைத்துக் கட்டி, உப்புத் தண்ணீரில் தோய்த்த கயிற்றால் அடி அடியென்று அடித்தார்கள்.!

நள்ளிரவு இருக்கும். வீலென்ற ஒரு கூச்சல் எங்கள் அனைவரையும் எழுப்பி விட்டது.

ஓர் ஆள் செத்துக் கிடந்தான். ஒரு நீளமான கத்தி பாய்ந்திருந்தது அவனுடைய இரண்டு தோள்களுக்கும் நடுவே. தூளியில் படுத்திருக்கும்போது கீழிருந்து குத்தியிருக்கிறார்கள் யாரோ. தூளித் துணியைப் பொத்துக் கொண்டு கத்தி பாய்ந்திருந்தது. உண்மையிலேயே பயங்கரமான கத்தி. கூர்ப்பக்கம் மட்டும் எட்டங்குல நீளம். இருபத்தைந்து அல்லது முப்பது வார்டர்கள் துப்பாக்கியும் ரிவால்வருமாகத் தடதடவென்று ஓடி வந்தார்கள். "உடையைக் கழற்றுங்கள் எல்லோரும்! ஜல்தி! கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் நடக்க வேண்டும்!" என்று கத்தினார்கள்.

அனைவரும் ஆடைகளைக் களைந்தார்கள். சோதனை போடப் போகிறார்கள் என்பதைக் கண்டு கொண்டேன் நான். என் கத்தியை வலது பாதத்தின் அடியில் வைத்துக் கொண்டேன். ஆனால் கத்தி பாதத்தைக் கிழித்து விடாதபடி உடம்பின் பளுவை இடது காலில் தாங்கிக் கொண்டு வலது காலை இலேசாக வைத்துக் கொண்டேன். எப்படியோ கத்தியைப் பாதம் நன்கு மூடிக் கொண்டது.

நான்கு வார்டர்கள் கூண்டுக்குள் வந்து துணிகளையும், காலணிகளையும் பரிசோதிக்கலானார்கள். தங்களுடைய ஆயுதங்களை வெளியே வைத்துவிட்டு கம்பிகளுக்கு வெளியே நின்றிருந்த மற்றக் காவலர்கள் எங்கள் மீது கண்வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். தலைமைக் காவலரின் குரல் கேட்டது. "யாராவது துளி அசைந்தாலும் சரி, அத்தோடு அவர் உயிர் தொலைந்தது."

சோதனையின் போது மூன்று கத்திகள், இரண்டு நீளமான் கூர் தீட்டிய ஆணிகள், ஒரு கார்க் ஸ்க்ரூ, ஒரு தங்கக்குழாய் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. ஆறு பேர் தளத்துக்குக் கொண்டு வரப்பட்டார்கள் நிர்வாணமாகவே. இரண்டு இராணுவ டாக்டர்கள், கப்பலின் காப்டன் ஆகியோருடன் கைதிகள் குழுவின் தலைமை அதிகாரி மேஜர் போட் என்பவர் வந்தார்.

காவலர்கள் போனவுடன் கூண்டுக்குள் இருந்த எல்லோரும் உடையைத் திரும்ப அணிந்து கொண்டார்கள். ஆர்டருக்காகக் காத்திராமல் நானும் என் கத்தியைத் திரும்ப எடுத்து வைத்துக் கொண்டேன்.

தளத்தின் கோடிக்குச் சென்று நின்றுகொண்டார்கள் வார்டர்கள். நடுவே மேஜர் நின்று கொண்டார். மற்ற அதிகாரிகளுடன் அவர்கள் எதிரே அந்த ஆறு நிர்வாணக் கைதிகளும் 'அட்டென்ஸ'னில் நிறுத்தப்பட்டார்கள்.

சோதனையை நடத்திய பொலிஸ்காரன் ஒரு கத்தியை எடுத்தான். "இது இவனுடையது," என்று அதன் சொந்தக்காரனைக் காட்டினான்.

"ஆம் என்னுடையதுதான்" என்று ஒப்புக்கொண்டான் கைதி.

"ரைட்! பிரயாணம் முடிகிற வரையில் எஞ்சினுக்கு நேர்மேலேயுள்ள அறையில் இவனை அடைத்து வையுங்கள்" என்று உத்தரவு பிறப்பித்தார் மேஜர்.

இதேபோல் இன்னின்னான் இன்னின்ன ஆணி, கத்தி, கார்க், ஸ்க்ரூ ஆகியவற்றை வைத்திருந்தான் என்று காட்டப்பட்டான். ஒவ்வொருவனும் தன்னுடையதுதான் என்று ஒப்புக்கொண்டான். ஒவ்வொருவனும் இரண்டு வார்டர் கூட வர, மேலேறிச் சென்றான் - ஆடையில்லாமலே.

கடைசியில் ஒரே ஒரு கத்தியும், ஒரு தங்கக் குழாயும் தான் தரையில் கிடந்தன. அந்த இரண்டுக்கும் சொந்தக்காரன் ஒரே ஆள்தான் மிஞ்சியிருந்தான்.

இவன் இளம் வயதினன். 23 அல்லது 24 வயதுதான் இருக்கும். விளையாட்டு வீரன் போல் உடம்பு வாட்ட சாட்டமாக இருந்தது. ஐந்தடி பத்தங்குல உயரமிருக்கும். நீலக் கண்கள்.

"இது உன்னுடையது தானே?" தங்கக் குழாயைக் காட்டிக் கேட்டார்கள்.


"ஆமாம். என்னதுதான்."

"இதற்குள் என்ன இருக்கிறது," என்று மேஜர் அந்தத் தங்கக் குழாயை எடுத்து வைத்துக் கொண்டு கேட்டார்.

(பட்டாம்பூச்சி பறக்கும்)

# அரபு தேசங்களில் அதிகரிக்கும் அச்சுறுத்தல்கள்!

**லெபனான்** மீதான தாக்குதல் இரண்டாவது வாரத்தை அடைந்துள்ள நேரத்தில், இஸ்ரேலிய துருப்புக்கள் கொலைகாரத்தனமான வான்வழி குண்டு வீச்சென முழு அளவு படையெடுப்பிற்குத் தயாராகி விட்டனர். மேலும் போரின் பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஏகாதிபத்திய நோக்கங்களும் இன்னும் தெளிவாகியுள்ளன. அமெரிக்காவின் முழு அரசியல், நிதிய இராணுவ ஆதரவுடன் சியோனிச ஆட்சி லெபனானை ஒரு



இஸ்ரேல் ஆளுகைக்குட்பட்ட பாதுகாப்பு நாடாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆப்கானிலும் ஈராக் கிலும் நிகழ்த்தப்பட்ட படையெடுப்புக்களில் ஆரம்பித்த மத்திய கிழக்கு, மத்திய ஆசியாவின் ஏகாதிபத்திய புவிசார் அரசியல் மறுசீரமைப்பு தீவிரமடைந்து தொடரும் வகையில் இந்த இராணுவ நடவடிக்கை உள்ளது. இதன் இலக்கு முழுப்பகுதியிலும் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதாகும்.

ஹெஸ்பொல்லாவை லெபனானுக்குள் ஒரு இராணுவ, அரசியல் சக்தி என்னும் நிலையில் இருந்து அகற்றும் இப்போரின் உடனடி நோக்கம், இஸ்ரேலிய - அமெரிக்க ஆதிக்கம் நாட்டிற்குள் வராமல் தடுத்து நிறுத்த முற்படும் அனைத்து வெகுஜன இயக்கத்திற்கும் எதிராக செயல்படுத்தப் படுகிறது. புஷ் நிர்வாகமும் அதன் ஜெருசலேம் நண்பர்களும் இதைக் கீழ்க்கண்டவற்றிற்கு முக்கிய மானக் கட்டமாகக் கருதுகின்றன.


1). சிரியாவில் உள்ள பாத்திச ஆட்சியை அகற்றுதல், மற்றும்

2). ஈரானுக்கு எதிராக முழு அளவு போரைத் தொடங்குதல்.

இஸ்ரேலிய அரசாங்கமும், புஷ் நிர்வாகமும் முடிவில்லாத பிரசாரங்களை மீண்டும், மீண்டும் கூறிவருவது லெபனானுக்கு எதிரான தாக்குதல் ஒரு "தற்காப்பு நடவடிக்கை" என்பதும் இதற்குத் தூண்டுதலாக இருந்தது இரண்டு படையினர் சிறைபிடிக்கப்பட்டது என்பதுமேயாகும். அறிவார்ந்த பார்வையாளர்களிடையே இந்தக் கூற்றுக்கு எவ்வித நம்பகத்தன்மையும் இல்லை.

லண்டனில் உள்ள Financial Times தன்னுடைய முக்கிய தலையங்கத்தில் ஜூலை 17 அன்று, "லெபனானை இஸ்ரேல் நிலம், கடல், ஆகாயம் மூலம் குண்டு வீச்சிற்கு ஆளாக்கியது. ஹெஸ்பொல்லாவின் கடந்தவார எல்லை கடந்த செயலுக்கு விடையிறுப்பதற்கு இப்பொழுது இஸ்லாமிய கெரில்லாக்களால் பிடிக்கப்பட்ட இரண்டு இஸ்ரேலியப் படையினரை மீட்பது என்பதைக் காட்டிலும் கூடுதலான தன்மையை அடைந்து விட்டது. ஒருவேளை ஆரம்பத்தில் இருந்தே அப்படித்தான் இருந்திருக்கவேண்டும்" என்று எழுதியுள்ளது.

இதேபோன்ற, மதிப்பீடுகள்தான் வாஷிங்டன் போஸ்ட், மற்றும் வோல்ஸ் ட்ரீட் ஜேர்னல் மற்றும் கணக்கிலடங்கா சர்வதேச செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. இப்பொழுது மிகவும் வெளிப்படையாகிவிட்டதைத்தான் அவை கூறுகின்றன. நீண்டகால ஆக்கிரமிப்புத் திட்டத்தை அடைவதுதான் இஸ்ரேல், லெபனான் மீது நடத்தும் தாக்குதல் ஆகும்.



சமீபத்திய நிகழ்வுகள் இன்னும் தெளிவான முன்னோக்கில் பெப்ரவரி 2005இல் லெபனானிய பல பில்லியனரும் முன்னாள் பிரதம மந்திரியுமான ரபிக் ஹரிரி படுகொலை செய்யப்பட்டதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

சிரியாவின் நண்பரான எமிலி லஹௌட் தன்னுடைய லெபனானின் ஜனாதிபதி பதவிக் காலத்தை நீடிப்பதற்கு ஹரிரி எதிர்ப்புத் தெரிவித்தபின் அதையொட்டி தன்னுடைய பிரதம மந்திரிப் பதவியை இராஜிநாமாச் செய்த நான்கு மாதங் களுக்குப் பின்னர் பெய்ரூட்டில் இவருடைய கார்கள் அணிவகுப்பு பெரும் வெடிப்பினால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, ஹரிரி கொலையுண்டார். அமெரிக்காவும், இந்நாட்டின் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளருமான பிரான்ஸும் உடனே ஹரிரியின் மரணத்திற்கு டமாஸ்கஸ்தான் காரணம் என்று குற்றஞ் சாட்டின.

லெபனானுக்குள் இருந்த அவர்களுடைய சிரிய எதிர்ப்பு நண்பர்கள், சமூகத்தில் வசதியான அடுக்குகளில் இருப்பவர்கள் ஹரிரியின் கொலையைப் பயன்படுத்தி செடர் புரட்சி என்று அழைக்கப் படுவதைத் தொடங்கினர். இது கடந்த ஆண்டு சிரிய படைகள் திரும்பப் பெறப்பட்டதில் முடிவடைந்தது. அப்படைகள் 1970களில் இருந்து லெபனானை ஆக்கிரமித்திருந்தன.

உண்மையில் சிரிய ஆட்சி கொலையின் பின்னணியில் இருந்தால், அமெரிக்க - இஸ்ரேலிய திட்டமான சிரியாவை லெபனானில் இருந்து விரட்டுவதற்கு ஹரிரி தன்னுடைய ஆதரவைக் கொடுத்தார் என்று நம்பிக்கை பெற்றிருந்ததன் காரணமாக வறிய ஷியைட் மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றுள்ளதுடன் லெபனானுக்கு தெற்கிலும் ஆதிக்கத்தைக் கொண்டுள்ள ஹெஸ் பொல்லா இயக்கத்தின் மீதான தாக்குதலுக்கான தயாரிப்பில் அது மேற்கொள்ளப்பட்டிருக்கும். இதைத் தொடர்ந்து டமாஸ்கஸில் இருக்கும் பாத்திச ஆட்சிக்கு எதிரான ஒரு தாக்குதலும் இருக்கும் என்பதை அது நன்கு அறிந்திருந்தது.

ஆனால், வேறுவிதமாகப் பார்த்தால், அக் கொலை இஸ்ரேலிய அல்லது அமெரிக்க உளவுத் துறை பிரிவுகளினால் இதே திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காக ஒரு போலிக் காரணமாக அமைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூற முடியும். எப்படிப் பார்த்தாலும், தற்போதைய இஸ்ரேலிய தாக்குதல் அத்தகைய செயற்பாட்டைத்தான் துல்லியமாகக் கொண்டுள்ளது. செடர் புரட்சியே இஸ்ரேலிய அமெரிக்கர்களிடையே ஏமாற்றம் தரும் விளைவுகளைத்தான் தோற்றுவித்தது. வாஷிங்டன், பாரிஸ் இரண்டும் கூட்டாகக் கொண்டுவந்த ஐ.நா.வின் பாதுகாப்புக்குழு



தீர்மான விதிகளின் கீழ் லெபனானில் இருந்து சிரியா படைகளைத் திரும்பப் பெறுதல் கட்டாயமாயிற்று. ஆனால், அதன் நட்பு அமைப்பான ஹெஸ்பொல்லாவின் சக்தி பாதிக்கப்படாமல் இருந்தது.

உண்மையில் சிரிய எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் பெய்ரூட்டில் பெரும் விளம்பரத்துடன் மரோனைட் கிறிஸ்தவ சக்திகளும் மற்ற வாஷிங்டனுடன் பிணைந்த லெபனானியக் கட்சிகளும் அமைந்திருந்தது - ஹெஸ்பொல்லாவும் இன்னும் அதிகமான எதிர் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தி தலைநகரத்தின் தெருக்களுக்கு நூறாயிரக்கணக்கான மக்களைக் கொண்டு வந்தது. ஒரு புதிய உள்நாட்டுப் போர் ஏற்பட்டு விடுமோ என்ற கவலையில் செடர் புரட்சியை ஒட்டி ஏற்பட்ட அரசாங்கம் ஓர் உடன்பாட்டிற்கு வந்தது. அதன்படி ஹெஸ்பொல்லாவின் பிரதிநிதிகள் கபினெட் மந்திரி சபையில் இடம்பெற்றனர்.

**ஜே.கே**

ஜூலை 20 அன்று வெளியிட்ட கட்டுரை ஒன்றில் நியூயோர்க் டைம்ஸ், புஷ் நிர்வாகம் மற்றும் அமெரிக்க ஆளும் வட்டங்களில் பிரதிபலித்த பெருந்திகைப்பைப் பற்றி எழுதியதாவது! "மூன்று தசாப்தங்கள் இருந்த சிரிய கட்டுப்பாட்டை முடிவிற்குக் கொண்டு வந்த செடர் புரட்சி என அழைக்கப்பட்ட நிகழ்வில் வெளிப்பட்ட நம்பிக்கைகள் ஒருபுறம் இருந்தாலும், அரசியல் அலுவலகங்கள் மதத்தால் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரு அமைப்பின் இறுக்கமான குறுகிய பிடிக்குள் அரசாங்கம் சிக்கிக் கொண்டுள்ளது". (டைம்ஸும் லெபனானின் தெற்கில் உள்ள அண்டை நாட்டுக்கு இத்தகைய "குறுகிய இறுக்கமான பிடி" பற்றிய ஆட்சேபனைகளை கொண்டது கிடையாது. அது அனைத்து அரசியல் அதிகாரமும் ஒரு மதத்தின் பிரதிநிதிகளால் எடுத்துக்கொள்ளப்படுவதுடன் மட்மல்லாமல், தன்னையே அது "யூதர்கள் அரசு" என்றும் வரையறுத்துக் கொண்டுள்ளது.)

இக்கருத்து லெபனானிய மக்கள் மீதான தற்போதைய தாக்குதல்களின் உண்மை நோக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இதன் நோக்கம் அந்நாட்டை மறுசீரமைப்பிற்கு முற்றிலும் உட்படுத்துவதாகும். அதில் பாலஸ்தீனிய சார்பு, இஸ்ரேலிய எதிர்ப்பு உணர்வுடைய ஷியைட் மக்கள் முற்றிலும் நசுக்கப்படவேண்டும். அமெரிக்க சார்பு உடைய வலதுசாரி சக்திகள், எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்தவ பலாஞ்சிஸ்ட், மிகப் பெரிய அளவில் விரிவுபடுத்தப்படவேண்டும்.

1975இல் இருந்து 1990 வரை பெரும் சேதத்தை விளைவித்த லெபனானிய உள்நாட்டுப் போரின் விளைவை தலைகீழாக்கிவிட வேண்டும்?

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம் )

**சிரிப்பு 18**

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**அந்த** மர்பி படுக்கையும் இவருக்கு எதிரியாக முளைக்கிறது. இவன் கேவலம் மனிதன் தானே. இவன் சொல்வதை இயந்திரமாகிய நான் கேட்பானேன் என்ற எண்ணம் அதற்கு! இவர் விசையை அமுக்கினால் அது கீழே வருகிறது. இவர் படுப்பதற்கு முன் அது தானாகவே சென்று உள்ளே பதுங்கிக் கொள்கிறது! விடுவாரா சாப்ளின். அத்துடன் ஒரு போராட்டமே நடத்துகிறார். இவரைக் கீழே தள்ளி அவர் மேல் படுக்கிறது படுக்கை! விடாமல் போராடுகிறார். படுக்கை இரண்டாக உடைந்து சட்டம் மட்டும் கீழே விழுகிறது. இவரைத் தரையில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கிறது படுக்கை. அத்துடன் போராட முடியாமல் குளியல் அறைக்குச் செல்கிறார் சாப்ளின். குடி மயக்கத்தை விலக்க அப்படியே ஆடைகளோடு 'ஷவருக்கு' (Shower) அடியில் நிற்கிறார். நன்றாக நனைந்து விட்டார் சாப்ளின். அணிந்திருந்த 'சூட்டோடு'. அந்த



ஈரமான நிலையில் அவர் நிம்மதியாகத் தூங்கக்கூடிய ஒரே இடம் 'பாத் டப்' ('Bath Tub'). தண்ணீர் நிறைந்த குளியல் தொட்டியில் சுகமாகத் தூங்குகிறார் சாப்ளின்.

'ஒன்.ஏ.எம்.' பிரமாத வெற்றி பெற்றது. அதில் மிருக பொம்மைகளோடு அவர் பட்ட இன்னல்கள் போன்ற காட்சிகளெல்லாம் உலகெங்கும் புகழ்பெற்றது. வழக்கம் போல பலமொழிகளில், பல படங்களில், பல இடங்களில் இடத்தையும் பெற்றன.

'மர்பிஸ் லா' (Murphys Law ) என்று ஒன்று உண்டு. உயிரில்லாத பொருட்கள், மனிதனைப் படாத பாடு படுத்தும் என்ற ஒரு சித்தாந்தம் அது. அவசர அவசரமாக ஒரு முக்கியமான வேலைக்காக வெளியே செல்லும் பொழுது ஆடையில் ஒரு பட்டன் அறுந்து கீழே விழும்... டாக்ஸியிலிருந்து இறங்கும் பொழுது பணத்தை பர்ஸிலிருந்து எடுக்கும் நேரத்தில் காசு பர்ஸிலிருந்து விடைபெற்று டாக்ஸிக்குள் அடியில் விழுந்துவிடும். இவைகளெல்லாம், தன்னுடைய சுயநலத்திற்காக உயிரில்லாத பொருட்களை மனிதன் உபயோகிக்கிறான் என்பதை எதிர்த்து அவைகள் பழிதீர்த்துக் கொள்கின்றன என்றார் மர்பி. அதுதான் 'மர்பிஸ் லா.'

ஆரம்ப காலத்திலிருந்தே, அதுவும் திரைப்படம் ஊமையாக இருந்த பொழுது மக்களைச் சிரிக்க வைக்க இரண்டு உத்திகள் மீண்டும், மீண்டும் உபயோகப்படுத்தப்பட்டன. ஒருவரை ஒருவர் பளார் பளார் என்று அறைந்து கொள்வது.... அடிக்கடி தடுக்கி விழுவது... இந்த அறைந்து கொள்வதை ஆங்கிலத்தில் 'ஸ்லேப் ஸ்டிக்' (Slap - Stick) இது சர்க்கஸ் என்று அழைப்பார்கள். கோமாளிகள் (Clowns) உபயோகப்படுத்தி வந்த யுக்தி. இரண்டு மெல்லிய பலகைகள், ஒரு நுனியில் ஒட்ட வைக்கப்பட்டிருக்கும். ஒருவரை ஒருவர் அறையும் பொழுது பாக்கெட்டிலிருக்கும் இந்தப் பலகையை பலமாகத் தட்டுவார். அறைந்தாற் போல் தட்டுவார். பலமாக ஓசை வரும். அந்தக் கருவிதான் 'ஸ்லேப் ஸ்டிக்'. அர்த்தம் அதிகம் இல்லாத வெறும் கூத்தாக இருக்கும் நகைச்சுவை காட்சிகளுக்கே 'ஸ்லேப் ஸ்டிக் காமெடி' என்ற பெயர் வழக்கத்தில் வந்தது. சாதாரணமாக மனித வாழ்க்கையில் பலரை அறைய வேண்டுமென்று தோன்றுவது சகஜம். சூழ்நிலையின் காரணமாக அப்படிச் செய்ய முடியாது. திரைப்படத்தில் ஒரு ஒல்லியானவன், பலமான ஒருத்தனை அறைகிறான் என்றால் அதைக் கண்டு ரசிப்பது மனித இயல்பு. பலசாலியை அடித்து விட்டானே என்ற சந்தோஷம். இதுதான் இந்த வகையான நகைச்சுவை வெற்றி பெறுவதற்குக் காரணம்.

திடீரென்று கீழே விழுவதற்கு 'ப்ரேட்:. பால்' (aratfall ) என்று பெயர். ஒரு பணக்காரனோ அல்லது படாடோபமாக அலங்கரித்துக் கொண்டுவரும் ஒரு பருமனான பெண்ணோ திடீரென்று ஏதோ ஒன்று தடுக்கிக் கீழே விழுந்தால் சிரிப்பது மனித இயல்பு. ஒரு காட்சியில் ஒரு பெரிய மனிதர் சாலையில் நடந்து கொண்டிருப்பார். அதை அடுத்துவரும் ஷாட்டில் சாலையில் எறியப்பட்ட வாழைப்பழத்தோல். தோலைப் பார்த்தவுடனே மக்கள் சிரிக்கத் தொடங்கி விடுவார்கள். ஏனென்றால் அந்தப் பெரிய



மனிதர் வழுக்கி கீழே விழுவார் என்பது நிச்சயமாகத் தெரியும். ஆண்டுகள் எத்தனை ஆனாலும், இந்த வாழைப்பழத் தோல் காட்சி சிரிப்பை வரவழைக்கத் தவறியதே இல்லை. தெலுங்கில் ஒரு பழமொழி உண்டு. 'படித்தே' 'நவ்வனிவாடு' 'பசவாடு'! 'கீழே விழுந்தால் அதைப் பார்த்துச் சிரிக்காதவன் உன் எதிரி')!

இந்த இரண்டு யுக்திகளையும் சாப்ளின் ஆரம்ப காலத்திலிருந்தே தன்னுடைய படங்களில் முக்கியமாக ஊமைப் படங்களில் நிறையவே உபயோகப்படுத்தி இருக்கிறார். அந்தக் காட்சிகள் இன்றைய அளவிலும் சிரிப்பு ஒலிகளை எழுப்புகின்றன.

'ஒன் ஏ.எம்.' வெற்றிக்குப் பிறகு சாப்ளின் உருவாக்கிய படம் 'த கௌவுண்ட்' ('The Count '). இதில் சாப்ளின் ஒரு தையற்காரனின் உதவியாளர். தையற்காரன் கடோத்கஜனைப் போல் உருவம் கொண்ட எர்ரிக் கேம்பெல். சாப்ளினுக்கு முன்னேற வேண்டும் என்று ஆசை. ஒரு பெண்மணி கடைக்கு வந்த பொழுது அவளை அளவெடுக்கத் தொடங்குகிறார். அவர் எடுக்கும் அளவுகள் எல்லாம் புதுமையானவை. மூக்கின் நீளம்... காதின் நீளம்... நெற்றியின் அகலம்... விரல்களின் நீளம்... அதையெல்லாம் தவறாமல் காகிதத்தில் குறித்து வைக்கிறார். அந்தப் பெண்ணின் பொம்மை (Model) வைக்கப்பட்டிருக்கிறது. அவள் இடை அளவு எடுக்கும் பொழுது அந்தப் பெண்மணிக்குப் பின்னால் ஒரு அளவு பார்ப்பதற்கான ஒரு பொம்மையைச் சேர்த்து அளவெடுக்கிறார் சாப்ளின். இதற்கிடையே உள்ளே வருகிறார் தையற்காரர். சாப்ளினை உள்ளே



சென்று இஸ்திரி போடுமாறு உத்தரவிடுகிறார். சாப்ளின் எடுத்து வைத்திருந்த, அளவு விவரங்களைப் பார்த்துத் திடுக்கிடுகிறார். மீண்டும் அளவெடுக்கும் படலம் தொடங்குகிறது.

***(தொடரும்)***

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

## 22

### ஆடம்பர மன்னன் ஷா-ரூக்

**தனது** ஊதாரித்தனத்தினால் ஒரு தேசத்தினையே அழித்தொழித்த பெருமை ஒரு மன்னனுக்கு உண்டு. அவன்தான் ஷா-ரூக் மன்னன்.

மங்கோலியா என்ற புகழ்பெற்ற தேசம் இன்று வழக்கொழிந்து போனதிற்குக் காரணமாக, முழு உலக நாடுகளுமே இம்மன்னனை நோக்கியே தமது ஆட்காட்டி விரலை நீட்டுகின்றன.

13ஆம் நூற்றாண்டில் மங்கோலியா என்பது ஒரு பலமுள்ள தேசம். ஏராளமான போர் வீரர்களையும் பெரிய படையணிகளையும் கொண்டிருந்த மங்கோலியாவின் படையினர் அடிக்கடி அந்நிய தேசங்களின் மீது படை எடுப்பதும், அவர்களது வளங்களையும் சொத்துக்களையும் கொள்ளையடிப்பதிலுமே தமது கவனத்தினைச் செலுத்தி வந்தனர். சீனப் பெருஞ்சுவரானது மங்கோலியர்களின் படையெடுப்பினை தடுப்பதற்காகவே கட்டப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

1356ஆம் ஆண்டு தாமர்லன் எனும் மன்னன் மங்கோலிய அரசனாக முடி சூடினான். முடிசூடும்போது அவனது வயது ஆக 20 தான். பிறப்பிலிருந்தே வீரப் பிரதாபங்களில் இயல்பாகவே ஆர்வம் கொண்ட அவன், மன்னனாகப் பதவி ஏற்றதும் தனது படை பரிவாரங்களைப் பலப்படுத்தி போர் நடவடிக்கைகளுக்கே முன்னுரிமை செலுத்தினான். இதன் விளைவாக மத்திய மங்கோலியாவை மையமாக வைத்து பேர்சியா, துருக்கி, வட இந்தியா, கசகஸ்தான், தென் சீனா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பெரும் தேசத்தினையே தனது ஆளுகைக்குள் கொண்டு வந்தான். இதுதான் அப்போதைய மங்கோலிய பேரரசு என அழைக்கப்பட்டது.

யுத்த நடவடிக்கைகள் மூலம் தேசங்களை கைப்பற்றியது மட்டுமின்றி அவற்றை கட்டிக்காத்து, பாதுகாத்து ஆட்சி செய்ததிலும் தாமர்லன் மன்னன் என்ற பெயரை பெற்று விளங்கினான். அப்போது மங்கோலியா பெயரைக் கேட்டதும் தென் ஆசிய, கிழக்காசிய நாடுகள் நடுங்கியதற்கும் இதே தாமர்லன் மன்னனே முக்கிய காரணமாக இருந்தான்.

இவ்வாறு பெரும் பலத்துடன் மங்கோலிய தேசத்தை ஆட்சி புரிந்து வந்த தாமர்லன் மன்னனை திருமணம் முடிக்கும்படி அவனது நண்பர்களும், மங்கோலிய அரசில் உயர் பதவிகளில் இருந்தோரும் மிகவும் வற்புறுத்திக் கேட்டனர். நாட்டை ஆட்சி செய்வதிலும் போர் நடவடிக்கைகளிலும் மட்டுமே கவனம் செலுத்தி வந்த அவன் முதலில் மறுத்தாலும் ஏனையோரின் வற்புறுத்தலுக்கு இணங்க 1376ஆம் ஆண்டு தனது 40ஆவது வயதில் திருமணம் முடித்தான்.

இதன் விளைவாக 1371ஆம் ஆண்டில் தாமர்லன் தம்பதியினருக்கு ஷா-ரூக் பிறந்தான். அதாவது மங்கோலிய சரித்திரத்தையே புரட்டிப்போட்ட அதே ஷா-ரூக் மன்னனே இளவரசனாகப் பிறந்தான். 1405ஆம் ஆண்டில் ஷெளல்டர் எனும் இடத்தில் (இன்றைய தென் மேற்கு ரஷ்யா) நடந்த போரின் போது தனது 69ஆவது வயதில் தாமர்லன் மன்னன் மரணமடைந்தான். அப்போது இளவரசன் ஷா-ரூக்கின் வயது 28.

தனது தகப்பனாரின் மரணத்தினை அடுத்து உடனடியாகவே ஷா-ரூக், மங்கோலிய மன்னனாக முடிசூடினான். சிறு வயது முதலே மிகச் செல்லமாக வளர்க்கப்பட்ட ஷா-ரூக் எந்தவிதமான போர்ப் பயிற்சியோ அல்லது அரச நிர்வாக அனுபவமோ இல்லாத ஒருவனாகவே காணப்பட்டான்.



சிறு வயது முதலே ஆடம்பரத்திலும் கேளிக்கைகளிலும் மிகவும் விருப்பு கொண்டிருந்த அவன், தனது தந்தையின் திறமைகளில் நூறில் ஒரு பங்கினைக்கூடக் கொண்டிருக்கவில்லை. பதவி ஏற்றது முதலே கேளிக்கைகளிலும் விருந்துகளிலுமே முழு நேரத்தையும் செலவழித்தான். ஷா-ரூக் மன்னனாகப் பதவி ஏற்றதும் முதலில் செய்த வேலை மங்கோலிய அரண்மனையில் ஓர் அந்தப்புரத்தினை நிர்மாணித்ததுதான். அதனை விட பிரமாண்டமான கேளிக்கைக் கூடத்தினையும், விருந்துகள் படைப்பதற்காக ஒரு பாரிய சமையலறையினையும் கட்டுவித்தான். ஏறக்குறைய தான் செலவழிக்கும் நேரங்களின் பெரும்பங்கினை மது, மாது இல்லாமல்அவன் கழித்ததில்லை.

அரண்மனை பாதுகாப்பு ஆட்களை விட்டு, தேசத்தில் எங்கெங்கு அழகான இளம் பெண்கள் உள்ளனரோ, அவர்களைப் பிடித்து அரண்மனை அந்தப்புரத்தில் நிரப்பச் சொன்னான். இதன் காரணமாக நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பெண் பிள்ளைகள் வைத்திருந்த பெற்றோர் செய்வதறியாது திகைத்தனர். அவர்களினால் அரண்மனைப் படையினரிடமிருந்து தமது பெண் பிள்ளைகளைக் காப்பாற்ற முடியவில்லை. அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டு ஷா-ரூக்கினால் சீரழிக்கப்பட்ட பல இளம் பெண்கள், மங்கோலியப் படைவீரர்களின் குடும்பப் பெண்களாகக் காணப்பட்டனர். இதன் காரணமாகப் படை வீரர்களிடையே பெரும் முறுகலும் உள்நாட்டுப் புரட்சியும் வெடித்தது.

ஆனால் இவை எவை பற்றியும் கவலைப்படாமல் ஷா-ரூக் மன்னனோ தனது பால்ய நண்பர்களையும் அரண்மனைக்கு வரவழைத்து குடியேற வைத்து, தான் பெற்ற இன்பங்களை அவர்களும் பெற வைத்தான்.

அக்கால கட்டத்தில் ஒரு திடுக்கிடும் சம்பவமும் இடம்பெற்றது. மங்கோலிய அரண்மனை, படையினரால் அந்தப்புரத்திற்கு பிடித்து வரப்பட்ட பெண்களில் ஷா-ரூக்கின் ஒன்றுவிட்ட தங்கையும் (ஷா-ரூக்கின் சிறிய தாயின் மகள்) இருந்தாள். அவள் எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும்கூட போதையில் மிதந்திருந்த ஷா-ரூக், தானும் அவளை சீரழித்து தனது நண்பர்களிடமும் ஒப்படைத்தான்.

1477ஆம் ஆண்டு தனது 100ஆவது வயதில் ஷா-ரூக் காலமானபோது, அவன் பதவி ஏற்ற போது பிரமாண்டமாயிருந்த மங்கோலிய தேசம், சிதறி சின்னாபின்னமாகி இருந்தது. மேலும் ஷா-ரூக் குடியும் கூத்துமாக இருந்தபடியினால் திருமணமும் முடிக்கவில்லை. அவனுக்கு வாரிசுகளும் இருக்கவில்லை.

மேலும் மங்கோலிய தேசம் எவ்வித பொருளாதார வளங்களோ, சொத்துக்களோ கொண்டிருந்த தேசமும் அல்ல. எனவே ஏனைய அயல் நாடுகள் அதனைக் கைப்பற்றவும் முயலவில்லை.

ஷா-ரூக்கின் மறைவின் பின், மங்கோலிய தேசம் எவ்வித நிர்வாக ஏற்பாடுகளும் இன்றி அப்படியே வழக்கொழிந்து போய்விட்டதென்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.


***(இரகசியங்கள் தொடரும்...)***

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## கொலை முயற்சியிலிருந்து ராஜீவ் காந்தி மட்டுமல்ல ஜே. ஆரும் தப்பினார்

**ஈ.பி.ஆர்.எல்.எப்.,** ரெலோ இயக்கத்தவர்கள் மீது புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியதால், இந்திய அமைதிப் படை முகாம்களுக்குள் இந்த இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் தஞ்சம் பெறத் தொடங்கினர். இதே வேளை புலிகள் மீதும் அவ்வப்போது மாற்று இயக்கங்கள் தாக்குதல்களை நடத்தியதாகவும் புலிகள் குற்றஞ்சாட்டினர்.




1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மூன்றாம் திகதி மாங்குளத்திலிருந்த இந்தியப் படை முகாம் மீது புலிகள் வேட்டுகளைத் தீர்த்தனர். ஆனால் தாம் வேட்டுகளைத் தீர்க்கவில்லையென்று புலிகள் மறுப்புத் தெரிவித்தனர். இச் சம்பவம் நடைபெற்று ஒரு கிழமைக்குப் பின்னர், வட மாகாணத்திலிருந்த பத்து இந்தியப் படை முகாம்களுக்கு வெளியே புலிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அன்றைய தினம் புலிகளின் முக்கிய உறுப்பினரொருவர் யாழ்ப்பாணத்திலுள்ள கொக்குவில் என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார். புளொட் இயக்க உறுப்பினர்களே இக் கொலையைச் செய்தனரென்று புலிகள் குற்றஞ்சாட்டினர்.

இக் கொலை இடம்பெற்று நான்கு தினங்களின் பின்னர் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்.ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த 42 உறுப்பினர்களைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். இந்தப் படுகொலைகளை இந்தியா வன்மையாகக் கண்டித்தது. இயக்க மோதல்கள் தொடர்ந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று இந்தியா எச்சரிக்கை விடுத்தது. எனினும் மோதல்கள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. மட்டக்களப்பில் செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துக்குமிடையில் பயங்கர மோதலொன்று இடம்பெற்றது. இம் மோதலில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த 42 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் புலிகளிடமிருந்து ஆயுதங்களை முற்றுமுழுதாகக் களைவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் வற்புறுத்தியது. இதற்காக அப்போதைய கூட்டுப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்காவை இலங்கை அரசாங்கம் புதுடில்லிக்கு அனுப்பி வைத்தது. இந்திய இராணுவ அதிகாரிகளைப் புதுடில்லியில் சந்தித்த லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்கா, இலங்கையின் வடக்கு - கிழக்கில் புலிகள் இயக்கம் நடத்தி வரும் தாக்குதல்களையும் அங்கே அப்போது நிலவிய நிலைமைகள் குறித்தும் எடுத்து விளக்கினார். அத்துடன் புலிகள் இயக்கத்திடமுள்ள எஞ்சிய ஆயுதங்களையும் களையுமாறு வற்புறுத்தினார். இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரான சூரியநாராயணன் என்பவருக்கு செப்டெம்பர் ஏழாம் திகதி பிரபாகரன் வழங்கிய பேட்டி, இந்தியா மீது புலிகள் இயக்கம் கொண்டிருந்த வெறுப்பைத் தெளிவாகப் பிரதிபலித்தது. இலங்கைத் தமிழர்கள் மீது காலனித்துவ ஆதிக்கத்தைத் திணிக்க ராஜீவ் காந்தி முனைகிறாரென்று பிரபாகரன் குற்றஞ்சாட்டினார். இந்தியாவின் அரசியல் - பூகோள இலக்குகளை மேலும் ஈட்டிக் கொள்வதற்கு, இலங்கையில் காலடி வைக்கவே ஒப்பந்தம் இந்தியாவுக்கு உதவியுள்ளதென்றும் அவர் குற்றஞ்சாட்டினார். இந்தியப் படையை வாபஸ் பெறுவதற்கு தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் அப் பேட்டியில் பிரபாகரன் கூறியிருந்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராகப் புலிகள் இயக்கமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளும் எடுத்த எதிர்ப்பு நிலைப்பாடு, இந்தியாவுக்குப் பெரும் நெருக்கடியாக அமைந்திருந்தது. இதேவேளை ஆளும் கட்சியான ஐ.தே.க.வின் சிரேஷ்ட அங்கத்தவர்களான பிரதமர் பிரேமதாசாவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத்முதலியும் ஒப்பந்தத்துக்கெதிராக ஊடகப் பிரசாரங்களை முடுக்கி விட்டதோடு குழப்பங்களுக்கு தூண்டுகோலாகவும் செயற்பட்டனர்.

**(அரசியல் தொடர்)**

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் ஒப்பந்த விபரங்கள் வெளியிடப்படாமையும் சிங்களவர் தரப்பில் எதிர்ப்புகள் எழுவதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது. ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்ட கூட்டுப்படைகளின் பிரியாவிடை வைபவத்தின் போது கடற்படை வீரர் விஜிதமுனி விஜித ரோகண டி சில்வா, ராஜீவைத் தாக்கியமை ஆயுதப் படையினர் மத்தியிலிருந்த எதிர்ப்புணர்வைப் பிரதிபலித்தது. பிரியாவிடை அணிவகுப்பில் கலந்து கொள்ள வேண்டாமென்று ராஜீவ் காந்திக்குச் சிலர் ஆலோசனை கூறியிருந்தனர். அதற்கு இரு காரணங்கள் இருந்தன. அணிவகுப்பு மரியாதையில் கலந்து கொள்ளவிருந்த படைவீரர்களின் துப்பாக்கி முனைகளில் கூரான ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் ஒன்று. மற்றது காலிமுகத்திடலைச் சுற்றி உயர்ந்த கட்டிடங்கள் இருந்ததால் அவற்றிலிருந்து பிரதமரைக் குறி பார்த்துச் சுடக்கூடிய வாய்ப்புகள் உண்டென்ற சந்தேகம். இவற்றை எல்லாம் மீறி பிரியாவிடை அணிவகுப்பில் ராஜீவ் காந்தி கலந்து கொண்டார். ராஜீவ் காந்தி குண்டுகள் துளைக்காத அங்கியை அணிந்திருந்த போதும் துப்பாக்கியின் பின்புறத்தால் கடற்படை வீரர் விஜிதமுனி, ராஜீவ் காந்தியின் தலையைக் குறிவைத்துத் தாக்கியது அவரைக் கொலை செய்வதற்குத்தான். ராஜீவ் காந்தி குனிந்து கொண்டதால் தாக்குதல் தோள்பட்டையில் விழுந்தது. இத் தாக்குதலால் ராஜீவ் காந்தியின் தோள் பகுதிக்குக் கீழே கண்டல் காயமொன்று காணப்பட்டதாக அவரது மெய்ப்பாதுகாவலர்கள் தெரிவித்தனர். துப்பாக்கி முனையில் கூரிய கத்தியிருந்திருக்குமேயானால் அதனால் அவரை கடற்படை வீரர் குத்திக் கொன்றிருப்பாரென பாதுகாவலர்கள் தெரிவித்தனர். இத் தாக்குதலையடுத்து கடற்படைவீரரை மல்லுக்கட்டி மடக்கியவர் அப்போதையை இலங்கைக் கடற்படைத் தளபதி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருவரில் ஒருவரான ராஜீவ் காந்தி தாக்குதலிலிருந்து தப்பி மூன்று வாரங்களுக்குள் இலங்கைத் தரப்பில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கொல்ல முயற்சியெடுக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கொலை செய்வதற்காக பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் வைத்து கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றக் கூட்டத் தொடரை சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனா வருகை தந்திருந்தபோது இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதலில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா மயிரிழையில் உயிர் தப்பினார். அமைச்சர் அதுலத் முதலி படுகாயமடைந்தார். வேறு

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

சிலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. ஜே.வி.பி.யினரே இத் தாக்குதலை நடத்தினர். விமல் வீரவன்ஸவின் மைத்துனர் என்று கூறப்படும் அஜித்குமார என்பவர் இத்தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டார். இவர் அப்போது பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் ஓர் ஊழியராகக் கடமையாற்றி வந்தார்.

இதற்கிடையில் வடக்குக் கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகமொன்றினை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அங்கு சட்டம், ஒழுங்கினைக் கையாளுவது தொடர்பாகவும் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடத்தப்பட வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் விரும்பியது. இலங்கை - இந்திய

**ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருவரில் ஒருவரான ராஜீவ் காந்தி தாக்குதலிலிருந்து தப்பி மூன்று வாரங்களுக்குள் இலங்கைத் தரப்பில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கொல்ல முயற்சியெடுக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கொலை செய்வதற்காக பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் வைத்து கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஒத்திவைக்கப் பட்ட பாராளுமன்றக் கூட்டத் தொடரை சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனா வருகை தந்திருந்தபோது இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதலில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா மயிரிழையில் உயிர் தப்பினார். அமைச்சர் அதுலத் முதலி படுகாயமடைந்தார். வேறு சிலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. ஜே.வி.பி.யினரே இத் தாக்குதலை நடத்தினர்.**

அதிகாரிகளோடு தமிழ் குழுக்களின் பிரதிநிதிகளும் இக் கலந்துரையாடலில் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட வேண்டுமென்று பிரபாகரன் கோரிக்கை விடுத்தார். அத்துடன் வடக்குக் கிழக்கில் சட்டம், ஒழுங்கு விவகாரங்களைக் கையாளும் பொறுப்பை தமது இயக்கத்தவருக்கு வழங்குமாறும் பிரபாகரன் கோரிக்கை விடுத்தார். ஆகஸ்ட் மத்திய பகுதியில் கூட்டம் நடத்தப்பட்டது. பந்தோபஸ்துக் காரணங்களைக் காட்டி பிரபாகரன் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்து விட்டார். அன்ரன் பாலசிங்கம், திலீப் யோகி உட்பட புலிகள் இயக்கத்தின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் சிலரும் கூட்டத்தில் கலந்துகொள்ள கொழும்பு வந்திருந்தனர். இவர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரி ஒருவரின் வாசஸ்தலத்தில் தங்கியிருந்தனர். இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசியலமைப்பு சிபாரிசுகளை இலங்கை அரசாங்கமே முன்வைக்க வேண்டுமென்று இக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. உத்தேச வடக்குக் கிழக்கு நிர்வாகத்திற்கு சில அதிகாரங்களை இலங்கை அரசாங்கமே நேரடியாக வழங்க வேண்டுமென்றும் இதற்கான அதிகாரப் பகிர்வுகளை அமுல்படுத்துவதற்கான அரசியலமைப்புத் திருத்தங்களை இலங்கை அரசாங்கம் பின்னர் மேற்கொள்ளலாமென்றும் இக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

(தொடர்ந்து வடியும்....)




சுய நினைவை இழந்த பிரபாகரனின் உடலில் கோவிந்தன் புகுத்திக் கொள்கிறான் இப்போது பிரபாகரனின் உடலில் கோவிந்தன் நடமாட தொடங்கினான். ஆயினும் கோவிந்தன் சூரிய வெளிச்சத்தில் நடமாட மாட்டான் என்றும் இரவில்தான் அவன் நடமாடுவான் என்றும் ஜயந்தன் சொல்லி வைக்கிறான். வீடுமுறையில் வீடு திரும்பிய குமார், பிரபாகரனைத் தேடி அலைகிறான். தன் நண்பன் சேகரனிடம் கேட்டபோது அவன் முதல் நாள் ராத்திரி பார்த்ததாக சொல்கிறான்.

**"ராத்திரியிலயா,** எங்க பார்த்தே?"

"வேற எங்க சாராயக்கடைக்கிட்டத்தான்" - சிரித்தபடி பதிலளித்தான்.

"அவன் கூட வேற யாராவது இருந்தாங்களா?"

"குட்டப்பன் இருந்தான். அவங்க ரெண்டு பேரும் நெருங்கின சினேகிதர்களாச்சே!"

"அதுக்கப்புறம் குட்டப்பனையாவது பார்த்தாயா?"

"இல்லையே!"

எப்படியோ... விசாரிப்பதற்கு ஒரு ஆளாவது கிடைத்ததே என்று குட்டப்பனைத் தேடி அலையத் தொடங்கினார். குட்டப்பனையும் யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை.

உண்மையைச் சொன்னால் குட்டப்பன் ஊராரின் கண்ணில் படாமல் ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தான்.

விடியற்காலை நேரத்தில் டீக்கடை அருகில் பிரபாகரனைக் காணாத போதே அவனுக்குள் சந்தேகம் எழுந்தது. விடியற்காலை நேரத்திலேயே தனக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் விசாரித்தான். ஆனால், எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

குட்டப்பன் பயப்படத் தொடங்கினான்.

சந்து நாயரைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். பிரபாகரன் மற்றும் அவனது குடும்பத்தாருடன் அவரது உறவு நல்ல நிலையில் இல்லை என்பதும் தெரியும். எனவே குட்டப்பனின் சந்தேகம் அவர் மீதே அழுத்தமாகப் பதிந்தது.

வேறு எந்த வழியும் இல்லாமல் போனதால் மீண்டும் தேங்காய் கோடவுனுக்கே போய்ப் பார்ப்பதென்று தீர்மானித்தான். எனவே இருட்டும்வரை காத்திருந்தவன், தேங்காய் கோடவுனை நோக்கி நடந்தான். தொலைவிலிருந்து பார்த்தபோது கோடவுனுக்குள் வெளிச்சம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால், யாரும் அங்கு இருக்கமாட்டார்கள் என்று நினைத்தான்.

**எழுதுவது சிவன்**

கோடவுனுக்குள் நுழைந்தான். இருவரும் ஒன்றாக அமர்ந்து மதுவருந்திய கீற்றுக் கொட்டகைக்கு வந்து பார்த்தான். பிரபாகரன் இல்லை. அங்கேயே எங்காவது இருக்கலாம் என்று நினைத்தவன், சுவராக மறைக்கப்பட்டிருந்த பலகை இணைப்பின் இடைவெளி வழியாகப் பார்த்தான்.

உள்ளேயும் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உட்புறம் இருட்டாக இருந்ததால் உருவம் எதுவும் தட்டுப்படவாய்ப்பில்லை. ஆனால் மூச்சுவிடும் சத்தமாவது கேட்கிறதா என்று கவனித்தான். அப்படியும் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சட்டென்று யாரோ அவனது கழுத்தில் கையைப் பதித்து அவனை அப்படியே மேற்புறமாக உயர்த்துவதாகத் தோன்றியது.

குட்டப்பனால் அலறக்கூட முடியவில்லை. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவன் வெளிப்புறமாக வீசி எறியப்பட்டான்.

இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்று சேர்ந்து வந்தாலும் அவர்களை எதிர்க்கும் வல்லமையுள்ள குட்டப்பனால் அந்த நேரம் விழுந்த இடத்திலிருந்து எழுந்திருக்கக்கூட முடியவில்லை.

அவ்வளவு உயரத்திலிருந்து



அவன் வீசியெறியப்பட்டிருந்தான். அவனுக்குள் பயம் மெதுவாக உயரத் தொடங்கியது. ஆவி, பிரேதம், பிசாசு... என்று எதையெல்லாமோ கேள்விப்பட்டிருந்தான். ஆனால், அவற்றின் பலம் இன்னதென்று தெரியாது. ஒருவேளை அப்படி ஏதாவது ஒன்றுதான் தன்னைத் தூக்கி எறிந்திருக்குமோ?

வெகு நேர முயற்சிக்குப் பிறகு ஒருவிதமாக எழுந்தான். இருட்டிலேயே மெதுவாக நகரத் தொடங்கினான்.

கோவிந்தனால் வந்திருப்பவனை அடையாளம் தெரிந்துகொள்ள முடிந்தது. இறந்துபோன ஒருவனின் உடம்புக்குப் பதிலாக, உயிருள்ள மனிதனின் உடம்பே சௌகரியமாகக் கிடைத்திருக்கிறது.

குட்டப்பன் எங்கெல்லாம் பக்குவமாகத் தேடியும் யாரும் தட்டுப்படவில்லை.

மேற்கொண்டும் தான் அங்கிருப்பது நல்லதல்ல என்று தோன்றியதால் அங்கிருந்து கிளம்பினான்.

கோவிந்தன் இதையெல்லாம் கவனிக்கவே செய்தான். தனக்கு அபாரமான சக்தி கைவரப் பெற்றிருப்பதாக கோவிந்தனுக்குத் தெரிந்தது.

குடப்பன் அங்கிருந்து கிளம்பிய பிறகு கோவிந்தனும் அங்கிருந்து வெளியேறினான். அவனது மனம் குமாரையே நினைத்துக் கொண்டிருந்தது. தன்னுடைய முகத்தில் அசிட் ஊற்றியது அவன்தானே. இப்போது தான் விரும்பிய சக்தி தனக்குக் கை வந்திருப்பதால் குமாரைப் பழிவாங்கியே தீருவதென்ற முடிவுக்கு வந்தான். குமாரின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

பிரபாகரனது வீட்டுக்குப் போய் இரண்டாவது முறையாக விசாரித்துவிட்டு, அப்போது தான் குமார் வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தார். அவரது மனம் மிகவும் குழப்பமடைந்திருந்தது.

'நிச்சயமாக பிரபாகரனுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. அவன் எங்கே போயிருந்தாலும் இதற்குள் திரும்பி வந்திருக்கவேண்டும்.' -என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார்.

தெருவாசல் படிக்கு வந்த கோவிந்தன், சற்று நேரம் ஒதுங்கி நின்றுவிட்டு உட்புறமாக எட்டிப் பார்த்தான். குமார் வரந்தாவில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது ஸ்ரீதேவியும் அங்கு வந்து சேர்ந்தாள்.

சட்டென்று ஒரு பெண் உருவம் தட்டுப்பட்டதும் கோவிந்தன் சுவர் மறைவில் மறைந்து நின்றான்.

ஸ்ரீதேவிக்கு அவன் பயப்பட்டது தான் காரணம். அவளுக்குப் பிரத்தியேகமான சில சக்திகள் இருப்பது அவனுக்குத் தெரியும்.

"என்னங்க... நண்பரைக் காணோம்னு வருத்தப் படுறீங்களா?" - அவள் குமாரிடம் கேட்டாள்.

"உண்மைதான். அவனைத் தேடாத இடம் இல்லை. என்ன செய்யுறதுன்னு தெரியலை".

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# ஏமாற்றாதே... ஏமாறாதே!

**நன்றாக** யோசித்துப் பாருங்கள்... நமக்கு வரும் பெரும்பாலான பிரச்சினைகளுக்குக் காரணம், நாம் ஏதோ ஒரு விதத்தில் முட்டாளாக இருப்பதுதான் என்று புரிய வரும்.

இந்தப் புகழ் பெற்ற கதை உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். இருந்தாலும் இதை இங்கே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பேராசை பிடித்த பெண் ஒருத்தி, கடை வீதிக்குப் போனாள். அங்கே ஒரு வியாபாரி பிரமாண்டமான கூண்டு ஒன்றில் நூற்றுக்கணக்கான பறவைகளை வைத்திருந்தான். பார்ப்பதற்கு அத்தனையும் ஒன்று போல ஒரே சைஸில், மஞ்சள் நிறத்தில் இருந்தன. ஒரு பறவைக்கும், இன்னொரு பறவைக்கும் அவற்றைப் படைத்த கடவுளே வந்தாலும் வித்தியாசம் சொல்ல முடியாது! ஆனாலும் அந்தப் பெண் குறிப்பாக ஒரு பறவையைத் தேர்ந்தெடுத்து வாங்கப் போகிறவள் மாதிரி அந்தக் கூண்டைச் சுற்றிச்சுற்றி வந்தாள்.

இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அவள் கண்களில் ஒரு பறவை தனித்துத் தெரிந்தது. காரணம், அதன் விலை! அங்கே இருந்த ஒவ்வொரு பறவையின் கால்களிலும், "விலை பத்து ரூபாய்" என்று ஒரு துண்டுச் சீட்டில் எழுதிக் கட்டப்பட்டிருக்க, ஒரே ஒரு பறவையின் காலில் மட்டும் "விலை ஆயிரம் ரூபாய்" என்று எழுதப்பட்டிருந்தது.

"இது விசேஷமான பறவையா? இது மட்டும் ஏன் ஆயிரம் ரூபாய்?" என்று அவள் பறவை வியாபாரியிடம் விசாரித்தாள். உடனே அவன், "அடடே... நீங்க பெரிய புத்திசாலியாக இருப்பீர்கள் போல இருக்கிறதே! ஆமாம்... இந்தப் பறவை விசேஷமானது என்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? நீங்கள் என்ன, மறைந்த பிரபல பறவையியல் நிபுணர் சலீம் அலிக்குச் சொந்தமா?" என்று ஏகத்துக்கும் ஐஸ் வைக்க, அந்தப் பெண்ணுக்கு உச்சி குளிர்ந்துபோய்விட்டது. அவள் ஏமாறுவதற்குத் தயாராகிவிட்டாள் என்று பறவை வியாபாரிக்கு சர்வ நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. இப்போது அவன் தனது



தொழில் திறமையைக் காட்ட ஆரம்பித்தான்.

"இந்தப் பறவை பார்ப்பதற்கு மற்றப் பறவைகள் மாதிரியே இருந்தாலும் இது வித்தியாசமான பறவை. இது வெறுமனே பாட்டு மட்டும் பாடாது. இதற்கு இந்துஸ்தானி சங்கீதத்தில் இருந்து கர்நாடக சங்கீதம் வரை நிறையப் பாடல்கள் தெரியும்!"

கொஞ்சம் தாமதித்தாலும் இந்த அபூர்வப் பறவையை வேறு யாராவது வாங்கிப் போய்விடுவார்களோ என்ற படபடப்பில் அந்தப் பெண்மணி, உடனடியாக ஆயிரம் ரூபாவைக் கொடுத்து அந்தப் பறவையை வாங்கிக் கொண்டு போனாள்.

அடுத்த நாள், அந்தப் பறவை வியாபாரியைத் தேடி அந்தப் பெண்மணி கடுங்கோபத்தோடு வந்தாள். "நீ கொடுத்த பறவை பாடவே இல்லையே!" என்று ஆத்திரத்துடன் கத்தினாள். அவள் கத்தித் தீர்க்கும்வரை பொறுமையாக இருந்த வியாபாரி, "என்ன... பாடவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே!" என்று ஆச்சரியமாகக் கேட்டுவிட்டு, "சரி, அது மணியையாவது கொத்துகிறதா?" என்று கேட்டான்.

உடனே அந்தப் பெண்மணி, "என்ன! மணியா?" என்று திருப்பிக் கேட்க, "ஆமாம்மா... மணிதான்! மியூஸிக் இல்லாம பறவை எப்படிப் பாடும்? இந்தாங்க... இந்த மணியைக் கொண்டுபோய் அந்தப் பறவை இருக்கும் கூண்டில் கட்டுங்க. உடனே பறவை இந்த மணியைக் கொத்தும். மணி அசைந்து சத்தம் வந்ததும் அந்த இசைக்கு ஏற்ப பறவை பாட ஆரம்பிக்கும். மணியின் விலை அப்படி ஒன்றும் அதிகமில்லை... ஜஸ்ட், இருநூறு ரூபாய் தான்!" என்று ஒரு மணியை வேறு அவள் தலையில் கட்டி அனுப்பிவிட்டான்.

மறுநாள், அந்தப் பெண் மீண்டும் வந்தாள். "நீங்கள் கொடுத்த மணியைக் கட்டினேன். அப்போதும் அந்தப் பறவை பாடவில்லையே?" என்று அங்கலாய்த்தாள். அதற்கும் அந்தப் பறவை வியாபாரி சற்றும் அசராமல், "என்ன... மணியைக் கட்டிய பிறகும் பறவை பாடவில்லையா...? இது உண்மையிலேயே ஆச்சரியமான விஷயம்தான்! சரி, அது ஊஞ்சலாவது விளையாடுகிறதா, இல்லையா?" என்று கேட்டான். அந்தப் பெண் புரியாமல், "என்னது... ஊஞ்சலா!" என்று புருவத்தை உயர்த்தினாள்.

உடனே அந்த வியாபாரி, "என்னம்மா... ஆயிரம் ரூபாய் கொடுத்து பறவை வாங்கறீங்களே, இந்த விசேஷமான பறவையைப் பத்தி எல்லாம் தெரிஞ்சு வெச்சிருப்பீங்கன்னு பார்த்தேன்! இப்படி எதுவுமே தெரியாம இருக்கிறீங்களே? பறவை ஒரே இடத்துல சோம்பேறியா உட்கார்ந்துட்டிருந்தா அதுக்கு எப்படி குஷி வரும்? ஊஞ்சல் ஆடினாத்தானே அந்தக் குஷியில பாடணும்னு அதுக்கு மூடு வரும்? இந்தாங்க, வெறும் முந்நூறு ரூபாய்தான். இந்த ஊஞ்சலை வாங்கிட்டுப் போய் பறவை இருக்கும் கூண்டில் கட்டிப் பாருங்க, அப்புறம் தெரியும் பறவை எப்படி ஜோரா பாடுதுன்னு!" என்றான். அந்தப் பெண்ணும் பணம் கொடுத்து அந்த ஊஞ்சலை வாங்கிக் கொண்டு போனாள்.

அடுத்த நாள்... அந்தப் பெண் மிகவும் கோபமாக பறவை வியாபாரியிடம் வந்து, "என்னை என்ன ஏமாந்தவள்னு நினைச்சியா! பறவை இப்பவும் பாட மாட்டேங்குது!" என்று பொரிந்து தள்ளினாள்.

பறவை வியாபாரி அப்போதும் நிதானமாக, "என்ன சொல்றீங்கம்மா... பறவை மணியைக் கொத்துது. ஊஞ்சல் ஆடுது... ஆனா, பாட்டு மட்டும் பாடமாட்டேங்குதா? ஆச்சரியமாத்தான் இருக்கு! சரி, பறவைக் கூண்டுல கண்ணாடி வெச்சிருக்கீங்கதானே? அது கண்ணாடியில் தினம் தினம் தன்னைப் பார்த்துக்குதுதானே?" என்று கேட்டான்.

அந்தப் பெண் குழப்பமும் வியப்புமாக, "என்ன... பறவை கண்ணாடியில பார்த்துக்குமா?" என்று கேட்டாள்.

உடனே அந்தப் பறவை வியாபாரி, "அதானே பார்த்தேன்! பறவை ஏன் பாடலைனு இப்பத் தெரிஞ்சு போச்சு. என்னம்மா... பார்த்தா படிச்சவங்களா தெரியறீங்க... உங்களுக்குப் பறவை சைக்காலஜி தெரியலேங்குறது ஆச்சரியமாதான் இருக்கு. எந்தப் பறவையா இருந்தாலும் அது தனியா இருந்தா பாடாதும்மா. பேச்சுத் துணைக்கு யாராவது வேணும். சரி, அதனால பாதகமில்லை. நீங்க ஒரு கண்ணாடியை வாங்கிக் கூண்டுக்குள்ள வெச்சுட்டீங்கன்னா போதும்... தன் பிம்பத்தையே ஜோடின்னு நினைச்சுக்கிட்டு அதுகிட்ட பேச ஆரம்பிக்கும். பேச ஆரம்பிச்சாச்சுன்னா போதுமே... உடனே பாடவும் ஆரம்பிச்சுடும். இது வெறும் இருநூறு ரூபாய்தான். இந்தக் கண்ணாடியை வாங்கிட்டுப் போங்க!" என்று கூடுதலாக ஒரு கண்ணாடியை அவள் தலையில் கட்டி அனுப்பினான்.

அடுத்த நாள், அந்தப் பெண் மீண்டும் கடைக்கு வந்தாள். "பறவை வியாபாரி "என்ன விஷயம்?" என்று கேட்க, அந்தப் பெண் மிகுந்த வருத்தத்துடன், "பறவை செத்துப் போச்சுங்க!" என்றாள்.

"ஐயையோ! கடைசி வரைக்கும் அது ஒரு பாட்டுக்கூடப் பாடாமலேயா செத்துப் போயிடுச்சு?" என்று அவன் பதறிப்போய்க் கேட்க,

"ஆமாம்... பாடவில்லைதான்! ஆனால், சாவதற்குமுன் பேசியது. மணி, ஊஞ்சல், கண்ணாடி என்று எதை எதையோ உன் தலையில் கட்டி என்னைப் பாட வைப்பதற்காக யோசனை சொன்ன வியாபாரி எனக்குத் தீனி போடவேண்டும் என்று சொல்லித் தரவில்லையா?" என்று கேட்டது. பிறகு, "அந்த வியாபாரியிடம் ஏமாந்தது மாதிரி இனிமேல் யாரிடமும் ஏமாறாதே!" என்று கூறிவிட்டுச் செத்துவிட்டது" என்று கடுப்புடன் சொல்லிவிட்டு, அங்கிருந்து அகன்றாள் அந்தப் பெண்.

ஒருவனை யாராவது ஏமாற்றினால் குற்றவாளி ஏமாற்றியவன்தான். சந்தேகமில்லை... ஆனால், அதே ஆளிடம் ஒருவன் மீண்டும் மீண்டும் ஏமாந்துகொண்டிருந்தால் குற்றவாளி ஏமாற்றுகிறவன் அல்ல. ஏமாறுகிறவன்தான்!

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 181

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | ■ | 21 | 22 | ■ | ■ |
| ■ | 26 | ■ | 28 | | 30 |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1.ஐரோப்பிய நாடுகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
7.புத்திரி என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
11.கொலை அல்லது துன்புறுத்தல் (திரும்பியுள்ளது)
13.உணவாகப் பயன்படுவது, பென்சிலின் மருந்துடன் தொடர்புடையது. (குழம்பியுள்ளது)
17.நீர் நிலைகளில் அதிகமாகக் காணப்படும். (திரும்பியுள்ளது)
21.வில் என்றும் பொருள்.
28.லக்ஷ்மி அல்லது செல்வம் என்று கூறலாம்.
31.உண்மை என்றும் பொருள்.
35.வாழ்த்து என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1.தனுஷ் நடித்து வெளியான திரைப்படம்.
2.மல்யுத்தத்தில் சிறந்தவன்.
3.கொடியவன் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
6.பிரபல்யமாகி வரும் நடிகை. (தலைகீழ்)
11.மனயாத்தில் ஈமக்கிரியைக்காக அடுக்கப்பட்ட விறகு. (தலைகீழ்)
22.கார்த்திக் நடித்த திரைப்படம் (தலைகீழ்)
26.குழந்தை அல்லது பிள்ளை.
29.எலுமிச்சையை இப்படியும் கூறுவர்.
30.உயிர் என்றும் பொருள்படும். (தலைகீழ்)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 15.08.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-181
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 179க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

என். ஹமீட், 48, ஜயந்தி மாவத்த, அநுராதபுரம்.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. பைசல் அமீனா ஜலீல், 61/1A/1, மகா புத்கமுவ, முல்லேரியாவ.
2. சீ. தங்கவடிவேல், 91 பயினியர் வீதி, மட்டக்களப்பு.
3. ஏ. ஆர். எம். நதார், 117/6, ஜின்னா நகார், திருகோணமலை.
4. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
5. சல்மா சாஜஹான், 153/1A மஜிட் அலீம் வீதி, வாழைச்சேனை.
6. ம.அ. லிங்கம், 93/2 கம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 06
7. பு. பூமணி, இல. 276 மூர்வீதி, மன்னார்.
8. நி. இந்திராவதி, இல. 28, அலெக்சாண்ட்ரா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06.
9. எஸ். எல். எம். சுகைரி, இல. 216, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
10. ஏ. ஆர். எம். இறுசாத், 26/1A சுமனராம வீதி, கல்கிசை.

### குறுக்கெழுத்துப் போட்டி 179 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 [illegible] | 2 ம் | 3 [illegible] | ■ | 5 ல் | 6 [illegible] |
| 7 ய் | 8 [illegible] | 9 [illegible] | 10 [illegible] | 11 [illegible] | ■ |
| 13 [illegible] | 14 [illegible] | 15 ம் | ■ | 17 [illegible] | 18 லை |
| 19 ல் | ■ | ■ | 22 தீ | ■ | 24 ட |
| ■ | 26 சை | 27 [illegible] | ■ | 29 ண் | 30 வி |
| 31 [illegible] | 32 [illegible] | 33 ல் | ■ | 35 சா | ■ |

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



- வழங்குவது றாஹில்

## காவல்!

**வெ**ள்ளை நினைவுகளால் மனம் கழுவு!

உன்னில் புனிதம் முகாம் அமைக்கும்.

எறும்பளவு நீ பாவம் புரிந்தாலும் உன் மனது யானை அளவு பாரம் சோகம் சுமக்கும்.

உன் மனது உனக்கு எரிபொருள் ஊற்றும்போது நீ விபத்தில் விழுகிறாய்.

நீ உன் மனம் இயக்கும்போது ஆபத்தை உதைக்கின்றாய்.

உன் அறிவு மனதுக்கு வரம்பு வழங்கும்போது உணர்ச்சிகளை எரித்துவிடுகிறாய் நீ!

உணர்ச்சிகளால் நீ எழும்போது பெரும்பள்ளத்தில் விழுகிறாய்.

மரபுக் கவிதைபோல் உன் மனதுக்கு நீ எல்லைகள் வைக்கும் போது உனக்குள் பாவங்கள் புகுந்து கொள்வதற்கு மறுக்கின்றன.

உன் விழிகளுக்கு விடுதலை வழங்கியிருக்கிறாய்.

அது அழுக்குகளில் அமர்கிறது.

உனக்கு இமைகள் தரப்பட்டிருப்பது அசுத்தங்களைத் தவிர்ப்பதற்காக!

உன் மனதின் முக்கிய வாசல் உன் கண்கள் தான்.

நீ கண்களைத் திறந்து போடும் போது உன் மனம் குப்பைகளால் மூழ்கிச் செத்து விடுகிறது.

வீண் சத்தங்களுக்கு உன் காதுகளை விற்காதே!

இங்கே ஒலிக்கின்ற எல்லா வார்த்தைகளும் உனக்கானவை அல்ல.

வாசவார்த்தைகளை மட்டும் உன் காதுகள் சேகரிக்கும் போது உன் மனதில் ஆயிரம் பூஞ்சோலைகளின் நறுமணம் நிரம்புகிறது.

உன் மனதின் இன்னுமொரு ஜன்னல்தான் காதுகள் என்பதை நீ அங்கீகரி!

உன் வாய் உன்மனதின் கால்வாய். நீ அணைகட்டாதபோது துர்நாற்றத்தால் சூழப்படுகிறாய்.

உன் வார்த்தைகளை விட உன் மௌனம் அணுகுண்டுப் பலமுடையது.

உன்னிலிருந்து எவ்வளவு வார்த்தைகள் உதிர்கின்றனவோ அவ்வளவு பாவங்கள் உன்னில் முளைக்கின்றன.

நீ உயிரால் புனிதம் பரப்ப வேண்டாமா?

உன் வாழ்க்கையுடன் ஒளி தோழியாகக் கூடாதா?

நீ மனதைக் காதல் செய்.

மனம் உன்னைக் காவல் செய்யும்.

# ஏமாற்றங்கள்



மினவா மூர்சலின், தில்லையடி.

**ராஜா** போன பாதையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சிவாவிடம் வந்தவன், கட கடவென ஏதோவெல்லாம் பேசிவிட்டு கைக்குள் எதையோ திணித்து விட்டுச் சென்றுவிட்டான். ஓ...! அப்போது தான் தன் கையிலிருந்த கடிதத்தின் ஞாபகம் வந்தது சிவாவிற்கு. ம்...பெரிதாக எதை எழுதித் தொலைத்திருக்கப் போகிறாள். "என்னை மறந்திடுங்க சிவா" இதைத்தானே உருகி உருகி எழுதியிருப்பாள்.

படிக்க வேண்டுமென்ற கடமைக்காகக் கடிதத்தைப் பிரித்தான் சிவா. அன்புள்ள சிவா விற்கு இதை அவன் ஓரளவு எதிர்பார்த்தி ருந்தாலும் அதிருதியாகவே இருந்தது. இத் தனை காலமும் காதலன் சிவா என்றிருந்தது காணாமல் போய் அன்புள்ள சிவாவுடன் முற்றுப்பெற்றிருந்தது. கண்கள் கடிதத்தில் நிலைத்திருந்தாலும் சிந்தனையை நிலைக்க வைக்க அவன் படாத பாடு பட்டும் பலன் பூச்சியமாகவே இருந்தது.

'சாந்தி' பெயருக்கேற்ற அழகும் அமைதி யும் கொண்டவள். அவனுக்கு அவள் மேல் உண்டான இனம் புரியாத ஈர்ப்புக்கு அயல் வீடு என்பதும் சக நண்பி என்பதுமே காரண மாய் அமைந்தது. அவள் அறிவும் அறிவைத் தேடுவதில் அவள் கொண்ட ஆர்வமும் அவளை வெகுவாகக் கவர்ந்தவை. தன் மனத்திரையிலே பூட்டி வைத்திருந்த காதல் நாடகத்தை மேடையேற்ற ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த தருணம். அப்போதுதான் அவ்வகுப்பில் புதிய மாணவனாக ராஜா சேர்க்கப்பட்டான். ராஜா சாந்தியின் உறவுக் காரப் பையன் என்று அறிந்ததும் மகிழ்ந்து போனான் சிவா. ராஜாவைத் தன் உற்ற நண்பனாக்கி தன் காதலுக்குத் தூது போகும் படி வேண்டி அதில் வெற்றியும் கண்டான்.

பாடசாலை நாட்களில் சிவாவும் சாந்தியும் அடிக்கடி பேசிக்கொள்வார்கள். சில வேளைகளில் சிவா நம்பிக்கையற்றுப் பேசினால் கூட "என்ன சிவா இப்பிடிப் பேசு றீங்க. எங்கப்பாவுக்கு நான் ஒரே பொண்ணு. இது வரையும் என் ஆசைகள் எதையுமே அப்பா நிராகரிச்சதில்ல; நம்ம காதலையும் நிராகரிக்க மாட்டாருன்னு நம்புறன். ப்ளீஸ் எங்கப்பாவ நம்புங்க" என்பாள் கண்ணீருடன். அப்பொழுதெல்லாம் அவளது காதலில் தன்னை மறந்து போவான் சிவா.

வருடங்கள் இரண்டு உருண்டோடின. அன்று அவர்கள் கல்லூரி வாழ்விற்கு முற்றுப் புள்ளியிடும் நாள். கண்ணீருடன் அனைவரும் விடைபெற்றுச் சென்றனர். சிவாவும் சாந்தியும் கவலையைக் கட்டுப்படுத்தி அயல் வீட்ட வர்கள் என்ற திருப்தியோடு விடைபெற்றுச் சென்றனர்.

அயல் வீட்டவர்கள் என்பதால் அடிக்கடி பார்த்துக் கொள்வார்களே தவிர அதன் பின்னர் பேசிக் கொண்டது கிடையாது. ஆனா லும் கடிதங்களும் பரிசில்கள் பலவும் பரிமாறப் பட்டன. இருவருக்கும் உதவியாய் ராஜாதான் செயற்பட்டான்.

வருடங்கள் நான்கு கடந்தன. தந்தையின் துணிக்கடையைக் கவனிக்கும் பொறுப்பு சிவாவிடம் ஒப்படைக்கப்பட்டது. என்னதான் வேலைப்பளுவாக இருந்தாலும் சாந்திக்கு மடலெழுத அவன் மறந்ததே கிடையாது. அன்றும் அப்படித்தான். நம் காதலை சும்மா அப்பாவிடம் கூறிவிடு என்று மடலெழுதி அதை ராஜாவிடம் கொடுத்தனுப்ப வேண்டு மென்ற எண்ணத்தோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே வந்து கொண்டிருந்த சாந்தியின் தந்தை சிவாவைக் கண்டதும் பைக்கை நிறுத்தி, சிவா உங்க கூட கொஞ்சம் பேசணும் என்றதும் என்னவாக இருக்கும் ஆயிரம் எண்ணங்களோடு பைக்கை நிறுத்தியவன் வினாக்குறியோடு அவர் முகத்தை ஏறிட்டான்.

"சிவா நீங்க ஏம் பொண்ணு சாந்தியக் காதலிக்கிறதாக் கேள்விப்பட்டேன். அவ ளுக்கும் அவளோட கோடீஸ்வர அத்தானுக் கும் கல்யாணம் நிச்சயமாயிடிச்சி. அவ சந்தோஷமா வாழனும்னு நீங்க நெனச்சீங் கன்னா அவள மறந்துட்டு உங்க தகுதிக் கேத்த பொண்ணாப் பாத்துக்குங்க" கூறிவிட்டு அவன் பதிலுக்குக் காத்திராது விரைந்து விட் டார் அவர். ஆயிரம் மின்னல்கள் ஒன்றாய்த் தாக்கிய உணர்வோடு வீடு திரும்பினான் சிவா.

ஒரு வாரமாய் ஊணுறக்கம் மறந்து ஊமையாய் உலாவிய சிவாவிடம் பலரும் பலவாறு விசாரித்தும் பதில் மௌனமே. பைத்தியக்காரனாய்ப் பவனி வந்த அவனைப் பண்பானவனாய் மாற்ற வந்த மடல் தான் அதுவென அதுவரை அவன் நினைத்திருக்க வில்லை.

"சிவா...சிவா...டேய் சிவா... என்னடா பன்னிட்டிருக்கா...? இந்தா இந்தப் படத்தப்பாரு. ரொம்ப லட்சணமான பொண்ணு. பணக்காரக் குடும்பம். குடும்பத்துல எல்லாருமே படிச்ச வங்க. இத விட்டா வேறு நல்ல சம்பந்தம் கிடைக் கிறது ரொம்பக் கஷ்டம். வேணாம்னு மட்டும் சொல் லிராத" என்றவாறே புகைப்படத்தை அவன் முன் நீட்டினாள் சிவாவின் தாய்.

தாயின் பேச்சில் சிந்தனை கலைந்தவன், புகைப்படத்தை வாங்கி மேசையில் போட்டு விட்டு கடிதத்தில் கண்களை மேய விட்டான்.

நான் இத்தனை நாளும் உங்களைக் காதலித்தது உண்மை. ஆனாலும் வெளிநாட்டிலிருக்கும் என் அத்தானின் விருப்பத்திற்கிணங்க என்னை அவருக்குக் கட்டி வைக்க அப்பா சம்மதித்து விட்டார். நான் சந்தோஷமாக வாழ வேண்டுமானால் அவரைத்தான் கட்ட வேண்டும் என்கிறார் என் அப்பா. அவரின் ஆசையிலும் நியாயம் இருக்கிறது தானே. அதனால்தான் நானும் இத்திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டேன். என் பூரண சம்மதத்துடன் தான் இத்திருமணம் நடை பெறுகின்றது. அடுத்த மாதம் கனடாவுக்குப் பயணமாகின்றேன். அங்கே தான் என் திருமணம். நீங்கள் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து சந்தோஷமாக வாழுங்கள். தயவு செய்து என் வாழ்வில் மட்டும் குறுக்கிட்டு விடாதீர்கள்.

இப் படிக்கு

சாந்தி

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போலிருந்தது சிவாவிற்கு. தன் காதலை மறக்க முடியாவிடினும் அந்தத் துரோகிக்காய் தன் வாழ்வை இழக்க அவன் தயாராயில்லை. மேசையில் கிடந்த புகைப்படத்தைப் பார்க்காமலேயே அம்மாவிடம் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான்.

மாதமொன்று கடந்தது. சாந்தி கனடா பயண மானாள். அதே வருட முடி வில் சிவாவின் திருமணமும் விமரிசையாக நடந்து முடிந்தது. திருமணம் முடிந்த கையோடு உறவினர் நண்பர்களிடம் விடைபெற்று மனைவியின் ஊருக்குக் கிளம்பிச் சென்றான் சிவா. அதன் பின் தன் வீட்டுக்கு அவன் வரவுமில்லை. வர வேண்டுமென்று எண்ணவுமில்லை.

சிவாவுக்குத் திருமணமாகி கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கடந்தன. அன்று தான் அவன் மனைவியுடன் தன் ஊருக்குப் பயணமாகிக் கொண்டிருந்தான். அதுவும் மனைவியின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் தான் அந்தப் பயண ஏற்பாடு. காலையிலே புறப்பட்ட பயணம் மாலையில் தான் ஊர் வந்து சேர்ந்தார்கள். மூன்று வருடங் களாகியும் எந்த ஒரு மாற்றமும் காணாதிருந்த ஊரைப் பார்க்க அவனுக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது.

களைப்போடு வீடு வந்து சேர்ந்தவனுக்கு அம்மா வீட்டில் இல்லாதிருந்தது எரிச்சலை மூட்டியது. அவனது தங்கை தான் எங்கோ ஓடிச்சென்று அம்மாவை அழைத்து வந்தாள். மகனைக் காணும் ஆவலோடு ஓடி வந்தாள் சிவாவின் தாய். நாங்க வார நேரம் பார்த்து எங்கேம்மா போனே என்று கோபத்தோடு வினவியவனிடம், அது வந்து சிவா உங்கூடப் படிச்சாளே சாந்தி அவ வெளிநாட்டில இருந்து வந்திருக்கா - அதுதான் ஒருக்காப் பாத்திட்டு வரலா முன்னு போனேன் என்று இழுத்தவளின் முகம் கறுப்பாகிப் போனதைக் கவனித்த சிவா, தன்னையறியாம லேயே எப்படிம்மா இருக்கா என்று கேட்டு விட்டான்.

"அதயேம்பா கேக்கற, எதிர்பார்ப்பு களோட போய் ஏமாற்றத்தோட திரும்பியிருக்கா. பாவம்பா அந்தப் பொண்ணு. அவ அப் பஞ் செய்த தப்புக்கு அவ அநுபவிக்க வேண்டியதாப் போயிட்டுது. ம்..." என்ற பெருமூச் சோடு மீண்டும் அவளே தொடர்ந்தாள்.

அந்தப்பய சின்ன வனா இருந்தப்போ அவங்க வறுமைல வாடிக் கிட்டிருந்தாங்களாம். அதனால அவனோட படிப்புக்கு உதவி கேட்டு சாந்தியோட அப்பாகிட்டப் போயிருக்கான் அவன். உதவி பண்ண முடியாதுன்னு சொல்லி நாலு பேரு முன்னால அவனை அவமானப்படுத்தி அனுப்பியிருக்கார். அது மட்டுமில்லாம அவனோட குடும்பத்தைத் தரக்குறைவா நடத்தியிருக்கார். சின்ன வயசில இருந்தே மாமாவோட கொடுமைகளை சகிக்க முடியாம ஊமையா அழுதிருக்கான் அவன். என்னைக்காவது ஒருநாள் அவர் தன் காலடிக்கு வர வேண்டுமென்ற அவாவோடு படித்துப் பட்டம் பெற்று பட்டத்தோடு வெளி நாடு பறந்தவன் அவன்.

தான் செய்ததையெல்லாம் அவன் மறந்திருப்பான் என்ற எண்ணத்தோடு அவனை மகளுக்கு மாப்பிள்ளையாக்கப் பாத்திருக்கிறார் அவர். பிறகென்ன சந்தர்ப் பத்தை எதிர்பார்த்திருந்த அவனும் ஓம் படவே சாந்தி கனடா பயணமானாள். அவனது தீர்மானத்தின் படி அவளைத் திருமணம் செய்து புகைப்படங்களோடு தான் சந்தோஷமாக வாழ்வதாக சாந்தி எழுதுவது போல் கடிதம் எழுதி அவளுடைய பெற்றோ ருக்கு அனுப்பியிருக்கிறான்.

ஒரு வருஷத்துக்கப்புறம் அந்தப்பய தன்னோட காதலியக் கட்டிக்கிட்டு ரெண்டு பேருமா சேர்ந்து சாந்தியக் கொடுமைப் படுத்தியிருக்காங்க. தன் நிலையைப் பெற்றோருக்குப் புரிய வைக்க முடியாம லேயே மூணு வருஷத்த கண்ணீரோடு கழிச்சிருக்கிறா அவ. அதுக்கப்புறம் தான் அந்தப் பையனோட வீட்டுக்குப் பக்கத்து வீட்டில வசிக்கிற அம்மாகிட்ட எல்லாத் தையும் சொல்லி அந்த அம்மாட கணவரின் உதவியோட தப்பிச்சி நாடு வந்து சேர்ந்தி ருக்கா. திடீர்னு தனிமரமா வந்து நிக்கிற மகளப்பார்த்து அவளோட அம்மா அப்பா ஆடிப்போய்ட்டாங்களாம். விஷயத்த மண்போட்டு மறைக்க முன்னமே ஊர் பூராக் கதை பரவி பெரிய வில்லங்கமாப் போய்ட் டுது அவங்களுக்கு. அவரோட பணத்தாசை யால் பாவம் வாழ வேண்டிய பொண்ணு வாழாவெட்டியா வந்து நிக்கிறா? சோகம் தோய்ந்த முகத்துடனே கூறி முடித்தாள் சிவாவின் தாய்.

"நாங்கள என்னம்மா பண்றது அவ அப்பா எதிர்பார்த்த சந்தோஷமான வாழ்க் கையைத் தானே அவ வாழ்ந்திட்டு வந்திருக்கா." தன்னை மீறி வெளிவந்த வார்த்தைகளுக்குக் கஷ்டப்பட்டு கடிவாளமிட்டான் சிவா.-

***(யாவும் கற்பனை)***

# கபடப் புத்தி

**பயிரைப்** பறிகொடுத்த சேவு மனம் கொதிக்க, மாட்டுச் சொந்தக்காரன் கச்சியைச் சந்திக்கிறான்.

"இஞ்சுப்பாரு கச்சி, ஒன்ட மாடு இரவயில வந்து என்டவளவுக்குள்ள வளர்ந்திருந்த பயிரெல்லாத்தையும் திண்டுப்புட்டு போயிட்டு" என்று கடுகடுத்த வார்த்தையில விளக்கினார் சேவு. அதற்கு கச்சி "எல்லாத்தையும் திங்கங்காட்டிலும் ஏன்டா பார்த்துக்கிட்டு இருந்தா? என்ட மாட்ட மகரியாப் போனதும் ஒடனயே தேடிப் புடிச்சிக் கட்டிப் போடுவேனே வேலியை ஒழுங்கா சரி பண்ணிவை என்றார்.

அடுத்த நாள் அதேய சேவுத்தம்பி கச்சியின் வாசலுக்கு வந்து "கச்சி கொஞ்சம் என்ட ஊட்ட வாவன்" என்றார். அதற்கு கச்சி "ஏன்டா வரனும்" என்றார்.

"இல்ல கச்சி நாநா நீங்களும் வயசில பெரிய மனிசன், அதாலதான் ஏசி மனச முறிச்சிக்கப் பொறாதென்டுதான் கூப்புடுறன். இல்ல எண்டு சொல்லிடாம வாங்க...வாங்க" என்று ஒன்றுக்குப் பத்துத் தடவைகள் அழைத்தபோதும், கச்சி நகரவேயில்லை. காரணத்தை சொல்லென்று மட்டுமே அடம்பிடித்தார்.

சேவுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்ததால் கொஞ்சம் காரசாரமான வார்த்தைகளால், கச்சியை பாராட்டம் தொடங்கினார்.

அப்போது 'ஓங்கட வெள்ளையும், கறுப்புங் கலந்த மாடும், சின்ன ரெண்டு பசுவும் இரவு சாத்தியிருந்த கடப்பப் பேத்தெரிஞ்சிட்டு வந்து எல்லாப் பயிரையும் திண்டுட்டுது எப்புடிச் சொன்னாலும் நீங்க கேக்கிறமாதிரி இல்ல இப்பதான் பூவும்...பிஞ்சுமா இருந்த கொச்சியடி அத்துனயயும் ஒன்னுமில்லாம திண்டுட்டு காணாதத்துக்கு வாழையையும் சவட்டி வாசல்லயும் சாணி போட்டுட்டுப் போயிட்டுது" என்று சேவு சொல்லி முடிக்கும்போது, பக்கத்து வீட்டுக் காதர் அங்குவர உடனே கச்சு காதரைக் காட்டி

"சேவு...சேவு இந்தா வார காதருக்கிட்ட கேட்டுப்பாருடா!...இவன்தான் நேத்து என்டமாட்ட வீசிப் புடிச்சித் தந்தான். அப்புடியே கொண்டு வந்து கட்டுன மாட்ட காலயில ஏழு மணிக்குத் தான் அவுத்துவுட்டன்."

"இன்னயில இருந்து மாடு திண்டுப்போட்டு மண்ணாங்கட்டி திண்டுப்போட்டு எண்டு கத்திக்கிட்டு வாரத்த உட்டுப்புட்டு ஒன்ட வேலையப்பாரு. இல்லயண்டா சும்மா கெடக்கற கத்திக்குக் கூர்ப்பார்க்கிற நெலம வரும்" என்றார் கச்சி.

"அந்த கொடிய விசம் கலந்த வார்த்தைகளைக் கேட்ட சேவு காதரிடம் தம்பி நீங்க நேத்து உண்மையா மாட்டப் புடிச்சிக் குடுத்தீங்களா?" என்று கேட்டதற்கு அவனும் ஓமோம் என்றான்.



அ.கா.மு.நிஸ்வின், மூதூர் - 01.

சேவுக்கும் ஒன்றும் செய்ய முடியாமல் அவமானமாய் போய்விட்டது.

சேவுக்கு ஆத்திரமும், சந்தேகமும் சரி விகிதத்தில் பொத்துக் கொண்டு வந்தது. மாடு கட்டியதாய் உரிமைக்காரன் கூறுகிறான். அதை நிரூபிக்க சிலர் காரணமாய் இருப்பதும் கண்டு தனது கண்பார்வையில் சந்தேகப்பட்டான் சேவு. ஆனால் கச்சியின் மாடுதான் சேவுவின் வளவுக்குள் புகுந்து பயிரை முற்றாய் மேய்ந்தது என்பது உண்மையாக்கப்பட்டது.

சேவு பொல்லுக் கம்போடு அன்று இரவு வளவின் கடப்பை இலேசாக திறந்து போட்டுவிட்டு இருட்டில் இருட்டாக ஒளித்திருந்தான். நள்ளிரவு பன்னிரெண்டு மணியைத் தாண்டிவிட்டது. இரவு மூன்று மணியையும் கடக்க இன்னும் விடிவதற்கு இரண்டு மணியிருக்கையில் தன்னை அறியாமலே தகரப் பத்தையின் மேலே தூங்கி விட்டான்.

காலையில் மனைவி வந்துதான் எழுப்பி விட்டாள். அன்று மாடு வரவில்லை. அடுத்தடுத்த நாட்களும் இப்படித்தான், வளவின் கதவுகளை திறந்துவிட்டு காத்திருந்தும் மாடுகள் வரவேயில்லை. சேவுக்கு சந்தேகம் மீண்டும் எழுந்தது "பச்சச் சேல கட்டுறவை எல்லாம் நம்மட பொண்டாட்டியா" என்றாற்போல், அதே நிறத்துல வேறயாருடயும் மாடு வந்திருக்கும் என்று நினைத்து மனதை சமாதானப்படுத்திக் கொண்டார். ஒரு வாரம் புரண்டு ஓடியதும், நள்ளிரவை தாண்டிவிட்டது. வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் சேவுவின் தூக்கத்தை மொரு...மொரு...மொரு" வென்ற சத்தம் கலைத்தது. அப்படியே பாயில் புரண்டவாறு வெளியே கேட்கும் சத்தத்தை அவதானித்தான் சேகு. யாரோ நடமாடுவது போலிருந்தது. பயத்தால் கதவை திறக்கவில்லை.

வீட்டுக்குள்ளிலிருந்த கதிரையை மெல்லத் தூக்கி கதவோரத்தில் வைத்து விட்டு, கல்லோட்டையால் பார்த்தான். வளவுக்குள் மாடேறியது தெரிந்தது. உடனே கதிரையை விட்டிறங்கி கதவை மெல்லத்திறக்க முற்பட்டான். பக்கத்தில் சாத்தி இருந்த கதவுச் சட்டம் தகரக் கதவில் 'மளீரென' விழுந்ததால், மாடுகள் ஓடத் தொடங்கின.

அவரும் வேகமாக கதவை இழுத்துத் திறந்து பொல்லுக் கம்போடு வெளியே வந்து மாட்டை துரத்தித் துரத்தி பொல்லுக் கம்பால் எறிந்தார். மாட்டுக்குப் படவேயில்லை. மாடுகள் தப்பியோடியது. அப்போது கச்சியின் வெள்ளையும், கறுப்பும் கலந்த மாடும், இரண்டு சின்னப் பசுவும் தான் என்பதை யூகித்துக் கொண்டான்.

சூரியன் எழுந்து நகர இருக்கையில், கச்சியின் வீட்டுப் பக்கம் வந்தான் சேவு. மாடுகள் யாவும் கட்டிக் கிடந்தன. அதைக் கண்டதும் இதன் மர்மம் என்னவென்று சேவு புரியாமல் திரும்பிவிட்டான்.

அந்த நேரத்தில் தான் காதர் கச்சியின் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள ஒரு வீட்டுக்கு பதினெட்டாவது உலக உதைப்பந்தாட்டப் போட்டியை தொலைக்காட்சியில் பார்க்கச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டான். அன்றொரு நாள் "தா...தா...தா...த" என்று மாடு துரத்தும் சத்தம் கேட்டு அவன் வெளியே பார்க்க வேண்டும் என்று வந்தவன், கச்சியின் கையில் மாடுகள் கட்டிய கயிறு இருந்ததை அவதானித்தான். திடீரென நெஞ்சு வெடிக்கும் போல் இருந்தது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த இரண்டு நாட்களும் அவதானித்தபோது தனக்குள்ளேயே காதர் "அடேய் கச்சி நீ காலையில மாட்டமேய உட்டுப்புட்டு மாலையில எல்லோருக்கும் தெரியக் கட்டிப்புட்டு இரவயில அவுத்து மேயிரத்துக்காக அவன்ட , இவன்ட வளவுக்குள்ள உட்டுப்புட்டு விடிய மொத மாடு வந்துடும். அதக் கட்டிப் போட்டுத்தானாடா!...இவ்வளவு பேரையும் பேக்காட்டுறா? ஒன்ன மாதிரி மாட்டையும் மாத்திப் போட்டியடா...! கண்றாவி" என்று நினைவுகளை அறுத்து விட்டு சேகுவின் வீட்டுக்கு காதர் விரைந்து சேகுவிடம் அனைத்தையும் அப்படியே அள்ளியள்ளி வைத்தான்.

அடுத்த நாள் நள்ளிரவில் கச்சி மாட்டை அவுத்து விடுகிறார். மாடுகள் போகின்றன சேகுவும் வளவுக் கதவைத் திறந்து விட்டு காத்துக் கொண்டிருக்கிறான். மாடு வளவை நோக்கி... நோக்கி வருகின்றன. தந்திரமாய் மாடு மேய்க்கும் கச்சியின் கபடப் புத்திகள் காற்றில் பறக்கின்றன.

எது எப்படி இருந்தாலும், மாட்டில் தப்பில்லை. அது பகுத்தறிவற்றது. மந்தை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் மந்தையாகிடாதிருப்பதுதான் புத்திசாலித்தனமானது. வேலி பயிரை மேயும் காலத்தில், மாடுகள் வேலியை தாண்டி வருவதென்றால், விவசாயி முதலில் வேலியடைத்துப் பழக வேண்டும். ஆகவே ஐயறிவால் வருகின்ற உள்ளக்குமுறல்களை ஆறறிவால் முற்றுப்பெற வைக்க முடியாமல் போவதால்தான், இன்னும் இந்நாட்டுக்கும் பல நாட்டுக்கும் சுதந்திரம் சமாதானம் சிறகடிக்க முடியாமலிருக்கிறதோ!...

***(யாவும் கற்பனை)***

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**மனித** வாழ்க்கை துன்பமற்றதாக இருக்க வேண்டும் என்பதற்காக உலகில் சட்டதிட்டங்கள், நல்லிணக்க சபைகளெல்லாம் இரவு பகல் பாராமல் மனித சமூக சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. இருக்கின்ற போதிலும், மனித சமுதாயமானது மென்மேலும் அழிவுப்பாதையிலும் சமுதாய சீர்கேடுகளிலுமே நாட்டங் கொண்டிருப்பதன் காரணம் என்ன என்பதை ஆய்வுக்கண்கொண்டு பார்ப்பதை விடுத்து, அன்றாடம் நடக்கின்ற நிகழ்வுகளுக்கு மட்டும் பரிகாரம் காணும் நோக்கமானது சமூகத்தில் சிக்கல்களையும், செயற்பாடுகளில் தெளிவின்மையையும் தோற்றுவிக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணமான மனத்தின் கண் திடமற்ற தன்மை வளர்வதற்கான பிறச் சூழல் இல்லாத காரணமும், தன்னடக்கம் இல்லாத சபலமும் பிரதானமான காரணங்களாகவுள்ளது. இதனால் தனக்குத்தானே தீங்கைத் தேடிக்கொள்ளும் மனக் கிளர்ச்சிக்கு இடந்தராமலிருந்தால் துன்பங்களும் நம்மை அணுகாதிக்குமல்லவா?

**"சிறைகாக்கும் காப்புவென் செய்யும் மகளிர்**
**நிறைகாக்குங் காப்பே தலை"** *குறள் : 57*

பெண்கள் நிறை என்னும் காப்பால் தம்மைக் காத்துக் கொள்ளாதவரை வேறு எந்தவித காப்புகளாலும் பயனில்லை.

## யார் இந்தப் பேரழகி?

**தருவது கற்பகன்**

**உ**ப்பரிகையை விட்டுத் தன் சயன அறையை அடைந்த மரகதவல்லி, பஞ்சணையில் குப்புற விழுந்த பொழுதும் அந்தப் பட்டு மெத்தை முள்ளாகக் குத்தியது. அவளை அறியாமலேயே அவளது காந்த விழிகள் சொரிந்த கண்ணீர் தலையணையை நனைத்தது. எதற்காக இவையெல்லாம்? என்ற கேள்வி அவள் மனதில் எழுந்த போது விடை காண முடியாததோர் தவிப்பு. அவள் யாராக இருக்கும்? நான் அழுகிறேனா? இல்லை, இல்லை அழவில்லையென்றால் கண்களிலிருந்து என்றுமே இல்லாத அளவுக்குக் கண்ணீர் பெருக்கெடுக்கிறதே, ஏன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடைதான் என்ன? விடை காண முடியாத கேள்விகள் ஆயிரமாயிரம் அவள் மனதில் எழுந்தன. ஆனால், அவளால் அந்த மஞ்சத்தை விட்டெழ முடியவில்லை.

வண்டியை விட்டிறங்கிய விக்கிரமன், அவன் தங்கை அங்கயற்கண்ணி வண்டியிலிருந்து இறங்கும் வரை காத்து நின்று அவள் வண்டியிலிருந்து இறங்கிவரும் ஒய்யாரத்தைக் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவன் தங்கை "என்னண்ணா அப்படிப் பார்கிறாய்?" என்று கேட்டதும், விக்கிரமன் கனவுலகிலிருந்து விடுபட்டவன் போல், "ஒன்றுமில்லை, பத்திரமாகப் பார்த்து இறங்கு" என்றான். "நான் எப்பவோ வண்டியிலிருந்து இறங்கிவிட்டேனே! வேறு எங்கிருந்து இறங்கச் சொல்கிறாய்?" என்று கேட்ட பின்புதான், அவன் தனது அன்புத் தங்கையின் அழகில் லயித்ததும், அவளுக்கு வரப்போகும் கணவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய கனவில் அவன் தன்னை மறந்திருந்ததும் ஞாபகத்துக்கு வந்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "இறங்கிவிட்டாயா? வா போகலாம்" என்று கூறியவள் கையைப் பற்றியவாறு மாளிகை வாயிலை நோக்கி நடந்தான்.

மாளிகை வாயிலை அடைந்த இருவரும், வழக்கத்துக்கு மாறாக வாயிற் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டதும், இன்று மட்டும் கதவு திறந்திருப்பது ஏன்? என்ற கேள்வி விக்கிரமனின் மனதில் அரும்பு முன்னமே, "வாருங்கள்" என்ற கனிவான வரவேற்பு மண்டபத்தினுள் இருந்து வந்தது. ஒரு கணம் மலைப்பாக இருந்த போதிலும், அதைச் சமாளித்துக் கொண்டு "வணக்கம்" என்றான் விக்கிரமன். அதைத் தொடர்ந்து அம்மண்டபமே எதிரொலிக்கும் அளவுக்கு அதனுள் அமர்ந்திருந்த நடுத்தர வயது மதிக்கத்தக்க ஓர் நெட்டையான உருவம் விக்கிரமன் நிற்கும் இடத்தை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தது. அந்த உருவத்தின் கம்பீரத் தோற்றமும், மிடுக்கான நடையும் நிச்சயம் ஓர் பெரும் படைத் தளபதிக்குரிய எல்லா அம்சங்களும் பொருந்தி இருந்ததைப் பறை சாற்றி நின்றன.

"வாருங்கள் இளவரசே!" என்ற கனிவான வேண்டுகோள் விக்கிரமனை மேலும் மகிழ்ச்சியில் ஆழ்த்திய போதும் அவன் எவ்விதத்திலும் தன் உணர்வுகளைக் காட்டாமல் அடக்கத்தோடு மண்டபத்தினுள் நுழைந்தான். அங்கயற்கண்ணியும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

மண்டபத்



தினுள் போடப்பட்டிருந்த ஆசனங்களைக் காட்டி அமருங்கள் என்று பெரியவர் கூறியதும், அதை ஆமோதிப்பது போன்ற பாவனையோடு விக்கிரமன் ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டான். ஆயினும், அங்கயற்கண்ணியின் அகல் விழிகள் அந்த மண்டபத்தினுள் எதையோ தேடுவதுபோல் தென்பட்டது பெரியவருக்கு.

மண்டபத்தில் அமைந்துள்ள அலங்கார ஓவியங்களை அவள் பார்க்கிறாளோ? என்று நினைத்தார் போலும். அதனால் அவர் ஏதும் பேசவில்லை.

மண்டபத்தை அலசிய அங்கயற்கண்ணியின் கண்களில் பெரியதோர் ஏமாற்றம் தென்பட ஆரம்பித்ததும், அவள் பார்வை விக்கிரமனின் பக்கம் திரும்பியபோது விக்கிரமன் லேசாக அவளைக் கவனித்தான். அங்கயற்கண்ணியின் முகத்தில் கேள்விக் குறிகள் படர்வதை அவதானித்தான். அங்கயற்கண்ணியின் முக பாவத்திலிருந்து

"நீ எனக்கு நாள் முழுதும் வர்ணித்த அந்த தேவலோகக் கன்னியைக் காணவில்லையே? என்பது போலிருந்தது. மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாததோர் நிலைக்குத் தான் தள்ளப்பட்டிருப்பதை உணர்ந்த விக்கிரமனுக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல் விழித்தான். இந்த வேளையில்தான் பெரியவர், தங்களை உபசரிக்கக் கூட ஒருத்தரையும் வைத்திருக்க முடியாமலிருக்கிறது. எனது மகள் மரகதவல்லியின் கட்டளை என்னைக் கூடத் தனிமைப்படுத்தி விட்டிருக்கிறது என்று சலித்துக் கொண்டார். பிறகு "மரகதவல்லி" என்று குரல் கொடுத்தார். இதைக் கேட்டதும் அங்கயற்கண்ணியின் முகம் உற்சாகத்தால் மலர்ந்தது. மெதுவாக அவள் பெரியவரிடம் "ஐயா! தங்கள் மகளை நான் பார்க்கலாமா?" என்றதும், பெரியவரின் முகத்தில் தோன்றிய இளமுறுவல் "எனக்கு ஆட்சேபனை இல்லை" என்பது போலிருந்தது. அதன் பின் அங்கையற்கண்ணி யாருடைய அனுமதிக்காகவும் காத்திருக்கவில்லை. கடகடவென்று படிகளைக் கடந்து மாடத்திலுள்ள மரகதவல்லியின் சயன அறையை அடைந்தபோதுதான் பட்டாலான மெத்தை விரிப்புக்கு மேல் தலையணையில் முகம் புதைத்தவாறு துவண்டு கிடக்கும் அந்தப் பொன்னோவியத்தைக் கண்டாள். கண்டதுதான் தாமதம் அவள் மெய் சிலிர்த்துக் கொண்டது.

விக்கிரமன் கூறியதெல்லாம் ஏதோ காதலால் ஏற்பட்ட கற்பனை என்று நினைத்தவளுக்கு, அவன் கூறவேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதுபோல் தோன்றியது.

அங்கயற்கண்ணி மெதுவாக அவளருகில் சென்று கட்டிலின் முனையில் அமைந்த சட்டத்தில் ஒரு கையை ஊன்றியவாறு "அந்தியிற் கூட இத்தனை தூக்கமா?" என்றாள். முகம் தலையணையோடு ஒற்றியிருந்த வேளையிலும் திடீரென்று கேட்ட அங்கயற்கண்ணியின் யாழின் ஒலியை ஒத்த அந்தக் குரல் அவள் காதில் கணீர் என்று ஒலித்ததும், அவளது சயன அறையில் என்றுமே கேட்டிராத அந்தக் குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்ததும் அவள் மனதில் என்றுமே இல்லாததோர் பேரதிர்வு தோன்றி மறைந்தது. அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை.

*"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"*

**அதிகாரம் - 109.**
**குறள் - 1081.**

## இலக்கிய நயம்

## சிந்தியா பதில்கள்

**✉ முஸ்லிம்கள் இப்படி காலத்துக்குக் காலம் புலிகளால் தாக்கப்படும்போது முஸ்லிம் தலைமைகள் சிலர் கண்டிக்கத் தயங்குவது போல் இருக்கிறார்களே ஏன்?**
*-எம்.எச்.ஹமீத், கிண்ணியா.*

மக்களின் இடப்பெயர்விலும், மரணத்திலும் தான் அரசியல் பண்ணமுடியும் என்று அவர்கள் தயக்கமில்லாமல் நம்புகிறார்களாக்கும்.

**✉ ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்பதை மூதூர் விவகாரத்தோடு எப்படிப் பார்க்கிறீர்கள்?**
*-எஸ்.வசீகரன், வவுனியா.*

படைகளையும் - முஸ்லிம்களையும் குறி வைத்துத் தாக்கியதை நினைத்துக் கேட்கும் உங்கள் கேள்வி எனக்கு ஆச்சரியமாக இல்லை.

**✉ ஜே.வி.பி.யின் 20 நிபந்தனைகள் பற்றி உங்கள் கருத்து?**
*-கே.மனோகரன், மருதானை.*

அவர்கள் முதிர்ச்சியடைய இன்னும் பல வருடங்கள் தேவைப்படும் என்றுதான் நினைக் கிறேன்.

**✉ சிந்தியா! மாவிலாறு அணைக்கட்டிலி ருந்து தண்ணீர் எப்போது வரும்?**
*-தி.சங்கர், சாம்பல்தீவு.*

இந்தா வரப்போகிறது, இன்னும் அரைமைல் தொலைவுதான் இருக்கிறது, மேற்குப்பக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது, பத்து நிமிடம் நடக்கும் தூரம்தான் என்றெல்லாம் என்னால் ஊகங்களைக் கூற முடியாது.

**✉ முரளியின் 'தூஸ்ரா' எப்படி?**
*-கே.கணேசன், வெள்ளவத்தை.*

இலங்கை அணியில் முரளியை மட்டும் எதிர்கொள்வது கடினம் என்று ஷேன்போலக் கூறியது தீர்க்கதரிசனமானது என்பதை நிரூபித் திருக்கிறார். சாதனை நாயகன் முரளிக்கு பாராட் டுக்கள்.

**✉ சிந்தியா, நீர் ஜோதிகாவின் திருமணத் துக்குப் போகிறீரா?**
*-ஜி.சிந்துளா, மட்டக்களப்பு.*

அழைப்பிதழ் மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து வந்திருக்கிறது. நான் சூர்யாவின் திருமணத்துக் குப் போகிறேன்.

**✉ ஒரு கோடி ரூபாய்க்குச் சேலை வந்துவிட்டதே வாங்கி விட்டீரா?**
*-கி.வளர்மதி, பூந்தோட்டம்.*

வரிப் பணத்தில் மோசடி செய்தவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்பது நியாயமாகுமா?...

**✉ சிந்தியா! இஸ்ரேல் இவ்வளவு ஆட்டம் போடுகின்றது. உண்மையில் அதன் பலம் என்ன?**
*-எஸ்.சுஜன், வவுனியா.*

**✉ இஸ்ரேலைத் தட்டிக்கேட்க உண்மை யில் ஒருவருமில்லையா?**
*எம்.எம்.அனீஸ், காத்தான்குடி.*

பூனைக்கு யார் மணி கட்டுவது? இஸ்ரேல் போடும் ஆட்டத்தின் மற்றுமொரு சூட்சுமத்தை அண்மையில் தொலைக்காட்சியைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். இஸ்ரேல் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் முப்படைத்தளபதிகளுடன் பிரதமரும் எதிர்கட்சித் தலைவரும் கூட பூட்டிய அறைக்குள் கூடி ஆலோசிக்கின்றார்கள். தேசம் என்று வரும்போது அவர்கள் கட்சிகளை மறந்து விட்டு ஒன்றுபடுகின்றார்கள். அதுவும் ஒரு கார ணமாக இருக்கலாம்.

**✉ மாவிலாறு பிரச்சினையைத் தீர்த்திருந் தால் மூதூர்ப்பிரச்சினை வந்திருக்காதல்லவா?**
*-அ.கேசவன், மீசாலை.*

மாவிலாறை, மூதூருக்கு ஒப்பிடுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச் சுப்போடுவதற்கு ஒப்பானது. மாவிலாற்று அணைக்கும் மூதூர் நகருக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 50 மைல்கள் என்பது கூட இன்னமும் பலருக்குத் தெரியவில்லை.



சூர்யா - ஜோதிகா
ஜில்லுனு ஒரு காதல்

**✉ நாட்டில் பொறி பறக்கிறது. ஆலோசகரின் சிலமனைக் காணவில்லை. என்ன நடந்தது?**
*-ஆர்.ருத்திரன், வெள்ளவத்தை.*

தன்னை மறந்து உளறிக் கொட்டி விடாமல் இருக்க வாய்ப்பூட்டு போடப்பட்டுள்ளதாக கேள்வி.

**✉ இந்திய ஹரியானா மாநிலத்தில் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுவன் 3 நாட்களின் பின் உயிரோடு மீட்கப்பட்டமைக்கு நாட்டு மக்களின் பிரார்த்தனையா, மீட்பும் பணியாளரின் முயற்சியா முக்கிய காரணம்?**
*-எஸ்.சாமிலா, சிலாபம்.*

சிறுவனின் தன்னம்பிக்கை தான் முக்கிய காரணம். மைக்ரோ வீடியோ கமராவை ஆழ் துளை கிணற்றில் செலுத்தி எடுத்த படங்களைப் பார்த்தேன். அவன் ஒருமுறை கூட அழ வில்லை. நம்பிக்கையுடன் இருந்திருக்கின்றான். அதுதான் முதற்காரணம்.

**✉ ஒருவரை வேலையில் இருந்து பணி நீக்கம் செய்யும்போது கொடுக்கப்படும் கடிதத்திற்கு 'பிங் ஸிலிப்' என்ற பெயர் ஏன் வந்தது?**
*-வ.நாமோதயன், பம்பலப்பிட்டி.*

ஆங்கிலேயர் காலத்தில் அரசாங்க நிர்வாக அலுவலகங்கள் உருவாகிய போது, தொழிற்சங்கங்களோ அல்லது உள்ளக விசாரணைகளோ இருக்கவில்லை. ஒருவரை பணி நீக்கம் செய்ய நிர்வாகம் முடிவெடுத்தால் அவருடைய சம்பள உறையில் பணிநீக்கம் தொடர்பான கடிதத்தினை வெளிர் சிவப்பு ஒற்றையில் தயாரித்து வைத்து விடுவார்கள். காதும் காதும் வைத்த மாதிரி விடயம் முடிந்து விடும். அவரும் அதனை கடைசி சம்பளமாக கருதி வீட்டிற்கு சென்றுவிடுவார். அன்று ஆரம்பித்த அந்தச் சொல் இன்று என்ன நிற ஒற்றையில் கொடுபட்டாலும் பிங் சிலிப் என்றே அழைக்கப்படுகின்றதாம். நானும் படித்தேன்.

**✉ உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்தி ழுப்பதற்காக இன்றும் இலங்கையின் மத்திய மலை நாட்டுப் பகுதியில் வைஸ்றோய் என்ற பெயரில் நூற்றாண்டுகால பழமை வாய்ந்த கரிச்கோச்சிகள் அதாவது நீராவி ரயில்கள் ஓடுகின்றதை பார்த்து என்ன நினைக்கின்றீர்கள்?**
*-நிர்மலா ரதன், பேராதனை.*

நான் படித்த இரு விடயங்கள்தான் ஞாபகத் திற்கு வருகின்றது.

ஒன்று : ஓல்ட் இஸ் கோல்ட்

இரண்டு : டீசல் எஞ்சின் ரயில்கள் கண்டுபிடிப்பதற்கு முன் நீராவி இயந்திர ரயில்களில் அதிகமாக கொண்டு செல்லப்பட்ட பொருள் டீசல்.

**✉ வெயில் படத்தினை விருது நகரில் எடுப்பதற்கான காரணம், அதிக வெயிலடிக்கும் வறட்சியான இடம் என டைரக்டர் கூறுகின்றார். உண்மையில் உலகில் அதிக வெயிலடிக்கும் இடம் எது?**
*-எம்.கார்த்திகாயினி, கொட்டகலை.*

லிபியா நாட்டில் உள்ள அஸிஸீயா என்ற பிரதேசம்தான். சாதாரண ஒரு பகல் வேளையில் அங்கு வெப்பநிலை 136பரனைட்.

**✉ மனித மூக்கினால் எத்தனை விதமான வாசனைகளைப் பிரித்தறிய முடியும்?**
*-செய்யது இப்தா, பாவற்குளம்.*

கண்ணினால் எவ்வாறு எண்ணற்றவர் ணங்களைப் பிரித்தறிய முடியுமோ அதேபோல மூக்கினாலும் கணக்கற்ற வாசனைகளை நுகர்ந்து அறிய முடியும். மனித இனத்தில் ஆணை விட பெண்ணுக்கு நுகர்வுத்திறனை ஒன்றரை மடங்கு அதிகமாகவே வைத்து இறை வன் படைத்துள்ளான்.

**✉ எனக்கு நாய் கடித்தால், குற்றம் நாயின் மீதா? நாய் உரிமையாளர் மீதா?**
*-சோபிதா, பூந்தோட்டம்.*

அது எங்கு வைத்து கடித்தது என்பதைப் பொறுத்தது. உரிமையாளரின் எச்சரிக்கை யினையும் மீறி உள்ளே சென்று கடி வாங்கினால் உங்கள் தவறு. உங்கள் வீட்டினுள்ளே வந்து உங்களை நாய் கடித்தால் அது உரிமையா ளரின் பாரிய தவறு. வழக்கு தொடரலாம். பொது இடத்தில் வைத்துக் கடித்தால் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை பொறுப்பேற்க வேண்டும். உலகிலேயே அதிக நாய்க்கடிக்கு இலக்காகும் அரச ஊழியர்கள் பிரித்தானிய தபால்காரர்கள் என்பது மேலதிக விடயம்.

## அரபு தேசங்களில்...
16 ஆம் பக்கத் தொடர்ச்சி....

என்ற முயற்சிதான் இது. அமெரிக்கா, இஸ்ரேல், பிரான்ஸ் உட்பட மற்ற ஏகாதிபத்திய சக்திகள் அந்த நீண்ட குருதி கொட்டிய பூசலில் மத்திய பங்கை கொண்டிருந்து, அது தொடருமாறு செய்தன. அதில் அமெரிக்க மற்றும் பிரெஞ்சு சக்திகளும் புகுத்தப்பட்டன. அதன் பின்னர் 1982இல் ஒரு இஸ்ரேலிய படையெடுப்பும் நிகழ்ந்ததன் பின்னர் 18 ஆண்டுகள் இஸ்ரேல் தெற்கில் ஆக்கிரமித்திருந்தது. வாஷிங்டனுடைய முக்கிய நட்பு அமைப்பாக பாசிச பலாஞ்சி இருந்து. பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு மற்றும் லெபனானிய இடது என்ற



கூட்டணிக்கு எதிராக வலதுசாரி சக்திகளின் கூட்டணிக்கு பலாஞ்சி தலைமை வகித்தது.

ஏகாதிபத்திய சதிகளும், குறுக்கீடுகளும் லெபனானில் இருந்து பாலஸ்தீனிய விடுதலை அமைப்பை (PLO) விரட்டுவதில் வெற்றி அடைந்தன. ஆனால், பின்னர் வந்த உடன்பாடு பலாஞ்சியின் அதிகாரத்தை ஒருபுறம் குறைத்ததுடன், ஈரானிய, சிரிய ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லாவின் எழுச்சியை மறுபுறம் கண்டது. இதைத்தான் வாஷிங்டன் மாற்றுவதற்கு உறுதியாக உள்ளது. தற்போதைய இஸ்ரேலிய தாக்குதல் குறிப்பிடத்தக்க வகையில், 1983 அக்டோபர் மாதம் பெய்ரூட்டில் அமெரிக்க மரைன் முகாம்கள் வெடிவைத்துத் தகர்த்தப்பட்ட பின்னர், திரும்பப் பெற்ற பின்னர், இப்பொழுதுதான் அமெரிக்கா தன்னுடைய இராணுவப் படைகளை முதல் தடவையாக லெபனானுக்கு நகர்த்திக்கொள்ளக்கூடியதாகச் செய்திருக்கிறது.


### வரலாற்று பின்னணி

இராணுவ அழுத்தம் மற்றும் அரசியல் உடன்பாடுகளை அந்நாட்டில் உள்ள வலதுசாரிகளுடன் கொண்ட வகையில் லெபனானை, அதைக் கிட்டத்தட்ட தன்னுடைய காப்பு நாடாக மாற்றும் வகையில் இஸ்ரேலுக்கு நீண்ட வரலாறு உள்ளது.

மார்ச் 1978 இல் லெபனானிய உள்நாட்டுப் போரின் இடையில், இஸ்ரேல் இராணுவத் துருப்புகளை எல்லையைத் தாண்டி லெபனானுக்கு அனுப்பி வைத்தது. பயங்கரவாதக் கொடுமைக்கு இந்த நடவடிக்கைகள் விடையளிப்பாக இருக்கும் என்று அவற்றை நியாயப் படுத்தியது. இதன் நடவடிக்கைகள் 2,000க்கும் மேற்பட்ட லெபனானியர்களின் இறப்புகளில் முடிவடைந்ததை அடுத்து சர்வதேச அழுத்தத்தினால் தன்னுடைய இராணுவ நடவடிக்கையைத் திரும்பப் பெற்றுக் கொண்டாலும், வடக்கு எல்லையின் 12 மைல் நீளத்திற்கு ஒரு வலதுசாரி குடிப்படையை நிறுவிய வகையில் இஸ்ரேல் தன்னுடைய கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டது. தெற்கு லெபனானிய இராணுவம் என்று பெயரிடப்பட்ட அப் போராளி அமைப்பு மேஜர் சாத் ஹட்டாட்டின் தலைமையில் இஸ்ரேல் சார்பில் செயல்பட்டு வந்தது.


# ஓராண்டு நினைவுகளில்

தாயின் மடியில்
03
10
1983



தாயக மண்ணில்
28
07
2005

## தோழர் நிக்ஷன் (சுளியாம்பிள்ளை நிக்ஷன்)

உள்ளங்களைப் பார்க்கும் அருகதை உண்மையில் புலிகளுக்கில்லை- இருந்தால்
நல்லவர்களை இப்படிக் கோழைத்தனமாக
நாள்தோறும் பலி கொள்ள மாட்டார்கள்
தோழனே - நீ துயர் துடைத்த மக்களின் கண்ணீரே உனது படுகொலைக்கு
காலம் முழுவதும் சாட்சி கூறும்!
ஆமாம் - மக்களுக்காய் நீ வாழ்ந்தாய்..... அதே மக்களோடு என்றும் வாழ்வாய்!
போய்வா! நீ விட்டுச் செல்லும் மனிதத்துவத்தின் உணர்வும் எப்போதும் உன்
முகத்தில் பூக்கும் சிரிப்பும் எங்களிடம் உல்லாசமாய் எப்போதும் இருக்கும்
நன்றி!- நீ வாழ்ந்தாய் என்றும் வாழ்கிறாய் தோழா......

ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி)


# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## முரளியின் டெஸ்ட் சாதனை

**இலங்கை** கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். தூஸ்ரா பந்து வீச்சில் தூள் கிளப்பி விக்கெட்டை அதிகமாக அள்ளி டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் வரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கிறார்.

இந்த நிலையில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக கொழும்பில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் முரளிதரன் 2 இன்னிங்சிலும் சேர்த்து மொத்தம் 12 விக்கெட்டுகள் வீழ்த்தி உள்ளார். இதன் மூலம் டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து 4 ஆட்டங்களில் 10 விக்கெட்டுக்கு மேல் கைப்பற்றிய வீரர் என்ற தனது உலக சாதனையை முரளிதரன் சமன் செய்தார்.

இதேபோல் 2001-02ஆம் ஆண்டில் முரளிதரன் தொடர்ந்து 4 டெஸ்ட் போட்டிகளில் 10 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தி உலக சாதனை படைத்து இருந்தார். அதாவது அந்த ஆண்டில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் 11 விக்கெட்டும், பங்களாதேசத்துக்கு எதிரான டெஸ்டில் 10 விக்கெட்டும், மேற்கு இந்தியாவுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளில் முறையே 11, 10 விக்கெட்டுகளும் அவர் வீழ்த்தி இந்த உலக சாதனையை படைத்தார்.

34 வயதான முரளிதரன் 657 விக்கெட்டுகள் வீழ்த்தி டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் வரிசையில் 2ஆவது இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் வோர்னே 685 விக்கெட்டுக்களை கைப்பற்றி உலக சாதனையாளராக விளங்குகிறார்.

## மூதூரில்...
03ஆம் பக்கத் தொடர்ச்சி....

உறவினர்களிடம் கையளிக்கப்படவில்லையென்று முஸ்லிம் நலன்புரி நிலையங்கள் குற்றஞ் சாட்டுகின்றன. இதேவேளை, மூதூருக்குள் நுழைந்து புலிகள் நடத்திய தேடுதலின்போது ஐம்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் பிடிக்கப்பட்டதாகவும் வயோதிபர்கள் உட்பட இவர்களில் பலர் புலிகளால் தாக்கப்பட்டனரென்றும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப் படுகின்றன. 1990களிலேயே முஸ்லிம்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்த புலிகள் இயக்கம் தமது குறுகிய, தீய நடவடிக்கைகளைக் கைவிடவில்லை என்பதையே மூதூர் தாக்குதல் எடுத்துக் காட்டுவதாகவும் சுமார் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் இதனால் அந்தரித்த நிலைக்குத் தள்ளப்பட்டனென்று முஸ்லிம் தரப்புகளிலிருந்து குற்றச்சாட்டுகள் எழுகின்றன. இதன் எதிரொலியாகக் கந்தளாய் முதலாம், இரண்டாம் கொலனிகளைச் சேர்ந்த ஐந்து அப்பாவித் தமிழர்கள் அடித்துக் கொல்லப்பட்டனரென்றும் புகார்கள் தெரிவிக் கப்படுகின்றன. சுற்றிவர முஸ்லிம், சிங்களக் கிராமங்களுக்கு மத்தியில் சுமார் 350 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத் துக்குமதிகமான தமிழ் மக்கள் அச்சத்துடனேயே வாழ்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தமிழர்கள் வேறு, புலிகள் வேறு என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் இந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 6, கூட்டெண் - 5

6,15,24 போன்ற திகதிகளில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்குச் சாதாரணமான உயரமானவர்களாகவும், சுறுசுறுப்பாகவும் காட்சியளிப்பர். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் உடனே முடிக்க வேண்டும் என்று துரிதமாக இயங்கும் இயல்புடையவர்கள். ஓரளவு பெருத்த சரீரமும், அழகான தோற்றமும் கொண்ட இவர்கள் மற்றவர்களைத் தன்வசப்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள். எளிதில் புரிந்துகொள்ள முடியாத புதிராக விளங்குவர். சில நேரங்களில் குழந்தை போன்றும், சில நேரங்களில் முரடராகவும் இருப்பர்.

பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்களை மற்றவர்கள் ஏமாற்ற நினைத்தால் சந்தர்ப்பம் பார்த்துப் பழி வாங்கிவிடுவர். இதனால் இவர்களைக் கண்டு மற்றவர்கள் அஞ்சுவர். பெயர் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் பல்வேறு வழிகளில் பெரும் பணம் சம்பாதித்து விடுவர். ஆனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையாவிட்டால், இவர்களுடைய எண்ணங்கள், பிறரை ஏமாற்றுவதிலும், வஞ்சிப்பதிலும், சூது, மாது போன்றவற்றிலும் நாடிச் செல்லும். இதனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமான எண்களில் பெயர் அமைய வேண்டியது அவசியம்.

பிறருக்கு உதவுவதன் மூலமும், தொழில்களை அமைப்பதன் மூலமும், சமுதாயத்தில் தன் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளுவர். இவர்களைச் சுற்றிலும், எப்பொழுதும் நண்பர்கள் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். இவரிடம் யோசனை கேட்பதற்குப் பலர் காத்துக்கொண்டேயிருப்பர். இவர்களை ஏமாற்றுவதென்பது அவ்வளவு சுலபமில்லை. ஆனால் மற்றவர்கள் இவர்களது வலையில் எளிதில் மாட்டிக் கொள்வர். ஆடம்பரச் செலவும், ஊர்ச்சுற்றும் செலவும் அதிகமாக இருக்கின்றதே என்று வருந்துவர்.

தன் கையில் பணம் இல்லாதபோது தனிமையில் மனம் வருந்துவர். இருக்கின்ற போது குதூகலமாகச் செலவு செய்து, இல்லாத போது வருந்தும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமான எண்களில் அமைந்துவிட்டால், நீர் ஊற்றுப்போல் காசு பெருகும். நாட்டியம், இசை, சட்டம், தத்துவம், தொழில் போன்றவற்றில் ஆர்வம் மிகுந்தவர்கள்.

கலைஞானம் கொண்ட இவர்களை மற்றவர்கள் மதிப்பதோடு, இவர்களைத் தலைமை ஏற்கும்படியும் கூறுவர். இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால் நாளுக்கு நாள் செல்வம் வளர்ச்சியடைந்து முன்னேற்றத்தின் உச்ச ஸ்தானத்தை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையுமேயானால் எல்லா வாய்ப்புக்கள் இருந்தும், நழுவ விட்டுவிட்டு மனம் வருந்துவர்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் வீடு, வாகனம், நிலம் போன்றவைகளோடு நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் ஆகியவைகளைப் பெற்று சிறந்து வாழ்வர். இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் உத்தியோகத்தில் இருந்தாலும் தொழில் செய்ய முற்படுகின்றனர். இந்த எண்ணிக்கைக் காரர்களுக்குத் தெய்வ நம்பிக்கை அதிகம் இருக்கும்.

எந்த ஒரு காரியத்தை ஆரம்பித்தாலும் தன் கடின உழைப்பாலும், ஆண்டவன் அனுக்கிரகத்தாலும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கையுடன் இயங்குவர். பெயர் பொருத்தமாக அமையப் பெற்றால் ஒரு பெரும் பாக்கியசாலி என்றே கூறலாம். ஆனால் பெயர் பொருத்தமாக அமையாவிட்டால் இவர்களது உழைப்பெல்லாம் பிறருக்குச் சென்று விடும் அல்லது கெட்டவன் என்று பெயர் எடுக்கும் சூழ்நிலை உருவாகிவிடும். இதனால் பெயரைத் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### தொழில்

அழகு சாதனப் பொருட்கள், கமிசன், காண்ட்ராக்ட், ஏஜன்சீஸ், இரும்பு சம்பந்தமான தொழில், வாகனம் போன்றவற்றால் வாழ்க்கையில் உயர்வடைவர்.

### நோய்

இவர்களுக்கு ரத்த அழுத்தம், வாதக்கடுப்பு, நீர் சம்பந்தமான நோய்கள், கண்ணோய், நரம்புக் கோளாறு போன்றவைகள் வந்து நீங்கலாம். உப்பு, சர்க்கரையைக் குறைத்துக் கொள்வது நலம்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரரகளுக்கு சுக்கிரன், புதன் போன்ற ஆதிக்கமான 15,24,33,42,60:14,23,32,41,50,59 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்
6,5,1.
யோகமான தேதிகள்
6,15,24:1,10,19,28:5,14,23.
யோகமான மோதிரக்கல்
மரகதம்.
யோகமான நிறம்
பச்சை, நீளம், சாம்பல் நிறம்.
ஆகாத தேதிகள்
3,12,21,30.
ஆகாத நிறம்
ரோஸ், ஆரஞ்சு, கத்திரிப்பூ நிறம்.

அடுத்த வாரம் பிறப்பெண் 6, கூட்டெண் 6 பற்றிப் பார்ப்போம்.

## கிபீர...
24ஆம் பக்கத் தொடர்ச்சி....

### கிபீர் விமானத்தின் சிறப்பம்சங்கள்

நாடுகளுக்கிடையேயான யுத்தத்தில் F16 விமானம் எவ்வளவு முக்கியத்துவமானதோ அதேபோல உள்நாட்டு யுத்தங்கள், எல்லைச் சண்டைகள் பயங்கரவாத இயக்கங்களுக்கு எதிரான போரில் கிபீர் விமானமே தற்போது பாவனையில் உள்ளது.

முதலாவது கிபீர் யுத்த விமானம் இஸ்ரேலிய விமான நிறுவனத்தினரால் கட்டப்பட்டு 1977ஆம் ஆண்டு இஸ்ரேலிய விமானப் படையினரிடம் கையளிக்கப்பட்டது.

### கிபீர் ஜெட் பற்றி சில விபரங்கள்

நீளம் 15.65 மீற்றர் (51 அடி 4.25 அங்குலம்)
அகலம் 8.22 மீற்றர் (26 அடி 11.6 அங்குலம்)
உயரம் 4.55 மீற்றர் (14 அடி 11.25 அங்குலம்)
ஒரு செட்டையின் நீளம் மட்டும் 3.73 மீற்றர் (12 அடி. 3 அங்குலம்)
காற்றழுத்த செலுத்தியின் பரப்பளவு 34.80 சதுரமீற்றர் (37.4.60 சதுரஅடி)

### எடை

விமானம் மட்டும் 7285 கிலோ கிராம் (16,060 இறாத்தல்) சாதாரணமாக கொண்டு செல்லக்கூடிய குண்டுகளின் எடை 10,415 கிலோ கிராம். (22,961 இறாத்தல்)

ஆகக்கூடுதலாக கொண்டு செல்லக்கூடிய குண்டுகளின் எடை 16, 500 கிலோ கிராம் (36,376 இறாத்தல்)

*குறிப்பு* :- கிபீர் ஜெட் விமானத்தின் மூலம் குண்டுகளை வீசவும், ஏவுகணைகளை செலுத்தவும் முடியும்.

### விசேட அம்சம்

கிபீர் விமானத்தில் ஏவுகணை எதிர்ப்பு சாதனமும் உண்டு. ஏவுகணையை திசை திருப்பும் சாதனமும் உண்டு என்பது சிறப்பம்சமாகும்.

### கிபீர் விமானத்தின் பெறுபேறுகள்

* மணிக்கு 2440 கிலோ மீற்றர் (1,516 மைல்) வேகத்தில் 36,000 அடி உயரத்தில் அநாயசமாகப் பறக்கக்கூடியது.
* சாதாரண உயரத்தில் மணிக்கு 1389 கிலோ மீற்றர் ( 863 மைல்) வேகத்தில் பறப்பை மேற்கொள்ளும்
* ஒரு பாதையில் இருந்து கிளம்பியவுடன் நிமிடத்திற்கு 14,000 மீற்றர் (45,930 அடி) உயரத்திற்கு செல்லக்கூடியது.
* குண்டு வீசும் போது நிமிடத்திற்கு 22, 860 மீட்டர் (75000 அடி) வேகத்தில் செங்குத்தாக இறங்கக் கூடியது.
* யுத்தப் பாவனைக்கு அல்லாதவிடத்து சாதாரண விமானம்போல மணிக்கு 882 கிலோ மீட்டர் (548 மைல்) வேகத்தில் செல்லக்கூடியது.

### கிபீர பற்றி ஓர் சுவாரஸ்யமான செய்தி

உலக நாடுகளுக்கு ஆயுதங்களையும் விமானங்களையும் விற்பனை செய்யும் அமெரிக்கா பிற நாட்டிடம் இருந்து, தான் கொள்வனவு செய்த ஒரே ஒரு யுத்த விமானம் கிபீர் விமானம் மட்டுமே. அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்களில் கணிச மானவை கிபீர் ஜெட் விமானங்களே.

## தங்கம்...
06 ஆம் பக்கத் தொடர்ச்சி....

இவ்வாறு நான் அங்கு பார்த்த மற்றும் செய்த வேலைகள் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில்தான் விரிவாக எழுதவேண்டும் அது சுவாரஸ்யமான ஞாபகங்கள்.

இந்த விஷயத்தை எழுதிக் கொண்டிருக்கும் போதே தங்கம் 340 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டிருக்குதாம். ஆடிமாசம் என்பதையெல்லாம் விட்டுவிட்டு விலை இன்னும் அதிகரிப்பதற்குள் வேண்டும் எண்ணமுள்ளவர்கள் வேண்டிக்கொள்ளலாம். தங்கத்தைப் பற்றிப் பேசுகின்றபோது பெண்ணுக்கு எத்தனை பவுன் நகை போடுவீர்கள் என்று கேட்கும் மாப்பிள்ளையின் அம்மாமார் இறக்கும் தருவாயில் இழுத்துக் கொண்டிருந்தால் மனதை கல்லாக்கிக் கொண்டு தங்கத்தைக் கரைத்து மருமக்களே ஊற்றி விடுங்கள் அது உங்கள் மாமியார்களின் கடைசி ஆசையாக இருக்கும்.

தங்கமான மனசுக்காரன் என்று தான் சொல்வார்களே தவிர தங்கமான மனசுக்காரி என்று சொல்ல நான் கேள்விப்பட்டதில்லை. சரி எத்தனை பேர் நம்மில தங்கமனசுக்காரர்களாக இருக்கிறோம் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். ஏன் நம்மால் அப்படி இருக்க முடிவதில்லை. நமக்குள் இருக்கும் பொருள், பணம், மண் பற்றிய பேராசை எங்களை பற்றுகளற்றவர்களாக இருக்க விடுவதில்லை. இன்னொருவரின் இழப்பு, துன்பம், கவலை, பிரிவு பற்றிய எந்த விஷயத்திலும் நமது அக்கறை என்பது உளப்பூர்வமானதாக இருப்பதில்லை. நான், எனது என்று ஒவ்வொன்றையும் பதுக்கிக் கொள்வதில் தான் வாழ்நாளை செலவு செய்கிறோம். இந்த நிலை மாற்றமடைய வேண்டும். குறைந்த பட்சம் வாழ்நாளில் தங்க மனசுக்காரர்களாக வாழ முடியாது விட்டாலும் நல்ல மனசுக்காரராக வாழ்வது அவசியமாகிறது. வாழ முயற்சிப்போம் வாழ்வோம்.

# சாய் லுன் (கி. பி - 105 நூற்றாண்டு)

காகிதத்தைக் கண்டுபிடித்தவர் சாய் லுன் (Ts'ai Lun) ஆவார். இவருடைய பெயரை அறிந்தவர்கள் மிகக் குறைவே.

இவருடைய கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தைக் கருதுகையில், மேனாடுகளில் இவர் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறியும் போது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. மேனாடுகளில் எத்தனையோ பெரிய கலைக்களஞ்சியங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் அவற்றில் சாய் லுன் பற்றி ஒரு சிறு குறிப்பு கூட இல்லை. வரலாற்றுப் பாட நூல்களில் கூட இவருடைய பெயர் காணப்படவில்லை. காகிதத்தின் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொள்ளும் போது, சாய் லுன் பற்றிய குறிப்புகள் இல்லாமையால், அவருடைய பெயர் ஒரு கற்பனைப் பெயர்தானோ என்ற ஐயம் எழலாம். எனினும், கவனமான ஆராய்ச்சிகலிருந்து சாய் லுன் என்பவர் உண்மையான ஆள்தான் என்பதும், அவர் சீனப் பேரரசரின் அரசவையின் ஓர் அதிகாரியாகப் பணிபுரிந்தார் என்பதும், அவர் தாம் தயாரித்த காகிதத்தின் மாதிரிகளைப் பேரரசர் ஹோ - டியினிடம் கி.பி.105 ஆம் ஆண்டு வாக்கில் அளித்தார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. ஹான் அரச மரபின் அகராதிமுறை வரலாற்றில் சாய் லுன் கண்டுபிடிப்பு பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி நம்பக் கூடியதாகவே உள்ளது. இதில் மந்திர தந்திரச் செயல்களோ, புராண அற்புதங்களோ எதுவுமில்லை. காகிதத்தைக் கண்டு பிடித்தவர் சாய் லுன் தான் என்றே சீன வரலாறு திட்டவட்டமாகக் கூறுகிறது. இச்சாதனைக்காகச் சீனாவில் அவர் பெரிதும் போற்றப்பட்டார்.

எனினும், சாய் லுன் வாழ்க்கை குறித்து அதிகமான விவரங்கள் கிடைக்கவில்லை. அவர் ஓர் அலியாக இருந்தார் என சீனத்துச் சான்றுகள் கூறுகின்றன. சாய் லுன்னின் கண்டுபிடிப்பு குறித்துச் சீனப் பேரரசர் பெரும் மகிழ்ச்சி கொண்டார் என்றும் ஆவணச் சான்றுகள் குறிக்கின்றன. இந்தக் கண்டுபிடிப்புக்கே சாய் லுன்னுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அவர் பணக்காரராகவும் ஆனார். ஆனால், பின்னர் அவர் அரண்மனைச் சூழ்ச்சியொன்றில் சிக்கிக் கொண்டார். அதன் விளைவாக அவருடைய செல்வாக்கு வீழ்ச்சியடைந்தது. அவதிக்குள்ளாகிய சாய் லுன், நீராடி அலங்கார ஆடைகள் அணிந்து, நஞ்சுண்டு மாண்டார் எனச் சீனச் சான்றுகள் கூறுகின்றன.

சீனாவில் இரண்டாம் நூற்றாண்டின்போது காகிதம் பெருமளவில் பயனுக்கு வந்தது. அடுத்த சில நூற்றாண்டுகளில், சீனாவிலிருந்து மற்ற ஆசிய நாடுகளுக்குக் காகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. காகிதம் தயாரிக்கும் உத்தியைச் சீனர்கள் நீண்ட காலம் இரகசியமாகவே வைத்திருந்தார்கள். ஆனால், கி.பி. 751 இல் சீனக் காகிதத் தயாரிப்பாளர்கள் சிலரை அராபியர்கள் பிடித்துச் சென்றனர். அதன் பின் சில ஆண்டுகளிலேயே சமர்கண்டிலும், பாக்தாத்திலும் காகிதம் தயாரிக்கப்படலாயிற்று. காகிதம் தயாரிக்கும் கலை படிப்படியாக அரபு உலகம் முழுவதிலும் பரவியது. ஐரோப்பியர்கள் 12ஆம் நூற்றாண்டில் இந்தக் கலையை அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். காகிதத்தின் பயன்பாடு உலகெங்கும் படிப்படியாகப் பரவியது. நவீன அச்சுக் கலையைக் கூட்டன்பர்க் கண்டுபிடித்த பின்னர், மேனாடுகளில் ஆட்டுத் தோலுக்குப் பதிலாகக் காகிதம் முக்கிய எழுது

## உலகை வியக்க வைத்தவர்கள்

பொருளாகப் பயன்படலாயிற்று. இன்று உலகம் முழுவதிலும் காகிதம் மிகப் பெருவழக்கில் பயனுக்கு வந்து விட்டது. காகிதம் இல்லாத உலகை இன்று எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. சீனாவில், சாய் லுன்னுக்கு முன்பு, பெரும்பாலான நூல்கள் மிகக் கனமாகவும், அலங்கோலமாகவும் இருந்தன. சில நூல்கள் பட்டுத் துகிலில் எழுதப்பட்டன. ஆனால், அந்த நூல்களுக்கு மிகுந்த செலவு பிடித்தது. மேனாடுகளில், காகிதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், பெரும்பாலான நூல்கள் ஆட்டுத் தோலில் அல்லது கன்றின் தோலில் எழுதப்பட்டன. இதற்கான தோல் ஒரு தனிவகை செய்முறையின்படி பக்குவப்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு, கிரேக்கர்களும், ரோமானியர்களும், எகிப்தியர்களும் கோரையின் நாணற்புல் வகையிலிருந்து தயாரிக்கப்பட்ட "பப்ரைஸ்" என்ற தாளில் நூல்களை எழுதி வந்தனர். இந்தத் தாளில் நூல்களை எழுதுவது மிகக் கடினமாக இருந்ததுடன், இதைத் தயாரிப்பதற்கு மிகுந்த செலவமாகியது. எனவே, இந்தத் தாளுக்குப் பதிலாக ஆட்டுத் தோலும், கன்றுத் தோலும், எழுது பொருளாகப் பயன்படுத்தப்பட்டன.

இன்று நூல்களும், மற்ற எழுத்துச் சுவடிகளும் மலிவாகவும், மிகப் பெருமளவிலும் தயாரிக்கப்படுகின்றன என்றால், அதற்குக் காகிதம் பயனுக்கு வந்ததே தலையாய காரணமாகும். அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப்படாதிருந்தால், காகிதத்திற்கு இன்றுள்ள அளவுக்குப் பெரும் முக்கியத்துவம் ஏற்பட்டிருக்காது என்பது உண்மைதான். ஆயினும், அச்சடிப்பதற்கு காகிதம் போன்ற மலிவான எழுதுபொருள் பெருமளவில் கிடைக்காது போயிருப்பின், அச்சு எந்திரத்திற்கு அத்துணை முக்கியத்துவம் ஏற்பட்டிருக்காது என்ற உண்மையையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

அப்படியானால், சாய் லுன், கூட்டன்பர்க் ஆகிய இருவரில் யாருக்கு முதலிடம் அளிக்க வேண்டும்? இந்த இருவருமே சரிநிகரான முக்கியத்துவமுடையவர்கள் என நான் கருதிய போதிலும், சாய் லுன்னுக்குச் சற்றே உயர்ந்த இடம் அளிக்க விரும்புகின்றேன். அதற்குக் காரணங்களும் உண்டு.

1.எழுதுபொருளாக மட்டுமன்றி, வேறு பல பயன்பாடுகளும் காகிதத்திற்கு உண்டு. உண்மையைக் கூறின், இன்று தயாரிக்கப்படும் காகிதத்தில் பெரும் பகுதி அச்சிடுதல் அல்லது வேறு நோக்கங்களுக்காவே பயன்படுத்தப்படுகிறது.

2. கூட்டன்பர்க்குக்கு முன்னர் வாழ்ந்தவர் சாய் லுன். ஏற்கனவே காகிதம் கண்டுபிடிக்கப்பட்டுப் பயனுக்கு வராமற் போயிருப்பின் கூட்டன்பர்க் அச்சுக் கலையைக் கண்டுபிடிக்க இயலாமற் போயிருக்கலாம்.

3. காகிதம், நவீன அச்சுக் கலை ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்று மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டிருக்குமானால், இயங்கும் எழுத்துரு, ஆட்டுத்தோல் ஆகிய இரண்டின் கூட்டிணைவினால் அல்லாமலும், கூட்டன்பர்க்கு நெடுங்காலத்திற்கு முன்பே அறியப்பட்டிருந்த அச்சுப்பாள அச்சுமுறை,

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி



நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.

"சட்டி சுட்டதடா கை விட்டதடா!
புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா!
..........
நாளும் நடந்து முடிஞ்ச பின்னால்
நல்லது கெட்டது புரிந்ததடா"

என்னடா கந்தசாமி இண்டைக்கு வணக்கமுங்கோவுக்கு முன்னாலேயே ரொம்ப விரக்தியில ஒரு பாட்டோட ஆரம்பிக்கிறான் எண்டு நினைச்சுப் போடாதையள். மேல படிச்ச பாட்டு மட்டுமில்லையுங்கோ. நாடு போகிற போக்கைப் பார்த்தால் உது மாதிரி இன்னும் சில பாட்டுகள் ஞாபகத்துக்கு வருகுதுங்கோ.

"என்னமோ நடக்குது உலகத்திலே..."எண்ட பாட்டும் தற்போதைய சிச்சுவேஷனுக்கு ஏத்த மாதிரித்தான் இருக்குது. தமிழீழத்துக்காகச் சண்டை போட்டு, இண்டைக்கு தண்ணிக்காகவும் சண்டைபோட வேண்டியதாப் போச்சுது. சனத்துக்குத் தண்ணி வேணுமெண்டது வாஸ்தவம் தான். ஆனால் தண்ணியைத் தடுத்துக் கொண்டு டிமாண்ட் பண்ணி இன்னொரு பகுதி மக்களிண்ட கஷ்டத்தை பேரம் பேசினதுதான் வில்லங்கம் வெளிக்கிடக் காரணமாக இருந்தது. சரி, நடந்தது என்ன எண்டதெல்லாம் பழைய கதை. இனி நடக்கப் போவதைப் பார்ப்பம். அதுக்கு முதலில அங்க என்ன நடந்து கொண்டிருக்கு எண்டதையும் பார்க்க வேணும்.

மாவிலாறு விவகாரம் மாவிலாறிலேயே இருக்காமல் மூதூருக்குள்ளயும் புகுந்ததாலை பாவம் அப்பாவி சனத்துக்குத் தான் ரொம்ப இழப்பாக இருக்கு. அதிலையும் முஸ்லிம் மக்கள் மத்தளம் மாதிரி ரெண்டு பக்கமும் அடி வேண்டிக்கொண்டு இருக்கினம். ஒரு பக்கம் புலிகள் மூதூரை தாங்கள் கைப்பற்றியிருக்கினம் எண்டினம். மறுபக்கம் அரசு சொல்லுது. இல்லை இல்லை, இன்னும் மூதூர் தங்கட கட்டுப்பாட்டுக்குள்ளதான் இருக்குது எண்டு.

மொத்தத்தில ரெண்டு தரப்பும் நல்ல பொய் சொல்லினம் எண்டு மட்டும் ஊருக்கும், உலகத்துக்கும் தெரியும். தெரிஞ்சும் தெரியாமல் இருக்கிற ஒரு விஷயம் என்ன தெரியுமோ, புலிகள் ஊருக்குள்ள வந்து ஆமிக்காரங்களை மட்டும் சுத்தம் செய்ய இல்லையுங்கோ. மூதூரில இருக்கிற வங்கிகளையும் சுத்தம் செய்திட்டினமாம். சனங்கள் பார்த்துக் கொண்டிருக்கேயே துவக்குகளோடை போய் வங்கிகளை கொள்ளையடிச்சி இருக்கினம். உதைப் பார்த்த ஒரு முஸ்லிம் நண்பர் எப்புடிச் சொன்னார் தெரியுமோ புலிகள் இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல் நடத்திச்சினம். சில முக்கியமான இடங்களில நிண்டிச்சினம். உதையெல்லாம் செய்தது அவையின்ர ஒரு குரூப். ஆனால் அவையின்ர இன்னொரு குரூப் உந்த மாதிரி கொள்ளைகளில ஈடுபட்டிச்சினம். ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு குரூப் கொண்டுவந்துதான் மூதூரில ஒரு காட்டுக் காட்டிச்சினம் எண்டு அவர் சொல்லுறாருங்கோ. எனக்கு கதையைக் கேட்டுக் கொண்டிருக்கேக்கேயே முன்னம் வழிப்பறிக் கொள்ளைக்காரங்களின்ர கதை கேட்ட ஞாபகம் வந்தது. காடுகளுக்குள்ள இருந்து ஊருக்குள் வந்து உப்பிடித்தான் கொள்ளையர் கொள்ளையடிப்பினம். அப்புடிப்போலை நவீனமாகக் கொள்ளையடிக்கப்பட்டிருக்குது. உதை விடவும் துக்கமான சம்பவங்களும் நடந்திருக்குங்கோ. உயிருக்குப் பயந்து பள்ளிவாசல்களில தஞ்சமடைஞ்சு இருந்த அப்பாவி மக்களுக்குள்ளையும் ஷெல் விழுந்து வெடிச்சிருக்குது. மூதூரிலையும், தோப்பூரிலையுமாக இரண்டு இடங்களிலையும் உது மாதிரி நடந்திருக்குது. உதில மொத்தமாக 36 பேர் உயிரிழந்ததோடை 76 பேருக்கும் அதிகமானவை காயம்பட்டிருக்கினம். அவை முஸ்லிம்கள் எண்டதாலையோ என்னவோ முஸ்லிம் எம்.பி.க்களைத் தவிர, எந்தவொரு தமிழ் எம்.பி.யும் வாய் திறந்ததாகத் தெரியவில்லை. ஈ.பி.டி.பி. கட்சி மட்டும் தன்ர கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

தண்ணி விவகாரத்தை உப்பிடி இரத்த விவகாரமாக மாற்றிப் போட்டினமே எண்டு சனம் திட்டிற திட்டுக்களை அரசும் சரி, புலிகளும் சரி, காதில வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லையுங்கோ. ரெண்டு தரப்புமே தங்களுக்கெண்டு பேச்சாளர்களை வைச்சுக் கொண்டு, அவையளில எத்தின பேர் செத்திச்சினம் எண்ட கணக்கை இவையும், இவையளில எத்தின பேர் செத்திச்சினமெண்ட கணக்கை அவையும் மாறிமாறி சொல்லிக் கொண்டு இருக்கினம். உதில சனங்கள் எத்தனை பேர் செத்திச்சினம். எத்தனை பேர் காயப்பட்டிச்சினம், சனங்களைப் பாதுகாக்க தாங்கள் என்ன விதமான ஒத்துழைப்பைச் செய்திருக்கினம் எண்டதைப் பத்தி வாய் திறக்கினமில்லை. குறைஞ்ச பச்சம் உதவி வழங்கும் நிறுவனங்கள் கூட அந்த மக்களைப் போய் சந்திச்சு அவைக்குத் தேவையான உடனடி உதவிகளைக்கூடச் செய்யமுடியாமல் ஆயுதத் தரப்புகள் தங்கட பலப் பரீட்சையில இறங்கி இருக்கினம். மக்களைப் பாதுகாக்காத யுத்தம் வரலாற்றில அவமானத்தையும், தோல்வியையும் தான் தந்திருக்குது. அதுபோலை இவைக்கும் தரும் எண்டது தானுங்கோ என்ர ஆதங்கம்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

## இந்த வாரம் உங்கள் பலன்

10.08.2006 தொடக்கம் 16.08.2006 வரை.

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், புதன், சனி, வெள்ளி. சிங்கம் - செவ்வாய். கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. சந்திரன் கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, செலவுகள் அதிகம், பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் மந்தம், செலவு அதிகம், வெளியிடப் பயணம், தேகசுகக் கஷ்டம், உயர்ந்தோர் நட்பு, உத்தியோகக் கஷ்டம், மனப்பயம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நஷ்டம், பண விரயம், கடன்படல், உறவினர் உதவி, மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் உயர்ச்சி, பெரியோர் சகாயம், வீண் குறை கேட்டல், பலவிதப்பேறு, காரியானுகூலம், குடும்ப நன்மை, உறவினர் பகை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் நன்மை, கூடுதல் பிரயாசம், செலவு மிகுதி, எதிர்பாரா பணக்கஷ்டம், வெளியார் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திய இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பேறு, மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், வெளியிடப் பயணம், கடின உழைப்பு, குடும்பச் சுமை, உத்தியோக விருத்தி, மன மகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் பேறு, உயர்ந்தோர் நட்பு, மன மகிழ்ச்சி, பிரயாண மிகுதி, குடும்பப் பாரம், செல்வதினம், உறவினர் உதவி, உத்தியோக முயற்சி, புதிய மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் நன்மை, காரியானுகூலம், தூர இடப் பயணம், மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, பலவிதப்பேறு, குடும்ப கலகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் அலைச்சல், பணச் செலவு, புதிய முயற்சி, வெளியார் நட்பு, கௌரவக்குறைவு, குடும்பப் பயம், பிள்ளைகள் தொல்லை, உத்தியோகமாற்றம், மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் மேன்மை, பெரியோர் சகாயம், தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், குடும்ப சகாயம், உத்தியோகப் பேறு, புதிய பதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் பலிதம், பொருள் வரவு, பலவித நன்மை, வெளியார் தொல்லை, தேகசுக நன்மை, குடும்பச் செலவு, மன மாற்றம், உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் பயம், வெளியார் உதவி, மனக்கஷ்டம், பொருள் விரயம், தூர இடப் பயணம், குடும்ப அலைச்சல், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவ்சாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

**தினமும்**

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

| | |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 107.9, 104.5 |
| வட மாகாணம் | 92.2 |
| கொழும்பு | 105.6 |

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும் இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது தாயக உறவுகளுக்காக செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## கிபீர்

இன்று யுத்த நடவடிக்கைகளின் போது விமானத்தாக்குதல்களில் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாகவே கிபீர் யுத்த விமானம் இடம்பெற்று விட்டது. அண்மைய நாட்களாக இலங்கையில் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் கணிசமான பங்கினை கிபீர் யுத்த விமானங்களே மேற்கொண்டன.

சிறிய ஓடு பாதையிலேயே கிளம்பிச்செல்லும் தன்மையும், உச்ச வேகம் மற்றும் மீண்டும் மீண்டும் தரையிறங்கி குண்டுகளைத் திருப்பி ஒரே இலக்கில் பல தடவைகள் தாக்குதலை நடாத்துவதற்கு தற்போது மிகச்சிறந்த யுத்த விமானமாக கிபீரே காணப்படுகின்றது.





### கிபீர் விமானத்தின் வகைகள்

கிபீர் ஜெட் விமானங்கள் 4 வகையானவை. C1, CT, TC2,TC7 இதில் TC7 வகை இன்னமும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவில்லை. C2, C7 தனி ஒரு விமானியினாலும் TC2 இரு விமானிகளினாலும் இயங்கப் படுபவை.

### முதலாவது தாக்குதல்

1977ஆம் ஆண்டு லெபனானில் இயங்கும் தீவிரவாத அமைப்புக்களின் முகாம்கள் மீதே கிபீர் யுத்த விமானங்களைக் கொண்டு இஸ்ரேல் விமானப்படை தாக்குதல்களை நடாத்தியது.

1979ஆம் ஆண்டு சிலி தேச எல்லைப் போரின் போதும் கிபீர் ஜெட் விமானங்களையே இஸ்ரேல் அரசு முழு அளவில் பயன்படுத்தியது.



(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்)


## பார்க்க மட்டும்







## ஜிம்



வெனிசுலாவைச் சேர்ந்த பெண், கொலம்பியாவில் நடந்த ஜிம்னாஸ்டிக் போட்டியில் கலந்து கொண்ட காட்சி. நீங்களும் உடலை கட்டுமஸ்தாக வைத்திருக்க விரும்பினால் ஜிம்னாஸ்டிக் செய்யலாம். அதற்காக இப்படி எட்டாக வளைய வேண்டியதில்லை.


தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

**கொவிசெத லொத்தரின் அடுத்த**
**கோடீஸ்வரரா நீங்களா ?**

**கோடீஸ்வரராகுங்கள், மென்மேலும் கொவிசெத டிக்கெட்டுகளை வாங்குங்கள்!**



# கொவிசெத

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம www.nlb.lk